# தமிழரசு

செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் வெளியீடு

ஜூன் 2009

விலை ரூ.10/-




# மூன்றாண்டுகளில் முத்தான சாதனைகள்

தொகுதி - I



புதுடெல்லியில் மாண்புமிகு இந்தியப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் சந்தித்தார். (19.5.2009)



புதுடெல்லியில் திருமதி.சோனியா காந்தி அவர்களை அவரது இல்லத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் சந்தித்தார். (19.5.2009)

# தமிழரசு

செய்தி-மக்கள்தொடர்புத் துறையின் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு 2040
வைகாசி-ஆனி
ஜூன் - 2009
மலர் : 40 இதழ் : 12

தொகுதி - I

**ஆசிரியர் குழு**

ஆசிரியர் மற்றும் வெளியிடுபவர் :
திரு. **சி.காமராஜ்**, இ.ஆ.ப.,
இயக்குநர் மற்றும்
அலுவலால் அரசு துணைச் செயலாளர்
செய்தி-மக்கள் தொடர்புத்துறை

நிருவாக ஆசிரியர்
துரை. தாமரைச்செல்வம்
துணை இயக்குநர் (வெளியீடுகள்)

முதன்மை பொறுப்பாசிரியர்
மு.ஸ்ரீநாகேஷ்
உதவி இயக்குநர்

பொறுப்பாசிரியர்களான
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள்
க. குமாரவேலு
ஆர்.சேகர்

உதவி ஆசிரியர்கள்
இரா.சுரேஷ்
வீ.இரா. நவநீதகிருஷ்ணகுமார்
இரா.இளவரசி

நிருபர்கள்
கோ. சண்முகம்
மாய குமரேசன்

இதழ் உதவியாளர்கள்
தி.பெரியார் சாக்ரடீசு
ஜெ. ஜெயசிம்ஹன்

புகைப்படக்காரர்
வி.இராதாகிருஷ்ணன்

கணினி வடிவமைப்பு
அ. மதன்,
உதவி ஒளியச்சுக்கோர்வையாளர்
ஆர். பாலாஜி
(ஒப்பந்த தொகுப்பூதிய கணினி இயக்குபவர்)

சென்னை - தமிழரசு அச்சகத்தில்
அச்சிடப்பட்டது.

தமிழரசு அலுவலகம்,
110,அண்ணாசாலை, சென்னை-600 002.
தொலைபேசி : 28520407/28520408
நிகரி : 28520407
மின் அஞ்சல் : tamilarasu@tn.gov.in
இணையதளம் : www.tn.gov.in



**படைகுடி கூழமைச்சு நட்பரண் ஆறும்**
**உடையான் அரசரு ளேறு.**

ஆற்றல்மிகு படை, அறிவார்ந்த குடி மக்கள், குறையா வளம், குறையற்ற அமைச்சு, முரிபடாத நட்பு, மோதியழிக்க முடியாத அரண் ஆகிய ஆறு சிறப்புகளும் உடையதே அரசுகளுக்கிடையே ஆண்சிங்கம் போன்ற அரசாகும்.

**கலைஞர்** திருக்குறள் உரையிலிருந்து...

1. மாண்புமிகு முதலமைச்சர்
**கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள்
பொதுத்துறை, உள்துறை, பொதுப்பணி ------------ 3-21

2. மாண்புமிகு நிதி அமைச்சர்
**பேராசிரியர் க. அன்பழகன்** அவர்கள்
நிதி, திட்டம், தமிழ்வளர்ச்சி ------------ 22-30

3. மாண்புமிகு துணை முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி, நகராட்சி நிருவாகம்
மற்றும் குடிநீர்வழங்கல், தொழில்கள் ------------ 31-50

4. மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர்
திரு. **ஆற்காடு நா. வீராசாமி** அவர்கள்
மின்சாரம், பணியாளர் மற்றும்
நிருவாகச் சீர்திருத்தம் ------------ 51-58

5. மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர்
திரு. **கோ.சி. மணி** அவர்கள்
கூட்டுறவு மற்றும் புள்ளியியல் ------------ 59-60

6. மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்
திரு. **வீரபாண்டி எஸ்.ஆறுமுகம்** அவர்கள்
வேளாண்மை, தோட்டக்கலை,
வேளாண்மைப் பொறியியல் ------------ 61-63

7. மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர்
திரு. **துரைமுருகன்** அவர்கள்
சட்டம் ------------ 64

8. மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர்
முனைவர். **க.பொன்முடி** அவர்கள்
உயர்கல்வி மற்றும் கனிமவளம் ------------ 65-68

9. மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்
திரு. **கே.என்.நேரு** அவர்கள்
போக்குவரத்து ------------ 69-70

10. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்
திரு. **எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்** அவர்கள்
மக்கள் நல்வாழ்வு ------------ 71 - 74

11. மாண்புமிகு ஊரகத்தொழில்துறை (ம)
கால்நடைப் பராமரிப்புத்துறை அமைச்சர்
திரு. **பொங்கலூர் நா.பழனிசாமி** அவர்கள்
குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் மற்றும்
கால்நடைப் பராமரிப்பு ------------ 75-80

# நுழைவாயில்



"அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந் நான்கும்
எஞ்சாமை வேந்தற் கியல்பு" – எனும்

அய்யன் திருவள்ளுவரின் அறிவு மொழிக்கேற்ப துணிவு, இரக்க சிந்தை, அறிவாற்றல், உயர்ந்த குறிக்கோளை எட்டும் முயற்சி ஆகிய பண்புகளைப்பெற்று, ஆற்றல் வாய்ந்த நிருவாகத்திறனால் அவனி புகழ ஆட்சி நடத்தும் முத்தமிழ் அறிஞர்; ஏழை எளிய மக்களுக்காக எண்ணற்ற திட்டங்களைத் தீட்டி இடைவிடாது செயல்படுத்தி வரும் மனித நேய மாண்பாளர்; மாண்புமிகு தமிழக முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்களின் அரசு கடந்த மூன்று ஆண்டுகளில் படைத்த சாதனைகளைத் தொகுத்து தமிழரசு இதழ் "மூன்றாண்டுகளில் முத்தான சாதனைகள்" எனும் மலர்த்தொகுப்பினை உங்கள் கைகளில் தவழவிட்டுள்ளது.

மத்திய அரசின் பாராட்டுகளோடும், அறிஞர் பெருமக்களின் வாழ்த்துகளோடும், மற்ற மாநில அரசுகள் பின்பற்றத்தக்க வகையில் மக்கள் நலத் திட்டங்களை நிறைவேற்றி வரும் தமிழக அரசின் பல்வேறு துறைகள் புரிந்த சாதனைகளை இத்தொகுப்பு பட்டியலிடுகிறது.

இந்திய வரலாறு இதுவரை கண்டிராத அளவுக்கு சாதனை மழை பொழியும் சரித்திர ஆட்சியில், ஏழை எளியோர், உழவர்கள், உழைப்பாளிகள், பாட்டாளிகள், படித்த இளைஞர்கள், மகளிர், முதியோர், ஊனமுற்றோர், அரவாணிகள், ஒடுக்கப்பட்டோர் உள்ளிட்ட எல்லாப் பிரிவினரும் நலத்திட்டப்பயன்களைப் பெற்று நலமுடன் வாழும் நல்லதோர் சூழலை உருவாக்கிய மாண்புமிகு முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்களின் சாதனைச் சிறப்புகளை மக்களுக்கு எடுத்துச் செல்லும் உன்னதமான ஊடகமாகத் திகழும் இந்த மலரை உங்கள் முன் படைப்பதில் பெருமை கொள்கிறோம்.

**பரிதி இளம்வழுதி**
செய்தித்துறை அமைச்சர்



# சென்னையில் மத்திய வெளியுறவுத்துறை கிளை அலுவலகம்

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்**
**கலைஞர் மு. கருணாநிதி அவர்கள்**

- ★ முந்தைய அரசு கொணர்ந்து நடைமுறைப்படுத்தி 1,70,000 அரசு ஊழியர்களைப் பணி நீக்கம் செய்திட பயன்படுத்தப்பட்ட எஸ்மா, டெஸ்மா, சட்டங்கள் ரத்து செய்யப்பட்டன.
- ★ கட்டாய மதமாற்றத் தடைச் சட்டம் ரத்து செய்யப்பட்டது.
- ★ சமூக சீர்திருத்தத் துறை மீண்டும் தனித்துறையாக உருவாக்கப்பட்டது.
- ★ 20% இட ஒதுக்கீடு கோரி, 1987–ஆம் ஆண்டு வன்னியர் சங்கத்தினர் நடத்திய போராட்டத்தில் உயிர் நீத்தவர்களின் குடும்பங்களுக்கு தலா ரூ.3 இலட்சமும், குடும்ப ஓய்வூதியமாக மாதம் ரூ.1,500/–ம் வழங்க 1998–ஆம் ஆண்டில் வழங்கிய குடும்ப ஓய்வூதியத்தை நவம்பர் 2006 முதல் மாதம் ரூ.1,500/–லிருந்து ரூ.2,000/– ஆக உயர்த்தியது. இதில் 21 குடும்பங்கள் பயன்பெறுகின்றன.
- ★ பசும்பொன் தேவர் திருமகனார் நூற்றாண்டை முன்னிட்டு, அவரது பிறந்த நாளான 30.10.2007–க்கு முன்பு, தென் மாவட்டங்களில் வாழுகின்ற சில சமூகங்களுக்கு இடையே ஏற்பட்ட குழு மோதல்களைத் (Group clashes) தொடர்ந்து பதிவு செய்யப்பட்டுள்ள வழக்குகளில் 55 வழக்குகள் அரசால் திரும்பப்பெறப்பட்டுள்ளது. மேலும் 20 வழக்குகளைத் திரும்பப்பெற நடுவண் அரசின் ஒப்புதல் கோரப்பட்டுள்ளது.




திராவிட இயக்கத் தலைவர்களான சர்.பிட்டி.தியாகராயர், டாக்டர் சி. நடேசனார், டாக்டர் டி.எம். நாயர் ஆகியோரின் நினைவு அஞ்சல் தலைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் சென்னையில் வெளியிட்டார். ( 17.09.2008)

★ சாதி மோதல்கள் தொடர்பாக பல்வேறு மாவட்டங்களில் பதிவு செய்யப்பட்ட வழக்குகளில் 9 வழக்குகளும், அரசியல் காரணங்களுக்காகப் பதிவு செய்யப்பட்டுள்ள 79 வழக்குகளும் திரும்பப் பெறப்பட்டுள்ளன.

★ விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியத்தை மாதம் ரூ.3,000–ல் இருந்து ரூ.4,000/– ஆகவும், ரூ.1,500/– ஆக இருந்த குடும்ப ஓய்வூதியத்தை ரூ.2,000/– ஆகவும் 1.5.2007 முதல் உயர்த்தப்பட்டு, 1,024 விடுதலைப் போராட்ட தியாகிகள் மற்றும் 2,251 தியாகிகளின் வாரிசுதாரர்கள் பயன்பெறுகின்றனர். 2008–2009ஆம் நிதியாண்டில் கட்டபொம்மன், மருதுபாண்டியர், முத்துராமலிங்க விசயரகுநாத சேதுபதி ஆகியோரின் வழித்தோன்றல்கள் பெற்று வந்த சிறப்பு ஓய்வூதியம் ரூ.500/–லிருந்து ரூ.1,000/– ஆக 1.12.2008 முதல் உயர்த்தப்பட்டது. இதன் மூலம், கட்டபொம்மன் வழித்தோன்றல்கள் 7 பேர், மருதுபாண்டியர் வழித்தோன்றல்கள் 132 பேர், முத்துராமலிங்க விசயரகுநாத சேதுபதியின் வழித்தோன்றல்கள் 80 பேர் பயனடைந்துள்ளனர்.

★ 19.5.2006 அன்று குறிஞ்சி மலர் சிறப்பு அஞ்சல் தலை; 10.7.2006 அன்று வேலூர் ஊரீஸ் கல்லூரி நூற்றாண்டு விழா நினைவு அஞ்சல் தலை மற்றும் வேலூர் கலகம் 1806 – 200 ஆம் ஆண்டு நினைவு அஞ்சல் தலை; 15.8.2006 அன்று ம.பொ.சி நூற்றாண்டு விழா நினைவு அஞ்சல் தலை; 4.9.2006 அன்று சென்னைப் பல்கலைக்கழகம் – 150ஆவது ஆண்டு விழா நினைவு அஞ்சல் தலை; 1.11.2006 அன்று கோவை தொழில் அதிபர் ஜி.வரதராஜ் நூற்றாண்டு விழா நினைவு அஞ்சல் தலை; 10.12.2006 அன்று தமிழ் மொழியின் புகழை முதன்முதலில் அச்சுமூலம் பரப்பிய பார்த்தலோமியோ சீகன் பால்க் நினைவு அஞ்சல் தலை; 26.1.2007 அன்று தமிழ்நாடு கிரிக்கெட் வாரியத்தின் 75 ஆம் ஆண்டு விழா நினைவு அஞ்சல் தலை; 6.4.2007 அன்று டாக்டர் அழகப்ப செட்டியார் நூற்றாண்டு விழா நினைவு அஞ்சல் தலை; 17.8.2007 அன்று பரிதிமாற் கலைஞர் நினைவு அஞ்சல் தலை ; இராமலிங்க அடிகளார் நினைவு அஞ்சல் தலை, மறைமலை அடிகளார் நினைவு அஞ்சல் தலை ; 17.9.2008 அன்று சர் பிட்டி தியாகராயர் நினைவு அஞ்சல் தலை, டாக்டர் சி.நடேசன் நினைவு அஞ்சல் தலை, டாக்டர் டி.எம்.நாயர் நினைவு அஞ்சல் தலை ஆகியவை வெளியிடப்பட்டன.

★ வெள்ளத்தில் சிக்கியவர்களைக் காப்பாற்றும் முயற்சியில் ஈடுபட்டு மரணமடைந்த, பண்டாரம் அவர்களின் தியாகத்தைப் போற்றி அவரது மனைவி திருமதி ப.இந்திராவுக்கு 26.1.2008 அன்று, பதக்கம் வழங்கியபோது, விடுத்த கோரிக்கையின் பேரில் அவருக்கு திருநெல்வேலியில் இளநிலை உதவியாளர் பணியிடம் கருணை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது.

★ ஆவடியில் இயங்கி வரும் இராணுவ மருத்துவமனையை, ஒரிஸ்ஸா மாநிலம் கோபால்பூருக்கு மாற்றுவதற்காக எடுத்த இராணுவத் துறையின் நடவடிக்கை தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

★ மத்திய அரசின் வெளியுறவுத் துறையின் கிளை அலுவலகம் 26.8.2008 முதல் சென்னையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. 17.12.2007 முதல் மதுரையிலும், 14.9.2008 முதல் கோவையிலும் கடவுச்சீட்டு அலுவலகங்கள் (**Passport Offices**) தொடங்கப்பட்டுள்ளன.

★ இராணுவம் மற்றும் எல்லைப் பாதுகாப்புப் படை வீரர்கள் போர் மற்றும் உள்நாட்டுப் பாதுகாவல்பணியில் இறந்தால் அவர்களின் குடும்பங்களுக்கு அரசு வழங்கி வந்த மானியத்தொகை ரூ .2 இலட்சம் என்பது தற்போது ரூ.5 இலட்சமாக உயர்த்தப்பட்டது. புனேயில் இருக்கும் தேசிய இராணுவ அகாடமியின் வைரவிழா சிறப்பாக நடைபெற ரூ.25 இலட்சம் நிதி வழங்கப்பட்டது.

★ பி.பார்ம்., பி.எஸ்சி. (நர்சிங்), மற்றும் பி.ப்பி.ட்டி. ஆகிய பட்டப் படிப்புகளுக்கு ஒவ்வொன்றிற்கும் ஓர் இடம் வீதம் முன்னாள் படைவீரர்களின் குழந்தைகளுக்கு இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

★ தமிழ்நாட்டைச் சார்ந்த இராணுவ வீரர்கள்/ எல்லைப் பாதுகாப்புப் படைவீரர்கள், பகைவருக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளபோது உயிரிழந்தால் அவரது குடும்பத்தினருக்கும், ஊனமுற்ற படைவீரருக்கும் 01.04.2008 முதல் வீர மரணம் அடைந்த வீரரின் குடும்பத்திற்கு ரூபாய் 5 இலட்சம். முழுவதுமாக ஊனமடைந்தவர்கள் / இரு கால்களோ, கைகளோ அல்லது இரு கண்களையும் இழந்தவர்களுக்கு ரூபாய் 2 இலட்சம். ஒரு கால், கை அல்லது ஒரு கண்ணை இழந்தவர்களுக்கு ரூபாய் ஒரு இலட்சம். துப்பாக்கி சூடு / காயம் / தீக்காயம் அடைந்தவர்களுக்கு ரூபாய் ஐம்பதாயிரம் – என நிவாரண உதவிகள் வழங்கப்படுகின்றன.

★ முன்னாள் படைவீரர்களின் சிறார்களுக்கு பொறியியல் கல்லூரிகளில் இடஒதுக்கீடு 81லிருந்து 150 ஆக உயர்த்தப்பட்டுள்ளது 8.07.2008– அன்று முன்னாள் படைவீரர்களின் சிறார்களுக்கு பொறியியல் கல்லூரிகளில் பிந்தைய நுழைவிற்கான இட ஒதுக்கீடு 8–லிருந்து 15 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. முன்னாள் படைவீரர் நலத் துறை மூலமாக 77 பேர் பல்வேறு பதவிகளில் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். 417 முன்னாள் படைவீரர்கள், 11 சார்ந்தோர்கள் 19 முன்னாள் படை அலுவலர்கள், 122 கிராம நிர்வாக அலுவலர்கள், 11 உடற்கல்வி ஆசிரியர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

★ உழவர் திருநாள், தெலுங்கு வருடப் பிறப்பு, மகாவீர் ஜெயந்தி, டாக்டர் பி.ஆர். அம்பேத்கார் பிறந்த நாள், மிலாது நபி ஆகிய முந்தைய அரசினால் நீக்கப்பட்ட அரசு விடுமுறைகள் மீண்டும் அளிக்கப்பட்டன. ஆங்கில ஏகாதிபத்திய ஆட்சியை எதிர்த்துப் போராடிய தீரன் சின்னமலை தூக்கிலிடப்பட்ட ஆடி 18–ஆம் நாள், ஈரோடு மாவட்டத்திற்கு மட்டும் உள்ளூர் விடுமுறையாக 26.7.2007 அன்றும், ஓணம் திருநாளன்று கோவை, கன்னியாகுமரி மாவட்டங்களுக்கு மட்டும் விடப்பட்ட உள்ளூர் விடுமுறை நீலகிரி மாவட்டத்திற்கும் நீட்டித்து 25.08.2006 அன்றும், சென்னை மாவட்டத்திற்கு உள்ளூர் விடுமுறை அளித்து, 27.8.2007 அன்றும் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

**இலங்கைத் தமிழர் நலன்**

★ இரு சிறப்பு முகாம்களை உள்ளடக்கிய 115 முகாம்களில் 19,705 குடும்பங்களைச் சார்ந்த 73,451 இலங்கைத் தமிழர்கள் 26 மாவட்டங்களில் தங்கவைக்கப்பட்டு அவர்களுக்கு பல்வேறு நிவாரண உதவிகள் வழங்கப்படுகின்றன.

★ இந்த அரசு ஆட்சிக்கு வந்த பின்னர் அகதிகளுக்கு வழங்கப்படும் பணக்கொடையை அதிகரிப்பது குறித்து நடுவண் அரசிடம் தொடர்ந்து வலியுறுத்தி, அதில் வெற்றிகண்டு, முந்தைய அளவை விட 100 விழுக்காடு பணக்கொடை கூடுதலாக வழங்கப்படுகிறது. இதற்காக 2007–08ஆம் ஆண்டில் ரூ.24.53 கோடி செலவழிக்கப்பட்டது. 2008–09ஆம் ஆண்டில் ரூ.26 கோடி திருத்திய நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, மார்ச் 2009 முடிய ரூ.24.57 கோடி செலவாகியுள்ளது. மானிய விலையில் அரிசி வழங்குதல் திட்டத்தின் கீழ் 2006–07ஆம் ஆண்டில் ரூ.70.5 கோடியும், 2007–08ஆம் நிதியாண்டில் ரூ.8.32 கோடியும், 2008–09ஆம் நிதியாண்டில் 31.03.2009 வரை ரூ.8.25 கோடியும் செலவிடப்பட்டுள்ளது. இலவசமாகத் துணி வகைகள் மற்றும் பாய்களை அரசு வழங்கும் வகையில் 2006–2007இல் ரூ.29 கோடியும், 2007–2008இல் ரூ.30.5 கோடியும், 2008–2009இல் ரூ.33.8 கோடியும் செலவு செய்யப்பட்டுள்ளது. உணவு தயாரிக்க சமையல் பாத்திரங்கள் இரண்டாண்டிற்கு ஒருமுறை வழங்கப்படுகின்றன. குடும்பம் ஒன்றுக்கு நிர்ணயிக்கப்பட்ட செலவினத் தொகையான ரூ.150/–, 2008–2009–ஆம் ஆண்டு முதல் ரூ.250/– ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது.

★ 2006ஆம் ஆண்டிலிருந்து ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டமானது, அகதிகள் முகாமில் தங்கியுள்ள பெண்கள் மற்றும் குழந்தைகளின் கல்வி மற்றும் ஆரோக்கியத்தை மேம்படுத்தும் நோக்குடன், 1.4.2007 முதல் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. டாக்டர். முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு உதவித் திட்டத்தின் கீழ் மகப்பேறுக்கு முன்னரும் பின்னரும் தலா மூன்று மாதங்களுக்கு ஊட்டச்சத்து உணவுக்காக மாதம் ரூ.1,000/– வீதம் வழங்கப்படும் பண உதவித் திட்டம் 1.4.2007 முதல் கருவுற்ற இலங்கை அகதிப் பெண்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் இலங்கை அகதிப் பெண்களும் 2007–08ஆம் ஆண்டில் 905 பேரும்; 2008–09ஆம் ஆண்டில் 805 பேரும் பயனடைந்துள்ளனர்.

★ 20,045 குழந்தைகள் இலவசக் கல்வித் திட்டத்தின் கீழ் பயன் பெறுகின்றனர்.

★ முகாம்களில் உள்ள வீடுகளுக்கு 24 மணி நேரம் இலவசமாக மின்சாரம் வழங்கப்படுகிறது.

★ ஈமச்சடங்கு நிதி உதவியை பெரியவர்களுக்கு ரூ.100/–லிருந்து ரூ.500/– ஆகவும் குழந்தைகளுக்கு ரூ.60/–லிருந்து ரூ.300/– ஆகவும் உயர்த்தி வழங்குகிறது.

★ 2007–08இல் பல்வேறு நிவாரண உதவிகள் வழங்கிய வகையில், ரூ.39.90 கோடியும், 2008–09இல் ரூ.44.34 கோடியும் செலவழிக்கப்பட்டுள்ளது.

★ இலங்கையில் போரினால் சொல்லொணாத் துயருற்ற இலங்கைத் தமிழ் மக்கள் குடும்பத்திற்கு உதவிகள் புரிந்திட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் "இலங்கைத் தமிழர் நிவாரண நிதி" தோற்றுவித்து, நிதி உதவி வழங்குமாறு வேண்டுகோள் விடுத்தார். அந்த வேண்டுகோளுக்கிணங்க 31.3.2009 அன்று வரை ரூ.50.84 கோடி நிதி திரட்டப்பட்டுள்ளது.

★ இலங்கையில் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்காக 80 ஆயிரம் சிப்பங்களில் ரூ.10.07 கோடி மதிப்பில் நிவாரணப் பொருட்கள் 13.11.2008 அன்று எம்.வி.காண்டி ஜோர்க் (MV Conti Jork) என்ற கப்பல் மூலமாக சென்னையிலிருந்து இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டு, பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு விநியோகிக்கப்பட்டன. கடந்த 22.4.2009 அன்று ரூ.7.24 கோடி மதிப்பில் உணவுப்பொருட்கள், துணிவகைகள் மற்றும் பாத்திரங்கள் அடங்கிய 40 ஆயிரம் சிப்பங்களும்; 9.5.2009ஆம் நாள் ரூ.7.67 கோடி மதிப்புள்ள உணவுப்பொருள்கள், துணிவகைகள் மற்றும் காயத்துக்கான முதலுதவிப் பொருட்கள் அடங்கிய 50 ஆயிரம் சிப்பங்களும் கப்பல்கள் மூலம் போரினால் பாதிக்கப்பட்ட இலங்கைத் தமிழ் மக்களுக்கு நிவாரணப் பொருட்களாக அனுப்பி வைக்கப்பட்டன.



# காவல்துறை நவீனமயம்

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
## கலைஞர் மு. கருணாநிதி அவர்கள்

★ காவல்துறையில் பணிபுரிபவர்களின் பணி நிலை, அன்னாரது கடமை, மற்றும் பொறுப்புகள், நலன் மற்றும் நவீனமயமாக்கல் ஆகிய பிரிவுகளில் ஆராய்ந்து அரசுக்குப் பரிந்துரைகள் வழங்குவதற்காக மூன்றாவது காவல் ஆணையம் 30.08.2006 அன்று அமைக்கப்பட்டு, அந்த காவல் ஆணையம் தனது முழுமையான அறிக்கையை 13.02.2008 இல் அரசுக்குச் சமர்ப்பித்தது. ஆணையத்தின் பரிந்துரைகளைப் பரிசீலித்து நடைமுறைப்படுத்த குழுவை 14.2.2008 அன்று அரசு அமைத்தது. காவல் ஆணையத்தின் பரிந்துரைகள் உயர்மட்டக் குழுவில் பரிசீலிக்கப்பட்டு இதுவரை 444 பரிந்துரைகளில் 278 பரிந்துரைகள் ஏற்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

★ 13 காவல்நிலையங்கள் புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ளன. ரூ.11,21,11,000 செலவில் 67 காவல் நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. மாநிலத்தில் இயங்கி வந்த 116 புறக்காவல்நிலையங்களில், முக்கியமான இடங்களில் செயல்பட்ட 22 புறக்காவல் நிலையங்கள் முழுக்காவல் நிலையங்களாக நிலை உயர்த்தப்பட்டன.

★ 4 நகரங்களில் புதியதாக போக்குவரத்துக் காவல் நிலையங்கள் மற்றும் தேசிய நெடுஞ்சாலைகளில் ரூ.4,69,35,000 செலவில் 20 இடங்களில் போக்குவரத்து காவல் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

★ 16 காவல்நிலையங்களில் காவலர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளன. இராமநாதபுரம் மாவட்டத்தில் முதுகுளத்தூர் மற்றும் கீழத்தூவல் காவல்நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டு காவல் ஆளிநர்களின் எண்ணிக்கை போதுமான அளவு உயர்த்தப்பட்டுள்ளது.

★ ரூ.16.52 கோடி செலவில் 955 பேர் கொண்ட (914 களப் பணியாளர்கள் மற்றும் 41 அமைச்சுப் பணியாளர்கள்) ஒரு தமிழ்நாடு சிறப்புக் காவல் அணி வேலூர் மாவட்டம் திருப்பத்தூர் வட்டம் சுந்தரம்பள்ளியில் 6.8.07 முதல் புதிதாக இயங்கி வருகிறது.





மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள்
சென்னை–மயிலாப்பூரிலுள்ள காவல்துறை தலைமை இயக்குநர் அலுவலக வளாகத்தில் நடைபெற்ற விழாவில், தடய அறிவியல் துறை இயக்ககக் கட்டடத்தைத் திறந்துவைத்தார். மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடன் உள்ளனர். (30–7–2008)

- ★ சென்னை மாநகரக் காவல் ஆணையம் பிரிக்கப்பட்டு புறநகர்ப் பகுதிகளுக்கென புதிய ஆணையரகம் 21.7.2008 அன்று அமைக்கப்பட்டுள்ளது.

- ★ காவல்துறை தலைமை இயக்குநர் அலுவலக வளாகத்தில் 1.71 இலட்சம் சதுர அடியில் புதிய இணைப்புக் கட்டடம் ரூ.24.50 கோடியில் கட்டப்படுகிறது.

- ★ சென்னை போக்குவரத்துக் காவல் அலுவலக வளாகத்தில் ரூ.25.46 கோடி செலவில் 1.40 இலட்சம் சதுர அடியில் 9 மாடிகளுடன் கூடிய சென்னை காவல் ஆணையாளர் அலுவலகத்திற்குப் புதிய அலுவலகக் கட்டடம்.

- ★ காவல்துறை நவீனமயமாக்கலின் கீழ் இதுவரை 10,88,00,000 ரூபாய் செலவில் 53 காவல் நிலையங்களுக்குக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

- ★ சேலம், திருவாரூர் மற்றும் உதகை ஆகிய 3 மாவட்டங்களுக்கு ரூ.10,94,09,000/– செலவில் மாவட்ட காவல் அலுவலகங்கள் கட்டுவதற்கு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

- ★ 25 காவல்நிலையங்களின் கட்டடங்கள் ரூ.1,15,00,000 செலவில் மேம்படுத்தி புதுப்பிக்கப்பட்டுள்ளன.

- ★ கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 1 கோடி ரூபாய் செலவில் ஆயுதப்படை வளாகம் கட்டுவதற்கும், மன்னார்குடியில் ரூ.15 இலட்சம் செலவில் ரிப்பீட்டர் ஸ்டேஷன் கட்டுவதற்கும், சென்னையில் மருதம் வளாகத்தில் 1,40,00,000 ரூபாய் செலவில் பெண்களுக்கான அதிரடி பயிற்சிக்கூடம் கட்டுவதற்கும் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

- ★ ரூ. 1,80,00,000 செலவில் சிறப்புப் புலனாய்வுப் பிரிவிற்காக பல்வேறு இடங்களில் 18 காவல்நிலையங்கள் கட்டும் பணிகள் நடைபெறுகின்றன.

- ★ லஞ்சம் மற்றும் ஊழல் தடுப்புத் துறைக்காக 5 இடங்களில் ரூ.1,02,00,00 செலவில் இணைப்பகம் கட்டுவதற்கு ஆணையிடப்பட்டுள்ளது.

- ★ குடியாத்தம், திருப்பத்தூர், ஆம்பூர், பென்னாகரம், அரூர், பொள்ளாச்சி, செய்யாறு, திருவாரூர், சமயநல்லூர் மற்றும் ஆலங்குளம் ஆகிய 10 உட்கோட்டங்களுக்கு 1,57,25,000 ரூபாய் செலவில் அலுவலகங்கள் கட்டப்படுகின்றன.

- ★ தூத்துக்குடி மாவட்டம் பேரூரணியில் அமைந்துள்ள காவலர் பயிற்சி பள்ளியில் உள்ள கட்டமைப்பு வசதிகள் 3.39 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படுகின்றன.

- ★ ரூ.38.98 இலட்சம் செலவில் கட்டப்பட்ட வடக்கு மண்டல காவல் துறைத் தலைவர் அலுவலகம் 15.3.2008 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

- ★ ரூ.200.55 கோடி செலவில் 4,615 காவலர் குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டன.

- ★ 60,95,00,000 ரூபாய் செலவில் 2,437 வாகனங்கள் வாங்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. சென்னை மாநகரக் காவல் துறைக்கு ஹூண்டாய் நிறுவனம் 100 ஹூண்டாய் அக்சண்ட் கார்களை நன்கொடையாக அளித்துள்ளது. 101 டி.வி.எஸ். அப்பாச்சி வாகனங்கள் சென்னை நகரக் காவல் பணிக்காக வழங்கப்பட்டுள்ளன. கடலோர பாதுகாப்பினை பலப்படுத்திட 14 படகுகள் 86,47,000 ரூபாய் செலவில், வாங்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. பாதுகாப்புப் பணிக்கென, 2 புல்லட்புரூப் சபாரி வாகனங்கள் 70,45,000 ரூபாய் செலவில் வாங்கப்பட்டு, பயன்பாட்டில் உள்ளன.

- ★ இரு சக்கர வாகனங்கள் ஓட்டுபவர்களும், அவற்றில் உட்கார்ந்து செல்பவர்களும் 01.06.07 முதல் சென்னை உள்ளிட்ட 6 மாநகராட்சிகளில் தலைக்கவசம் அணிந்து செல்வது கட்டாயம் என ஆணையிடப்பட்டு தலைக்கவசம் அணிவதன் அவசியம் பொதுமக்களுக்கு வலியுறுத்தப்படுகிறது.

★ காவலர்கள் முதல் ஆய்வாளர்கள் வரை இடர்படி (**Risk Allowance**) ரூ 60/– என்பது ரூ.120 ஆகவும் காவல் துறை துணைக் கண்காணிப்பாளர்கள் / காவல்துறை கூடுதல் கண்காணிப்பாளர்களுக்கு ரூ.70/– என்பது ரூ 140/– ஆகவும் உயர்த்தப்பட்டது. 2008–2009இல் ரூ.120 என்பது ரூ.180 ஆகவும், ரூ.140 என்பது ரூ.210 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

★ சென்னை மாநகரக் காவல் துறையில் குதிரைப் படைப் பிரிவைச்சேர்ந்த காவலர்களுக்கு சவாரி படியாக (**Riding Allowance**) மாதம் 200 ரூபாய் வழங்கப்படுகிறது.

★ தமிழ்நாடு சிறப்புக் காவல் படையில் பணிபுரியும் அனைத்து காவல் ஆளிநர்களுக்கும், ஆயுதப்படை மற்றும் தாலுக்கா பிரிவில் பணிபுரியும் காவல் ஆளிநர்களுக்கு உள்ளது போல் விடுப்புகாலப் பயணச்சலுகை வழங்கப்படுகிறது.

★ காவல் தொலைத்தொடர்பு தொழில்நுட்பப் பிரிவில் பணியாற்றும், தொழில்நுட்பக் காவல் உதவிஆய்வாளர்கள் மற்றும் ஆய்வாளர்களுக்கு சீருடைப்படி மாதம் ரூ. 100/– வழங்கப்படுகிறது.

★ ஆயுதப்படை, உள்ளூர் மற்றும் சிறப்புப் பிரிவுகள் காவல் பணியாளர்களுக்கு கூடுதல் நேர ஊதியமாக நாளொன்றுக்கு ரூ.150/– (விடுமுறை நாளில் காவல் பணி ஆற்றியமைக்காக) வழங்கப்படுவது போல் தமிழ்நாடு சிறப்புக் காவல் படையில் பணியாற்றுபவர்களுக்கும் (காவலர்கள் முதல் தலைமைக் காவலர்கள் வரை) கூடுதல் நேர ஊதியமாக நாளொன்றுக்கு (விடுமுறை நாட்களில் பணிபுரிபவர்களுக்கு) ரூ.150/– வழங்கி செயல்படுத்தப்பட்டு வருகிறது.

★ உடல் தகுதி தேர்வுப்படி 10 ரூபாயிலிருந்து 20 ரூபாயாகவும், 15 ரூபாயிலிருந்து 30 ரூபாயாகவும் உயர்த்தி வழங்கப்படுகிறது.

★ நீண்ட நெடுங்காலமாக பதவி உயர்வு இன்றித் தவிக்கும் காவலர்களின் குறையை நிவர்த்தி செய்யும் பொருட்டு அரசு "காலவரையறுக்கப்பட்ட பதவி உயர்வினை" அறிமுகப்படுத்தியது. அதன் அடிப்படையில், 2006ஆம் ஆண்டு முதல் 2007ஆம் ஆண்டு வரை நிலை உயர்த்தப்பட்ட பதவி உயர்வுகள் 13,462 இளநிலை மற்றும் முதுநிலை காவலர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

★ தலைமைக் காவலர் பதவியிலிருந்து உதவி ஆய்வாளராகப் பதவி உயர்வுக்கு நடைபெறும் தேர்வு முறையை ரத்து செய்து பணிமூப்பு மற்றும் பணிப் பதிவேடுகளை ஆதாரமாகக் கொண்டு இதரப் பணிகளில் பதவி உயர்வு அளிப்பதைப் போன்று, பணி மூப்பு அடிப்படையில் பதவி உயர்வு வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

★ காவலர்கள் தங்கள் குடியிருப்புப் பகுதியில் உள்ள நியாயவிலைக் கடைகள் மூலம் 50 சதவீத விலையில் பொருள்களைப் பெற்றுக் கொள்ளும் முறை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

★ அரசு ஊழியர்களுக்கான புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் காவல் பணியாளர்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டு 4 ஆண்டுத் தொகுப்பில் 2 இலட்சம் ரூபாய் வரை மருத்துவ செலவுத் தொகை பெற்றுக் கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது.

★ தலைமைக் காவலர் ஒருவர் காவல் நிலைய உதவி ஆய்வாளராகப் பதவி உயர்வு பெற வயது உச்ச வரம்பு 53 என்றும், தலைமைக் காவலர் ஒருவர் ஆயுதப்படையிலிருந்து உதவி ஆய்வாளராக பதவி உயர்வு பெற வயது உச்ச வரம்பு 55 என்றும், உதவி ஆய்வாளர் பதவியிலிருந்து காவல் நிலைய ஆய்வாளராகப் பதவி உயர்வு பெற வயது உச்சவரம்பு 55 என்றும் இருந்தது. தற்போது வயது உச்ச வரம்பு அறவே நீக்கம் செய்யப்பட்டது.

★ காவல் துறையில் வெடிகுண்டு கண்டறிதல் மற்றும் செயலிழக்கச் செய்தல் படையில் மாதாந்திர ஒப்பந்த ஊதியத்தில் நியமிக்கப்பட்ட 42 முன்னாள் இராணுவத்தினர் நிரந்தரமாகப் பணியமர்த்தப்பட்டனர்.

★ கள்ளச் சாராய ஒழிப்பில் சிறப்பான செயலை செய்யும் காவல் அதிகாரிகளுக்கு 1996–ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட உத்தமர் காந்தி காவல்துறை பதக்கம், முந்தைய ஆட்சியில் 2001 ஆம் ஆண்டில் மகாத்மா காந்தி காவல் துறை பதக்கம் எனப் பெயர் மாற்றப்பட்டது. அதனை "காந்தியடிகள் காவல் விருது" என பெயர் சூட்டி விருது தொகை ரூ. 10,000/– என்பது ரூ 20,000/– என உயர்த்தப்பட்டது.

★ காவல் துறை நாய்ப் படைப் பிரிவு, காவல் துறை புகைப்பட நிபுணர்கள் மற்றும் காவல் வானொலிப் பிரிவு தொழில்நுட்ப பணியாளர்களில் உள்ள அனைத்துத் தரப்பினருக்கும் "தொழில் நுட்பம் மற்றும் சிறப்புப் பிரிவுகளில் உன்னத பணிகளுக்கான தமிழக முதல்வரின் பதக்கங்கள்" வழங்க ஆணையிடப்பட்டது.

★ நீண்ட கால இடைவெளிக்குப் பிறகு 55ஆவது அனைத்திந்திய காவல் திறன் போட்டி (All India Police Duty Meet 2006) தமிழ்நாட்டில் கடந்த 13.01.2007 முதல் 18.01.2007 முடிய நடத்தப்பட்டது. தமிழக அரசின் 25 இலட்ச ரூபாய் நிதியுதவியுடன் நிகழ்ந்த 55ஆவது காவல் விளையாட்டுப் போட்டிகளில் 8 தங்கம், 7 வெள்ளி, 3 வெண்கலப் பதக்கங்கள் வென்ற ஒட்டுமொத்த 'சாம்பியன் பட்டத்தையும் தமிழ்நாடு காவல் துறை பெற்றது. தங்கம் வென்றோர்க்கு ரூ.50 ஆயிரம், வெள்ளி வென்றோர்க்கு ரூ.30 ஆயிரம், வெண்கலம் வென்றவர்க்கு ரூ.20 ஆயிரம் வழங்க ஆணை வழங்கப்பட்டுள்ளது.

★ அதேபோல் 2007ஆம் ஆண்டுக்கான விளையாட்டுப் போட்டிகளில் 9–ஆவது அனைத்திந்திய காவல் குழலூதும் போட்டியினை தமிழகத்தில் 01.02.2008 முதல் 04.02.2008 முடிய தமிழக அரசு ரூ.25 இலட்சம் நிதி உதவி வழங்கி நிகழ்ச்சி சிறப்பாக நடத்தப்பட்டது.

★ மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 30.08.2006 அன்று சட்டசபையில், அறிவித்தபடி, குறிப்பாணையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யும்போது, சம்பவம் எந்த காவல்நிலைய எல்லையில் நடைபெற்றது என்பதைக் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் வழக்கு பதிவு செய்யத்தக்க குற்றம் நிகழ்ந்துள்ளதாக பொதுமக்களிடமிருந்து புகார்கள் பெறப்படும்பொழுது, நிலைய அதிகாரி முதல் தகவல் அறிக்கையை அங்கேயே பதிவுசெய்து சட்டப்படியான நடவடிக்கை மேற்கொள்ளவேண்டுமென்றும், மாறாக சம்பவம் தங்கள் எல்லைக்குள் நடைபெறவில்லை என்ற காரணத்தைக் கூறி புகார் மனுவினை ஏற்றிட மறுக்கக்கூடாது என்றும், பிற காவல்நிலைய எல்லைக்குள் குற்றம் நிகழ்ந்துள்ளதாகக் குறிப்பிட்டிருந்தால் சம்பந்தப்பட்ட காவல்நிலையத்திற்கு மேல் நடவடிக்கைக்காக அந்த முதல் தகவல் அறிக்கையை மாற்றவேண்டுமென்றும், இன்னபிற அறிவுரைகளும் அனைத்து அதிகாரிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

★ சென்னை மாநகரக் காவல் துறையின் 150ஆவது ஆண்டு நிறைவு விழா 04.01.07 அன்று நிகழ்ந்ததையொட்டி மாநகர காவல்பணியில் 25.04.2006 முதல் 24.04.2007 வரையுள்ள காலத்தில் பணியாற்றியவர்களுக்கும், இக்கால வரையறையில் 6 மாத காலத்திற்குமேல் பணியாற்றி மாறுதலில் சென்ற காவலர் முதல் காவல்துறை கூடுதல் துணை ஆணையாளர் (Addl. Deputy Commr., of Police) வரையுள்ள 14,973 காவல் அதிகாரிகளுக்கும், பணியாளர்களுக்கும் "கைப்பட்டை" (Arm Patch) அணிவிக்க ஆணை வழங்கப்பட்டுள்ளது.

★ காவல் துறையை நவீனமயமாக்கும் திட்டத்தின் கீழ் கடந்த மூன்று ஆண்டுகளில் காவல் நிலையங்கள் மற்றும் காவல் அலுவலகங்கள் ரூ.2,998 இலட்சம் செலவிலும், ரூ.4,602.50 இலட்சம் செலவில் காவல்துறையினருக்கான குடியிருப்புகள் கட்டப்பட்டு வழங்கப்பட்டுள்ளன. காவல்துறையினர் சம்பவ இடங்களுக்கு விரைந்து செல்ல ஏதுவாகப் புதிய வாகனங்கள் ரூ.2,997.25 இலட்சம் செலவிலும், நவீன தொலைத் தொடர்புக் கருவிகள் ரூ.859.56 இலட்சம் செலவிலும், பயிற்சி அளிக்கும் பிரிவு மற்றும் தமிழ்நாடு காவலர் பயிற்சி மையம் இவைகளுக்குகான உபகரணங்கள் ரூ.459.22 இலட்சம் செலவிலும், குற்றவாளிகள் மற்றும் குற்றங்களை தடய அறிவியல்மூலம் நிர்ணயிக்க ஏதுவாக தடய அறிவியல் பிரிவிற்கு தேவையான உபகரணங்கள் ரூ.451.27 இலட்சம் செலவிலும், பொது உபகரணங்களான படிபெருக்கி, பேக்ஸ் உபகரணங்கள் ரூ.1,219.96 இலட்சம் செலவிலும், கணினி மற்றும் அதைச் சார்ந்த உபகரணங்கள் ரூ. 813.06 இலட்சம் செலவிலும், ஊர்க்காவல் படையினர் சிறப்புடன் பணியாற்றிட

உபகரணங்கள் ரூ.74.02 இலட்சம் செலவிலும் ஊழல்தடுப்பு மற்றும் விழிப்புத் துறையினருக்கான கட்டடங்கள் மற்றும் உபகரணங்கள் ரூ 200.70 இலட்சம் செலவிலும் வழங்கப்பட்டுள்ளன.

★ மே 2006 முதல் மார்ச் 2008 வரை பொருளாதார குற்றப் பிரிவு (சென்னை மாநகரம் மாவட்டம்) 115 வழக்குகள் (2006 – 18, 2007– 76 & 2008– 21 வழக்குகள்) பதிவு செய்துள்ளது. ஆனால் 2004 & 2005 ஆம் ஆண்டுகளில் 231 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. மேற்படி வழக்குகளில் சம்பந்தப்பட்ட 54 எதிரிகள் கைது செய்யப்பட்டுள்ளார்கள். முதலீட்டாளர்களின் பணத்தினை சரியாக திருப்பி தராத நிதி நிறுவனங்களின் மீது எடுக்கப்பட்ட கடுமையான தக்க நடவடிக்கையின் காரணமாக நிதி நிறுவனங்கள் மீதான வழக்குகள் பதிவுசெய்வது கணிசமாகக் குறைந்துள்ளது. அதேபோன்று முதலீட்டாளர்களுக்கு திருப்தி அளிக்கும் வகையில் மேற்குறிப்பிட்ட காலத்தில் மே 2006 முதல் மார்ச் 2008 வரை ரூ.279.99 கோடி பணத்தினை 3,33,687 முதலீட்டாளர்களுக்கு திரும்ப அளிக்கப்பட்டுள்ளது. ஆனால் 2004 – 2005 ஆம் ஆண்டுகளில் ரூ.44.40 கோடி பணத்தினை 11,753 முதலீட்டாளர்களுக்கு திரும்ப அளிக்கப்பட்டுள்ளது.

★ முதலீட்டாளர்களின் பணத்தினைத் திருப்பித் தராத நிதிநிறுவனங்களின் அசையும் மற்றும் அசையாச் சொத்துக்களை முடக்கம் செய்யும் அதிகாரத்தின் கீழ் ரூபாய் 15.91 கோடி மதிப்புடைய சொத்துக்கள் முடக்கம் செய்துள்ளன. மேலும் 10 வழக்குகளில் குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்று முடிவு பெற்றுள்ளது. அதிலும் குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்தில் குற்ற எண்.5/03 வழக்கில் சம்பந்தப்பட்ட 1 முதல் 4 எதிரிகளுக்கு 10 ஆண்டு கடுங்காவல் தண்டனையும், மேலும் தலா ரூபாய் ஒரு லட்சம் அபராதமும் விதிக்கப்பட்டது. தமிழகத்தில் முதன் முதலாக மதுரை மாவட்டத்தில் குற்ற எண்.12/99 வழக்கில் சம்பந்தப்பட்ட கே.எல்.கே. & கே. ஆர்.எஸ்., சிறு சேமிப்பு சீட்டு வழக்கில் மேற்படி நிதி நிறுவனங்களுக்கு சொந்தமான சொத்துக்களை 11.1.0.07 ஆம் தேதி பொது ஏலத்தில் ரூபாய் 47.28 இலட்சத்திற்கு விடப்பட்டது.

★ மதுரையில் முதலீட்டாளர்களின் வழக்கினை விசாரிக்க சிறப்பு நீதிமன்றம் நிறுவப்பட்டுள்ளது. மேலும் குறிப்பிடத்தக்க வகையில் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் பதவியை காவல் கண்காணிப்பாளர் பதவியாக உயர்த்தப்பட்டு அக்டோபர் 2007 முதல் மாவட்டங்களில் உள்ள பொருளாதார குற்றப்பிரிவு பணிகளை கண்காணித்து வரப்படுகிறது.

★ கள்ளச்சாராயம் காய்ச்சுதல், கடத்துதல், இருப்பில் வைத்திருத்தல் மற்றும் கள்ளச்சாராய விற்பனை ஆகியவற்றை ஒழித்தலை கொள்கைகளாக கொண்டுள்ள அரசின் இசைவிற்கேற்ப, செயலாற்ற பிற மாநிலங்களில் இருந்து கடத்தப்பட்டு வரும் போலியான மற்றும் ஆயத்தீர்வை செலுத்தப்படாத இந்திய தயாரிப்பு அயல்நாட்டு எரிசாராயத்தினை தடுக்கும் நோக்கில் 13.5.2006 முதல் 31.3.2009 வரை 3,50,558 வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டு 71,530 பெண்கள் உட்பட 3,28,117 நபர்கள் கைது செய்யப்பட்டார்கள். இதில் குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் 300 பெண்கள் உட்பட 1,526 பேர்கள் சிறையில் அடைக்கப்பட்டனர்.

★ 2006–ஆம் ஆண்டில் 275 நபர்களும், 2007–ஆம் ஆண்டில் 497 நபர்களும், 2008–ஆம் ஆண்டில் 627 நபர்களும், 2009–ஆம் வருட முதல் காலாண்டில் 127 நபர்களும் ஆக மொத்தம் 1,526 தீவிர மது குற்றவாளிகள் தமிழ்நாடு மதுவிலக்கு சட்டம் XIV 1982–ன் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர்.

★ 2006, 2007, 2008 மற்றும் 2009 (மார்ச் மாதம் முடிய) 23, 46, 619 மற்றும் 120 முறையே, மூன்றும் அதற்கு மேலும் தண்டனை பெற்ற நபர்களின் மீது மேற்கண்ட வழக்கு பதிவு செய்யப்பட்டதன் மூலம், அந்நபர்கள் கிராமத்திற்குள் நுழைய நீதிமன்றம் தடை விதித்துள்ளது. நீதிமன்றத்தின் இச்செயலால் மதிக்கத்தக்க விளைவு ஏற்படுத்தப்பட்டு கள்ளச்சாராயம் காய்ச்சுவது அறவே ஒழிக்கப்பட்டுள்ளது.

★ அவப்பெயரெடுத்த கரும்புள்ளி கிராமங்களின் மீது எடுக்கப்பட்ட கடுமை தணியாத, நிலையான நடவடிக்கைகள், கள்ளச்சாராயம் காயச்சுவதை அறவே ஒழித்து தமிழகத்தில் 349 ஆக இருந்த கரும்புள்ளி கிராமங்களை 185 ஆக குறைந்துள்ளது.

## தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை

★ வேலூரைத் தலைமையிடமாகக் கொண்டு, வடமேற்கு மண்டலம் 19.9.06 முதல் புதியதாக உருவாக்கப்பட்டுள்ளது.

★ தீயணைப்போர் பதவி, முதல் உதவி கோட்ட அலுவலர் பதவியில் உள்ளவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் இடர்ப்படி மாதம் ரூ.40/–லிருந்து ரூ.120/– ஆகவும், கோட்ட அலுவலர்களுக்கு மாதம் ரூ.60/–லிருந்து ரூ.140/– ஆகவும் 1.9.2006 முதல் ரூ.60,63,360/– தொடர் செலவினத்தில் உயர்த்தி வழங்கப்பட்டது.

★ தென்சென்னை கோட்டம் மற்றும் வடசென்னை கோட்டம் ஆகியவற்றினை மூன்றாகப் பிரித்து புதியதாக மத்திய சென்னை கோட்டம் ரூ 7 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டது.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், நேரு உள்விளையாட்டு அரங்கில் நடைபெற்ற விழாவில்,
காவல்துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை, சிறைத்துறை,
ஊர்க்காவல் சமூகப் பாதுகாப்புப் பயிற்சிப்படை ஆகிய துறைகளில்
தீரச்செயல், சீர்மிகுப் பணியாற்றியவர்களுக்கு இந்தியக் குடியரசுத் தலைவர் மற்றும்
தமிழ்நாடு முதலமைச்சரின் பதக்கங்களை வழங்கி, விழாப் பேருரையாற்றினார். (12–9–2008)

★ துறையின் செயல்பாட்டுத் திறமையினை உயர்த்தும் விதமாக, ஏற்கெனவே 100 அலுவலர்க்கு அனுமதிக்கப்பட்டிருந்த செல்பேசி வசதி மேலும் 304 அலுவலர்களுக்கு ரூ.18.24 இலட்சம் ஆண்டு தொடர் செலவினத்தில் தலா மாதம் ரூ 500/– வீதம் வழங்கப்பட்டுள்ளது.

★ 3 புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

★ ரூ 8.28 இலட்சம் செலவினத்தில், சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் திருச்சி ஆகிய நகரங்களில் 78 தீயணைப்பு ஊர்திகளில், ஊர்திகள் நடமாட்டத்தினையும் மற்றும் ஊர்தி இருக்கும் பகுதியினைக் காட்டும் அமைப்பு (Global Positioning System) அறிமுகப்படுத்தி நவீனப்படுத்தப்பட்டுள்ள இத்திட்டத்தின் மூலம், செயல்பாடு நேரமானது சென்னையில் 7 நிமிடத்திலிருந்து 6 நிமிடங்களாகவும், மற்ற இடங்களில் 15 நிமிடங்களிலிருந்து 13 நிமிடங்களாகவும் முன்னேற்றம் கண்டுள்ளது.

★ ரூ 24.20 இலட்சம் செலவில் விருதுநகரில் உள்ள கோட்ட அலுவலகத்திற்குபுதிய கட்டடம் கட்டப்பட்டது.

★ ஓமலூர், கம்பம், தக்கலை, திருத்துறைப்பூண்டி, ஒட்டன்சத்திரம், தண்டாரம்பட்டு, ஆரணி மற்றும் குத்தாலம் ஆகிய 8 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களுக்கு தலா ரூ 25 இலட்சம் வீதம் ரூ 2 கோடி செலவில் புதிய கட்டடம் கட்டப்பட்டுள்ளது.

★ 2008–09ஆம் ஆண்டில் விழுப்புரம் மாவட்டம் சங்கராபுரம், காஞ்சிபுரம் மாவட்டம் திருக்கழுக்குன்றம், திருவாரூர் மாவட்டம் கூத்தாநல்லூர் மற்றும் குடவாசல் மற்றும் விழுப்புரம் மாவட்டம் உளுந்தூர்பேட்டை ஆகிய 5 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களுக்கு ரூ.196.63 இலட்சம் செலவில் கட்டடங்கள் கட்டப்படுகின்றன.

★ 2008–09ஆம் ஆண்டில் ஸ்கைலிப்ட் என்றழைக்கப்படும் மூன்று நீட்டிப்பு ஏணி ஊர்திகளும், ஹஸ்மத் என்றழைக்கப்படும் அதி நவீன ஊர்தி ஒன்றும், அதிக கொள்ளளவு நீர்த்தொட்டி கொண்ட பவுசர் என்றழைக்கப்படும் ஊர்திகள் இரண்டும் மற்றும் பத்து அவசரகால மீட்பு ஊர்திகளும் ரூ 21 கோடி செலவில் வாங்கிட அனுமதிக்கப்பட்டு வாங்கப்பட்டுள்ளன.

## மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

★ அம்பிகா சுகர்ஸ், ஈ.ஐ.டி. பாரி (இந்தியா) ஆகிய இரண்டு சர்க்கரை ஆலை நிறுவனங்களுக்கு வடிசாலை உரிமங்கள் வழங்கப்பட்டு, சாராவி உற்பத்தியினைத் தொடங்கியுள்ளன.

★ எஸ்.வி.சுகர்ஸ் நிறுவனத்திற்கு, வடிசாலை நிறுவுவதற்கான சிறப்புரிமை வழங்கப்பட்டு கட்டுமானப் பணி நடைபெற்று வருகிறது.

★ நாளொன்றுக்கு 207.8 கிலோ லிட்டர் கூடுதலாக சாராவி உற்பத்தி செய்வதற்கு ஏதுவாக, 8 வடிசாலைகள் தங்களது உற்பத்தித் திறனை அதிகரித்துக் கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் அதிகமான வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

★ மேலும், 38 ஆடு 4 / ஆடு 6 உரிமங்கள் வழங்கப்பட்டு 6.77 இலட்சம் மெட்ரிக் டன் கருப்பஞ்சாற்று கசண்டிற்கு டன் ஒன்றுக்கு ரூ.300/–வீதம் நிருவாக பணிக்கட்டணமாக அரசுக்கு ரூ.20.32 கோடி வருவாய் கிடைக்கப் பெற்றுள்ளது.

★ 116 டி.எல்.2 உரிமங்கள் வழங்கப்பட்டு உரிமக்கட்டணம் ரூ.14.25 இலட்சம் மற்றும் காப்புத்தொகை ரூ.77.37 இலட்சம் மூலம் அரசுக்கு வருவாய் கிடைத்துள்ளது.

★ 1999 – ஆம் ஆண்டு அரசு நிர்ணயித்த ஆயத்தீர்வை வில்லை ஒன்றின் விற்பனை விலை 15 காசு என்பதை 17 காசுகளாக உயர்த்தி 2006–2007இல் 23.80 கோடி ரூபாயும், 17 காசு என்பதை 20 காசுகளாக உயர்த்தி 2007–2008 இல் வருவாயாக 26.90 கோடி ரூபாயும், 2008–2009 இல் 39.60 கோடி ரூபாயும் வருவாயாக ஈட்டப்பட்டுள்ளது.

★ ஆயத்தீர்வை மற்றும் விற்பனை வரி மூலம் அரசுக்கு 2006–2007–இல் ரூ.7,473.61 கோடி; 2007–2008–இல் ரூ.8,821.16 கோடி; 2008–2009–இல் ரூ.9,718.56 கோடி என மூன்றாண்டுகளில் 25,013.33 கோடி ரூபாய் வருவாய் கிடைத்துள்ளது.

★ மதுவிலக்கு முன்னாள் குற்றவாளிகளுக்கான மறுவாழ்வுத் திட்டத்தின்கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளிகளுக்கு ஆடு வளர்த்தல், கறவை மாடுகள் வளர்த்தல் மற்றும் சில்லறை விற்பனைக் கடைகள் வைத்தல் போன்ற 49 வகையான தொழில்கள் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது. 2007–2008ஆம் ஆண்டில் ரூ.2.17 கோடி செலவிடப்பட்டு 1,777 நபர்கள் பயனடைந்துள்ளனர். 2008–2009ஆம் ஆண்டில் ரூ.2.07 கோடி செலவிடப்பட்டு, 1,611 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

★ டாஸ்மாக் நிறுவனத்தில் ஒப்பந்த மற்றும் தொகுப்பூதிய அடிப்படையில் பணிபுரியும் 30,000 சில்லறை விற்பனைப் பணியாளர்கள், மேற்பார்வையாளர், விற்பனையாளர்கள், மதுக்கூட உதவியாளர்கள் ஆகியோருக்கு வழங்கப்பட்டு வந்த மாத ஊதியமான ரூ.3,000/–, ரூ.2,000/–, ரூ.1,500/– என்பதை முறையே ஜூலை 2007 முதல் ரூபாய் 500/–, ரூ.400/–, ரூ.300/– என்ற அளவில் உயர்த்தி, ரூ.3,500/–, ரூ. 2,400/–, ரூ.1,800/– ஆக வழங்கப்படுகிறது.

★ டாஸ்மாக் நிறுவனத்தின் 30 ஆயிரம் சில்லறை விற்பனை பணியாளர்களுக்கு 2005–2006ஆம் நிதி ஆண்டில் 15% போனஸ் மற்றும் கருணைத் தொகை என்ற அளவில் ரூ.11 கோடியாக இருந்தது. 2006–2007–ஆம் நிதி ஆண்டில் 20% என்ற அளவிற்கு உயர்த்தி ரூ.15.62 கோடியும், 2007–2008–ஆம் நிதி ஆண்டில் 20% என்ற அளவில் ரூ.17.33 கோடியும் வழங்கப்பட்டது.

★ மே 2006–க்கு முன்பு குறிப்பிட்ட சில்லறை விற்பனைப் பணியாளர்களுக்கு மட்டுமே ஊக்கத் தொகை வழங்கப்பட்டு வந்தது. இந்த அரசு பதவி ஏற்றபின், 2005–06ஆம் ஆண்டு முதல், அனைத்து சில்லறை விற்பனைக் கடைகள், மதுக்கூடங்கள் மற்றும் மாவட்ட மேலாளர்/ முதுநிலை மண்டல மேலாளர் மற்றும் தலைமை அலுவலகத்தில் பணிபுரியும் சில்லறை விற்பனை தொகுப்பூதிய ஊழியர்கள் அனைவருக்கும் ஊக்கத் தொகை கிடைக்கும் வண்ணம் இத்திட்டம் மாற்றி அமைக்கப்பட்டது. 2005–06ஆம் ஆண்டில் 21,000 பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட ஊக்கத் தொகையான ரூ.26.09 கோடி என்பது 2006–07ஆம் ஆண்டு 30,000 பணியாளர்களுக்கு விரிவுபடுத்தப்பட்டு, ரூ.31.54 கோடி என்ற அளவிலும், 2007–08–ஆம் ஆண்டு ரூ.26.83 கோடி என்ற அளவிலும் வழங்கப்பட்டுள்ளது.

★ பணியிலிருக்கும்போது மரணமடைந்திடும் டாஸ்மாக் பணியாளரின் குடும்பத்திற்கு வழங்கப்பட்ட குடும்ப நலத் திட்டத் தொகை ரூபாய் ஒரு இலட்சத்திலிருந்து ரூபாய் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரமாக உயர்த்தி வழங்க ஜூலை 2007–இல் ஆணையிடப் பட்டுள்ளது.

★ மேற்பார்வையாளர்கள், விற்பனையாளர்கள் மற்றும் மதுக்கூட உதவியாளர்கள் முறையே செலுத்திய காப்புத் தொகையான ரூ50,000/–, ரூ.15,000/–, ரூ.10,000/– ஆண்டொன்றுக்கு 3.5 சதவீதம் வட்டி வழங்க, ஜூலை 2007–இல் ஆணை பிறப்பிக்கப்பட்டு, இதன் மூலம் முறையே ரூ.1,750/–, ரூ.525/–மற்றும் ரூ.350/– வட்டியாக பெற்று, ஆண்டொன்றுக்கு ரூ.2.80 கோடி பெற்று பயனடைந்து வருகிறார்கள்.

★ தமிழ்நாடு மாநில வாணிபக் கழக சில்லறை விற்பனைக் கடைகளில் பணியாற்றும் பணியாளர்களுக்கு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி சட்டப்படி பிடித்தம் செய்து, வருங்கால வைப்பு நிதி ஆணையத்திடம் செலுத்தப்படும் தொகையானது ஜூலை 2007 முதல் கடை/மதுக்கூட மேற்பார்வையாளர் ரூ.360/–யை, ரூ.60/– உயர்த்தி ரூ.420/– ஆகவும், விற்பனையாளர் வைப்பு நிதி ரூ.240/–யை, ரூ.48/– உயர்த்தி ரூ.288/– ஆகவும், மதுக்கூட உதவியாளர் வைப்பு நிதி ரூ.180/–யை, ரூ.36/– உயர்த்தி ரூ.216/– ஆகவும், வழங்கப்பட்டு வருவதால், பணியாளர்கள் ஆண்டொன்றுக்கு கூடுதலாக ரூ.1.68 கோடி பெற்று பயனடைகிறார்கள்.

★ டாஸ்மாக் கடைகளின் பணி நேரம் காலை 8 மணி முதல் நள்ளிரவு 12 மணி முடிய என்று இருந்ததை குறைத்து காலை 10 மணி முதல் இரவு 11 மணி முடிய என்று மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

★ 2007 மற்றும் 2008 (இதுநாள் வரை) ஆம் ஆண்டுகளில் கள்ளச்சாராய இறப்புகள் ஏதுமில்லை.



# நதிகள் இணைப்புத் திட்டம் தொடக்கம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
**கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள்

- ★ 2006–2007இல் ரூ.665.47 கோடியும், 2007–2008இல் ரூ.679.57 கோடியும், 2008–2009இல் ரூ.738.14 கோடியும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.
- ★ விவசாயிகள் நலனுக்காக மேட்டூர் அணை 2006இல் ஜூன் 12ந்தேதி அன்றும், 2007இல் ஜூலை 18–ஆம் தேதியன்றும், பாசனத்திற்குத் திறக்கப்பட்டது. 2008ஆம் ஆண்டு மொத்தம் 216 நாட்கள் பாசனத்திற்காக திறக்கப்பட்டது.
- ★ மேலும், 2007ஆம் ஆண்டில் 52 நாட்கள் (21.07.2007 முதல் 26.07.2007 வரை, 09.08.2007 முதல் 18.08.2007 வரை, 27.08.2007 முதல் 31.08.2007 வரை, 01.09.2007, 02.09.2007, 05.09.2007 முதல் 13.09.2007 வரை, 18.09.2007 முதல் 21.09.2007 வரை, 29.09.2007, 30.09.2007, 30.10.2007 , 31.10.2007 மற்றும் 01.11.2007 முதல் 12.11.2007 வரை) மேட்டூர் அணை அதன் முழு கொள்ளளவாகிய 120 அடியை அடைந்து நிரம்பியது.
- ★ ஆனால், கடந்த ஆட்சியில் 2001ஆம் ஆண்டில் மட்டுமே, ஜூன் 12 அன்று தண்ணீர் திறந்து விடப்பட்டது. 2002 இல் 6.9.2002 அன்றும், 2003 இல் 7.10.2003 அன்றும், 2004 இல் 12.8.2004 அன்றும், 2005 இல் 4.8.2005 அன்றும் காலதாமதமாகத்தான் தண்ணீர் திறக்கப்பட்டது.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், சென்னை–ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் கட்டப்பட்டு வரும் புதிய சட்டப்பேரவை தலைமைச் செயலகக் கட்டுமானப் பணிகளைப் பார்வையிட்டு, பொதுப்பணித்துறை உயர் அலுவலர்களுடன் பணி குறித்து விவாதித்து ஆலோசனை வழங்கினார். (21–4–2009)

★ நீர்வள ஆதாரத் துறையின் வாயிலாக ஜூன் 2006இல் 10 கோடி ரூபாய் செலவில் காவிரிப் பாசனப் பகுதிகளில் 425 தூர்வாரும் பணிகள் 15 நாட்களில் முடிக்கப்பட்டன. ரூ. 20 கோடி செலவில் பழுதடைந்துள்ள பாசன கட்டுமானங்களைப் புனரமைத்து மதகுகள் சீர்படுத்தப்பட்டன.

★ சென்னை மாநகர நீர்வழித் தடங்களான கூவம், அடையாறு, பக்கிங்காம்கால்வாய், ஓட்டேரிநல்லா, விருகம்பாக்கம், வேளச்சேரி வடிகால் போன்ற நீர்வழித் தடங்களில் ரூ.4 கோடி ஒதுக்கீட்டில் தூர்வாரும் பணிகள் நிறைவேற்றப்பட்டன.

★ விருதுநகர் மாவட்டம், சாத்தூர் வட்டம், இருக்கன்குடி அருகில் வைப்பாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் 74 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு 4,214 ஹெக்டேர் பாசன வசதி பெற்றுள்ளது.

★ ஈரோடு மாவட்டம், நல்லதங்காள் ஓடையின் குறுக்கே 42.70 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நீர்த்தேக்கம் அமைக்கப்பட்டு 1,920 ஹெக்டேர் பாசன வசதி பெற்றுள்ளது.

★ திருவண்ணாமலை மாவட்டம், செய்யாற்றின் குறுக்கே குப்பநத்தம் நீர்த்தேக்கம் 41.67 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு 3,108 ஹெக்டேர் பாசன வசதி பெற்றுள்ளது.

★ திண்டுக்கல் மாவட்டத்தில் நங்காஞ்சியார் நீர்த்தேக்கம் 41.67 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு 2,554 ஹெக்டேர் பாசன வசதி பெற்றுள்ளது.

★ திண்டுக்கல் மாவட்டம், நாயோடையின் குறுக்கே கண்மாய் 7.20 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டது.

★ இராமக்கால் ஓடை மற்றும் ஆணைவிழுந்தான் ஓடையின் குறுக்கே கண்மாய் 5.65 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டது.

★ திண்டுக்கல் மாவட்டம் சிறுமலையாற்றின் குறுக்கே 8.87 கோடி ரூபாய் செலவில் கண்மாய்கள் அமைக்கப்பட்டு 383 ஹெக்டேர் பாசன வசதி பெற்றுள்ளது.

★ தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டத்தில் 18 ஆம் கால்வாய் 28.60 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு 534 ஹெக்டேர் பாசன வசதி பெற்றுள்ளது.

★ கிருஷ்ணகிரி மாவட்டம், படதலேவ் கண்மாய் முதல் வெண்ணாம் பள்ளி கண்மாய் வரை 13.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வழங்கு கால்வாய் அமைக்கப்பட்டு 1,149 ஹெக்டேர் பாசன வசதி பெற்றுள்ளது.

★ தூத்துக்குடி மாவட்டம், தெரேசாபுரம் கிராமத்தில் இரண்டு தூண்டில் வளைவுகள் 7 கோடியே 10 இலட்சம் ரூபாய் மதிப்பில் அமைக்கப்பட்டுள்ளது.

★ திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் தொகுதி இடிந்தகரை கிராமத்தில் தூண்டில் வளைவுகள் 6 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பில் அமைக்கப்பட்டுள்ளது.

★ காஞ்சிபுரம் மாவட்டம், புக்கத்துரை ஓடையின் குறுக்கே தடுப்பணை 45 இலட்சம் ரூபாய் மதிப்பில் கட்டப்பட்டு 80.931 ஹெக்டேர் பாசன வசதி பெற்றுள்ளது.

★ விழுப்புரம் மாவட்டம், கரடிசித்தூரில் முக்தா நதியின் குறுக்கே அணைக்கட்டு 26 இலட்சம் ரூபாய் மதிப்பில் கட்டப்பட்டு 18.656 ஹெக்டேர் பாசன வசதி பெற்றுள்ளது.

★ சிவகங்கை மாவட்டம், அம்பலத்தாடி, மாங்குடி ஆகிய கிராமங்களுக்கு பாசனம் அளிக்க கிருதமால் ஆற்றின் குறுக்கே 41 இலட்சம் ரூபாய் மதிப்பில் பகிர்மான சுவர் கட்ட ப்பட்டு 214.775 ஹெக்டேர் பாசன வசதி பெற்றுள்ளது.

★ தஞ்சாவூர் மாவட்டம், ரெகுநாத காவேரி வாய்க்காலுக்கு நீர் வழங்க 1.75 கோடி ரூபாய் மதிப்பில் வெண்ணாற்றின் குறுக்கே தடுப்புச் சுவர் கட்டப்பட்டு 2,021.854 ஹெக்டேர் பாசன வசதி பெற்றுள்ளது.

★ சாத்தனூர், கிருஷ்ணகிரி, பவானிசாகர், மேட்டூர் மற்றும் கெலவரப்பள்ளி அணைக்கட்டுப் பகுதிகளில் பூங்காக்கள் 2.50 கோடி ரூபாய் மதிப்பில் நவீன வசதிகளுடன் மேம்படுத்தப்பட்டுள்ளது.

★ கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் தாலுகா, இராஜாக்கமங்கலம் துறையில் 141.82 இலட்சம் ரூபாய் மதிப்பில் 1,100 மீட்டர் நீளத்திற்கு கடலரிப்புத் தடுப்புச் சுவர் கட்டப்பட்டுள்ளது.

★ கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் தாலுகா, வாணியக்குடியில் 33.02 இலட்சம் ரூபாய் மதிப்பில் 250 மீட்டர் நீளத்திற்கு கடலரிப்புத் தடுப்புச் சுவர் கட்டப்பட்டுள்ளது.

★ திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டத்தில், திருவிடைமருதூர் அருகில் கடானா ஆறு, தாமிரபரணி ஆற்றுடன் சேருமிடத்தில் 49 இலட்சம் ரூபாய் மதிப்பில் வெள்ளத் தடுப்புச் சுவர் அமைக்கப்பட்டுள்ளது.

★ வேலூர் மாவட்டத்தில் உள்ள இராஜாத்தோப்பு கானாறு நீர்த்தேக்கத்தில் மோர்தானா நீர்த்தேக்கத் திட்டத்தின் கால்வாய் மற்றும் கண்மாய் 3.34 கோடி ரூபாய் மதிப்பிற்கு மேம்படுத்தப்பட்டுள்ளது.

★ காவிரிப்படுகை மாவட்டங்களிலுள்ள சிற்றாறுகள் வாய்க்கால்கள் ரூ.10 கோடி செலவில் தூர்வாரப்பட்டன.

★ செயற்கை முறையில் தடுப்பணை மூலம் நிலத்தடிநீர் செறிவூட்டுதலுக்கான பெருந்திட்டம் 550.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயலாக்கப்பட்டு நீர்வளத் துறைக்கு 103 பணிகள் தெரிவு செய்யப்பட்டு 78 பணிகள் முடிவடைந்துள்ளன.

★ வேலூர் மாவட்டம், கழிஞ்சூர் ஆற்றின் கால்வாய் 1.60 கோடி ரூபாய் மதிப்பிற்கு சீரமைத்து புனரமைக்கப்பட்டு 18.20 ஹெக்டேர் பாசன வசதி பெற்றுள்ளது.

★ கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் மற்றும் மாத்தூர் ஆற்றில் மார்கண்டேயா நதியின் குறுக்கே உள்ள 15 அணைக்கட்டுகள் 0.75 கோடி ரூபாய் மதிப்பிற்கு புனரமைக்கப்பட்டு 228.75 ஹெக்டேர் பாசன வசதி பெற்றுள்ளது.

★ திண்டுக்கல் மாவட்டம், சிந்தாலங்குண்டு கிராமத்தில் உள்ள தாமரைக்குளம் ஏரி, மற்றும் வழங்கு கால்வாய் 0.67 கோடி ரூபாய் மதிப்பிற்கு புனரமைக்கப்பட்டு 43.38 ஹெக்டேர் பாசன வசதி பெற்றுள்ளது.

★ திண்டுக்கல் மாவட்டம், கசவானம்பட்டி மற்றும் பழைய கன்னிவாடி கிராமத்தில் உள்ள கதிரயான்குளம் வழங்கு கால்வாய் 0.75 கோடி ரூபாய் மதிப்பிற்கு புனரமைக்கப்பட்டு 110.29 ஹெக்டேர் பாசன வசதி பெற்றுள்ளது.

★ விருதுநகர் மாவட்டத்தில் உள்ள சென்னம்பட்டி அணைக்கட்டின் வலது புற முதன்மைக் கால்வாய் 0.85 கோடி ரூபாய் மதிப்பிற்கு புனரமைக்கப்பட்டு 106.75 ஹெக்டேர் பாசன வசதி பெற்றுள்ளது.

★ வேலூர் மாவட்டம், கணியம்பாடி வட்டத்தில் உள்ள ஏரிகள் 1.00 கோடி ரூபாய் மதிப்பில் புனரமைக்கப்பட்டு 140 ஹெக்டேர் பாசன வசதி பெற்றுள்ளது.

★ திண்டுக்கல் மாவட்டம், சந்தானவர்த்தினி ஆற்றில் உள்ள அணைக்கட்டு மற்றும் வழங்கு கால்வாய் 3.25 கோடி ரூபாய் மதிப்பில் புனரமைக்கப்பட்டு 278.03 ஹெக்டேர் பாசன வசதி பெற்றுள்ளது.

★ கிருஷ்ணகிரி மாவட்டம், சின்னாறு ஆற்றின் குறுக்கே உள்ள 6 அணைக்கட்டுகள் 1.23 கோடி ரூபாய் மதிப்பில் புனரமைக்கப்பட்டு 139.19 ஹெக்டேர் பாசன வசதி பெற்றுள்ளது.

★ வேலூர் மாவட்டம், வேலக்கால்நத்தம் கிராமத்தில் கொடார் நீர்த்தேக்கத்தை 0.50 கோடி ரூபாய் மதிப்பில் புனரமைக்கப்பட்டு 56.265 ஹெக்டேர் பாசன வசதி பெற்றுள்ளது.

★ தருமபுரி மாவட்டம், பென்னாகரம் வட்டத்தில் 3 அணைக்கட்டுகளைப் புனரமைத்து மேம்பாடு செய்யும் பணிகள் 0.50 கோடி ரூபாய் மதிப்பிற்குப் புனரமைக்கப்பட்டு 68.04 ஹெக்டேர் பாசன வசதி பெற்றுள்ளது.

★ 13.05.2006 முதல் இதுவரை 60 இலட்சத்து 24 ஆயிரத்து 392 லாரி லோடுகள் மணல் விற்பனை செய்யப்பட்டு அரசுக்கு ரூ.374.64 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

★ உலக வங்கி நிதியுதவியுடன் ரூ.2,547 கோடி, மதிப்பீட்டில் நீர்வள நிலவளத் திட்டம் இந்த அரசினால் நிறைவேற்றப்பட்டு வருகிறது. இதில் ரூ.1,570 கோடி செலவில் நீர்வள ஆதாரத் துறையின் மூலம் தமிழ்நாட்டில்

உள்ள பழுதடைந்த ஏரிகள் அணைக்கட்டுகள் மற்றும் பாசனக் கால்வாய்களை புனரமைக்கத் திட்டமிடப் பட்டுள்ளது. இத்திட்டமானது மூன்று கட்டமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

★ முதலாம் ஆண்டில் 9 உபவடிநிலங்களிலுள்ள 879 ஏரிகள் 124 அணைக்கட்டுகள் மற்றும் 624.32 கி.மீ. கால்வாய்களில் பணிகள் முடியும் தருவாயில் உள்ளன.

★ வேலூர் மாவட்டம், மலட்டாறு ஆற்றின் குறுக்கே பத்தலப்பள்ளி நீர்த்தேக்கம் அமைக்கும் பணிக்கு 29.55 கோடி ரூபாய் மதிப்பிலும், கன்னியாகுமரி மாவட்டத்தில் மாம்பழத்துறை ஆற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைக்கும் பணி 14.80 கோடி ரூபாய் மதிப்பிலும், தர்மபுரி மாவட்டம், மத்தலப்பள்ளம் ஆற்றின் குறுக்கே கண்மாய் அமைக்கும் பணி 14.15 கோடி ரூபாய் மதிப்பிலும், மதுரை மாவட்டம், உசிலம்பட்டி வட்டம் 58 கிராமங்களுக்கு பாசன வசதி அமைத்து தரும் திட்டம் 74.60 கோடி ரூபாய் மதிப்பிலும், மதுரை மாவட்டம், பேரையூர் வட்டம் ஐயனார் கோயில் ஓடையின் குறுக்கே ஒரு கண்மாய் அமைக்கும் பணி 7.50 கோடி ரூபாய் மதிப்பிலும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. உசிலம்பட்டி வட்டம் தோடப்பநாயக்கனூர் கிராமத்தில் அசுவமாநதியின் குறுக்கே ஒரு கண்மாய் அமைக்கும் பணி 5.60 கோடி ரூபாய் மதிப்பில் மேற்கொள்ளப்பட்டு பணிகள் முடியும் தருவாயில் உள்ளன.

★ திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் வட்டம், அஞ்சுகுளிபட்டி கிராமத்தில் சங்குலியான் கோயில் ஓடை மற்றும் சின்னாத்து ஓடையின் குறுக்கே ஒரு புதிய கண்மாய் அமைக்கும் பணி 4.20 கோடி ரூபாய் மதிப்பிலும், வேலூர் மாவட்டம், கவசம்பட்டு கிராமம் அருகில் பாலாற்றின் குறுக்கே படுகை அணை, தடுப்புச் சுவர் கட்டுதல் மற்றும் தற்போதைய கொத்தார் ஆற்றினை மீண்டும் ஒழுங்குபடுத்திட நபார்டு வங்கியின் ஒப்புதலை எதிர்நோக்கி 6.50 கோடி ரூபாய் மதிப்பிலும், வேலூர் மாவட்டம், குடியாத்தம் வட்டத்தில் சித்தாத்தூர் அருகில் கௌண்டன்யா நதியின் குறுக்கே அணை கட்டுதல் மற்றும் தற்போதைய அணையின் கீழே தடுப்புச் சுவர்கட்டிட நபார்டு வங்கியின் ஒப்புதலை எதிர்நோக்கி 4.50 கோடி ரூபாய் மதிப்பிலும், தருமபுரி மாவட்டம் தொட்லாடம்பட்டி ஏரியில் இருந்து பாப்பாரப்பட்டி ஏரிக்கும், பாலக்கோடு மற்றும் பெண்ணாகரம் வட்டத்தில் தாழ்வான பகுதியில் உள்ள 15 ஏரிகளுக்கும் நீர் வழங்குவதற்கு எல்.எஸ். 5,690 மீட்டரில் ஜெர்தலாவ் கால்வாயில் இருந்து வாய்க்கால் தோண்டிட நபார்டு வங்கியின் ஒப்புதலை எதிர்நோக்கி 6.29 கோடி ரூபாய் மதிப்பிலும், இராமநாதபுரம் மாவட்டம், ஆர்.எஸ். மங்கலம் பெரியகுளத்தை புதுப்பிக்க 6.33 கோடி ரூபாய் மதிப்பிலும், திருச்சி மாவட்டம், ருத்திராட்ச கோம்பையாற்றில் ரெட்டியாப்பட்டி முதல் கரிகாலி–உத்தன்டம்பட்டி வரையுள்ள தொடர் அணைக்கட்டுகளின் வரத்துக் கால்வாய்களைப் புனரமைக்க 2.41 கோடி ரூபாய் மதிப்பிலும், வேலூர் மாவட்டம், காட்பாடி வட்டம், மேல்பாடி கிராமத்தில் பொன்னை ஆற்றின் குறுக்கே தரைப்பாலம் கட்ட 1.50 கோடி ரூபாய் மதிப்பிலும், கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள புத்தன் அணையினை 1.50 கோடி ரூபாய் மதிப்பில் பழுதுபார்க்கும் பணியும் நடைபெற்று வருகின்றன.

★ காவிரி டெல்டா மாவட்டங்கள் மற்றும் காவிரி நதி நீர்வரத்து மாவட்டங்களில் பழுதடைந்துள்ள கட்டுமானங்களைப் புரைமைக்கும் திட்டத்தில் திருச்சி மண்டலத்தில் 29.7805 கோடி ரூபாய் மதிப்பிலும் சென்னை மண்டலத்தில் 0.50 கோடி ரூபாய் மதிப்பிலும் பணிகள் முடியும் தருவாயில் உள்ளன.

★ கரூர், திருச்சி, அரியலூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களில் காவிரி மற்றும் கொள்ளிடம் ஆறுகளில் நிரந்தர வெள்ளத் தடுப்புப் பணிகளுக்காக 253.145 கோடி ரூபாய் மதிப்பிற்கு 49 பணிகளுக்கு ஆணை வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

★ மதுரை மாவட்டத்தில் செல்லூர் ஏரி மற்றும் திருப்பாலை ஏரி முதல் வண்டியூர் ஏரி வரை உள்ள சாத்தையார் ஓடை ஆகியவற்றிற்கு நிரந்தர வெள்ளத் தடுப்பிற்கான புனரமைப்புப் பணிகள் 12.90 கோடி ரூபாய் மதிப்பிலும், சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை வட்டத்தில், பொதுப்பணித்துறைக்கு சொந்தமான 27 கண்மாய்கள் புனரமைப்புப்பணிகள் 5.58 கோடி ரூபாய் மதிப்பிலும், தஞ்சாவூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் நெடுகை

0.75 கி.மீ முதல் 58.670 கி.மீ வரையிலான கல்லணை கால்வாயினைப் புனரமைக்கவும், தஞ்சாவூர் மாவட்டம் கள்ளப்பெரம்பூர் ஏரியினை நவீனப்படுத்துவதற்கு 119.67 கோடி ரூபாய் மதிப்பிலும், தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு மற்றும் பட்டுக்கோட்டை தாலுக்காவில் கல்லணை கால்வாய் நெடுக்கை 58 .67 கி.மீ முதல் 92.20 கி.மீ வரை புனரமைப்பதற்கு 26.06 கோடி ரூபாய் மதிப்பிலும், தமிழக சட்டமன்ற உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட 365 ஏரிகளைத் தூர்வாரி சீரமைத்து மேம்படுத்தும் பணி 34.81 கோடி ரூபாய் மதிப்பில் மேற்கொள்ளப்பட்டு 364 ஏரிகளில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 1 ஏரியில் பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளது.

★ நீர்வள ஆதாரத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள ஏரிகள் மற்றும் அவைகளைச் சார்ந்த பகுதிகளைப் பாதுகாத்திட “தமிழ்நாடு ஏரிகள் பாதுகாப்பு மற்றும் ஆக்கிரமிப்பு அகற்றுதல் சட்டம் 2007”–1.10.2007 முதல் அமலுக்கு வந்துள்ளது.

★ இச்சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு ஏதுவாக இதுவரை 1,943 ஏரிகளில் ஆக்கிரமிப்புகள் முழுவதுமாக அகற்றப்பட்டு எல்லைகள் முழுவதுமாக மீட்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 4,116 ஏரிகளில் நில அளவை செய்யப்பட்டு 2,923 ஏரிகளில் எல்லை கற்கள் நடப்பட்டுள்ளன.

★ செயற்கை முறையில் நிலத்தடி நீர் செறிவூட்டுதலுக்கான பெருந்திட்டம் 550 கோடி ரூபாய் மதிப்பில் மேற்கொள்ளப்பட்டு செயலாக்கத்தில் உள்ளது.

★ திறந்தவெளிக் கிணறுகள் மூலம் நிலத்தடி நீர் செயற்கை முறை நீர்ச் செறிவுத் திட்டம் மத்திய அரசின் ஒப்புதலுடன் நபார்டு வங்கியின் நிதியுதவியுடன் மத்திய நிலத்தடி நீர் வாரியத்துடன் இணைந்து 509 கோடி ரூபாய் மதிப்பிற்கு 232 அதிநுகர்வு மற்றும் அபாயகர ஒன்றியங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. ரூ.4,000 மானியத் தொகையில் ஒரு எளிதான கட்டுமானப் பணியினை பயனாளியின் கிணற்றின் அருகே கட்ட ஏதுவாக பயனாளிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாக மானியத் தொகை செலுத்தப்படுகிறது. இத்திட்டத்தில் 17.4.09 வரை 9,411 செயற்கை நீர் செறிவூட்டும் கட்டமைப்புகள் அமைக்கப்பட்டுள்ளன.

★ காவிரி – அக்னியாறு – மணிமுத்தாறு – வைகை – குண்டாறு ஆகியவற்றினை இணைப்பதில் முதற்கட்டமாக மத்திய அரசின் விரைவுபடுத்தப்பட்ட பாசனப்பயன்கள் திட்டத்தின் நிதியுதவிகளை எதிர்நோக்கி காவிரி நதியின் குறுக்கே கரூர் மாவட்டத்தில் கட்டளை எனும் இடத்தில் 189 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கதவணை ஒன்று அமைப்பதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு பணிகள் துவங்கப்பட்டுள்ளன.

★ தாமிரபரணி–கருமேனியாறு–நம்பியாறு இணைப்புத் திட்டத்திற்கு ரூ.369 கோடிக்கு நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டு, பணிகள் துவங்கப்பட்டுள்ளன.

★ மேலும் பெண்ணையாற்றுடன் செய்யாற்றை இணைத்து நந்தன் கால்வாய் ஆயக்கட்டு பயன்பெறும் வகையில் 174 கோடி ரூபாய் மதிப்பிற்கு திட்ட அறிக்கையும் விரைவுபடுத்தப்பட்ட பாசன பயன்திட்டத்தின் கீழ் நிதி உதவி கோரி மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இந்த மூன்று திட்டங்களும் மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளது.

★ தேனி, வேலூர், ஆசாரிபள்ளம், தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மருத்துவமனைகளில் 200 கோடி ரூபாய் செலவில் புதிய கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில் ரூ.5 கோடி செலவில் நிருவாகக் கட்டடம், விரிவுரைக் கூடம், நூலகக் கட்டடம் கட்டப்பட்டுள்ளன. விழுப்புரத்தில் புதிய மருத்துவக் கல்லூரி கட்டடங்கள் (கட்டம்–1) ரூ.99.71 கோடி மதிப்பீட்டிலும்; திருவாரூரில் (கட்டம்–1) புதிய மருத்துவக் கல்லூரி கட்டடங்கள் ரூ.42.77 கோடி மதிப்பீட்டிலும், தருமபுரியில் புதிய மருத்துவக்கல்லூரி கட்டடங்கள் ரூ.47.58 கோடி மதிப்பீட்டிலும், கட்டடங்கள் கட்டப்படுகின்றன. சிவகங்கையில் ரூ. 97 கோடி மதிப்பில் புதிய மருத்துவக் கல்லூரி கட்டடமும், பெரம்பலூரில் ரூ 10 கோடி மதிப்பில் புதிய மருத்துவக் கல்லூரி கட்டடமும்,

சென்னை பல் மருத்துவக் கல்லூரிக்கு ரூ.13.66 கோடி செலவில் கூடுதல் கட்டடமும், கன்னியாகுமரியில், ரூ.2.73 கோடி மதிப்பில், பேராசிரியர், உதவி பேராசிரியர் மற்றும் வகுப்பு–4 பணியாளர்கள் குடியிருப்புகளும், சென்னை, கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரிக்கான 150 பட்டப் படிப்பு மாணவர்களுக்கான தங்கும் விடுதி ரூ.3.00 கோடி மதிப்பீட்டிலும், திருச்சி, கி.ஆ.பெ. விசுவநாதம் மருத்துவக் கல்லூரியில், ரூ.2.89 கோடி மதிப்பீட்டில் பட்ட மேற்படிப்பு மாணவர்களுக்கான தங்கும் விடுதிக் கட்டடமும், சென்னை, அண்ணா மருத்துவமனை (இந்திய மருத்துவம்) வளாகத்தில் ரூ.1.89 கோடி மதிப்பில் உள்ளுறை பயிற்சி மருத்துவர்களுக்கான குடியிருப்புகளும், சென்னை, ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி வளாகத்தில், ரூ.14.75 கோடி செலவில் 250 பட்டப் படிப்பு மாணவர்களுக்கும், 250 பட்ட மேற்படிப்பு மாணவர்களுக்கும் விடுதிகள் கட்டும் பணிகளும், மதுரை இராஜாஜி அரசு மருத்துவமனை விரிவுபடுத்தும் பணிகள் ரூ.22.06 கோடி செலவிலும், சென்னையில் குழந்தைகள் நல மையம், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான மருத்துவமனைக்கு ரூ.13.83 கோடி செலவில் கூடுதல் கட்டடமும், சென்னை, இராயப்பேட்டை அரசு மருத்துவமனைக்கு ரூ.9.88 கோடி மதிப்பில் கூடுதல் கட்டடமும், திருச்சி, மதுரை மற்றும் சென்னை கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரிகளுக்கு தங்கும் விடுதிகள் ரூ.8.93 கோடி மதிப்பீட்டிலும், செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரியில் தங்கும் விடுதி ரூ.1.14 கோடி செலவிலும், செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரியில் கூடுதல் கட்டடங்கள் ரூ 16.50 கோடி செலவிலும், தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் கூடுதல் கட்டடங்கள் ரூ. 22.75 கோடி செலவிலும், உதகமண்டலத்தில் செவிலியர் பள்ளிக் கட்டடம் 1 கோடி ரூபாய் செலவிலும், கோயம்புத்தூரில் செவிலியர் பள்ளிக் கட்டடம் கட்ட 1 கோடி ரூபாய் செலவிலும், மோகன் குமாரமங்கலம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் கூடுதல் கட்டடம் ரூ 14.66 கோடி செலவிலும், சென்னை, எழும்பூர் அரசினர் மகப்பேறு மருத்துவமனையில் கூடுதல் கட்டடங்கள் ரூ. 56.32 கோடி செலவிலும், சென்னை, கஸ்தூரிபா காந்தி அரசினர் மகப்பேறு மருத்துவமனையில் கூடுதல் கட்டடங்கள் ரூ.16.65 கோடி செலவிலும், சென்னை, எழும்பூர் அரசினர் மகப்பேறு மருத்துவமனையில், சுகாதார மற்றும் குடும்ப நல பயிற்சி மையக் கட்டடம் ரூ 6.03 கோடி செலவிலும், சுகாதார அமைப்புத் திட்டத்தின்கீழ், 30 மாவட்டங்களில், 263 அரசு மருத்துவமனைகளுக்கு, கூடுதல் கட்டடங்கள் ரூ.252.76 கோடி மதிப்பிலும் கட்டும் பணிகள் நடைபெறுகின்றன.

★ தாம்பரம், பெரம்பலூரில் ரூ 11.57 கோடி மதிப்பில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகக் கட்டடங்கள் மற்றும் நீதிபதி குடியிருப்புகளும், கொடைக்கானலில் (கட்டம்–1) ரூ.2.27 கோடி மதிப்பில் மாவட்ட நீதிமன்றக் கட்டடங்கள் மற்றும் நீதிபதி குடியிருப்புகளும் கட்டப்பட்டுள்ளன. வேடசந்தூரில் மாவட்ட நீதிமன்றக் கட்டடங்கள், முக்கிய விருந்தினர் தங்கும் விடுதி மற்றும் குடியிருப்புகள் ரூ. 2.25 கோடி செலவில் கட்டும் பணி முடியும் தருவாயில் உள்ளது. வேலூர் மாவட்டம், திருப்பத்தூரில் ரூ. 4.97 கோடி மதிப்பீட்டிலும், தேனி மாவட்டம், தேனியில் ரூ.3.57 கோடி மதிப்பீட்டிலும் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகக் கட்டடங்கள் மற்றும் நீதிபதி குடியிருப்புகள் கட்டவும், 34 இலட்சம் ரூபாய் செலவில் இராமநாதபுரம் பெருந்திட்ட வளாகத்தில், முதன்மை மாவட்ட நீதிபதிகளுக்கான குடியிருப்பு கட்டும் பணியும் நடைபெற்று வருகிறது. குடியாத்தம் மற்றும் ஆரணியில் ரூ.8 கோடியே 37 இலட்ச ரூபாய் செலவில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடங்கள் கட்டும் பணி தொடங்கப்பட்டுள்ளது. நாமக்கல், கரூர், அருப்புக்கோட்டை, சிவகங்கை, ஈரோடு, அறந்தாங்கி, பூவிருந்தவல்லி, பரமக்குடி, கடலூர், கும்பகோணம், ஆலந்தூர் என மொத்தம் 11 இடங்களில் ரூ.72.97 கோடி செலவில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகக் கட்டடங்கள் மற்றும் நீதிபதி குடியிருப்புகள் கட்ட ஆணையிடப்பட்டு, நாமக்கல், கரூர், பூவிருந்தவல்லி மற்றும் கடலூர் ஆகிய இடங்களில் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

★ இராமநாதபுரம் மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் புதிய சிறைக் கட்டடங்கள், திருச்சியில் பெண்களுக்கான புதிய சிறைக் கட்டடங்கள், துணை சிறைக் கட்டடங்களில் சமையலறையை நவீனப்படுத்துதல், திருச்சி, மதுரை, கோவை மத்திய சிறைச் சாலைகளில் ஊழியர் குடியிருப்புகள் ஆகியவை கட்டும் பணிகள் ரூ.11.23 கோடி செலவில் நடைபெற்று வருகின்றன. இவற்றுள் விருதுநகர் சிறைக் கட்டடப் பணிகள் முடிவடைந்துள்ளன.

★ சிறை நிருவாக சீர்திருத்த ஆண்டுச் செயல்திட்டத்திற்கு ரூ.5.52 கோடி அனுமதிக்கப்பட்டு, ஆத்தூர், கோபி, நாகை, சார்நிலைச் சிறைகளை மாவட்டச் சிறைகளாக உயர்த்தும் பணியும், பாளை மற்றும் திருச்சி சிறைகளில் பழுதுபார்ப்பு மற்றும் புதுப்பிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவற்றில் ஆத்தூரில் பணி முடிவுற்றது.

★ சிறைக் கட்டடங்களுக்கு ரூ.3.55 கோடி மதிப்பில், பராமரிப்பு, மேம்படுத்துதல், துப்புரவு மற்றும் குடிநீர் வழங்கும் பணிகள் முடிவடைந்துள்ளன.

★ நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் ஆகிய இடங்களில் உள்ள வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களில் ரூ. 0.27 கோடி செலவில் சோதனை ஓட்ட சாலை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

★ ஈரோடு மற்றும் கோவில்பட்டி ஆகிய இடங்களில் உள்ள வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களில் ரூ.1.08 கோடி செலவில் சோதனை ஓட்ட சாலை அமைக்கவும், திருவண்ணாமலை, புதுக்கோட்டை, திருச்செங்கோடு, பெரியகுளம், ஈரோடு, மதுரை வடக்கு, சேலம் மற்றும் திருவாரூர் ஆகிய இடங்களில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் ஒவ்வொன்றும் ரூ.1.25 கோடி செலவில் கட்டவும், திருச்சி வட்டாரப் போக்குவரத்து அலுவலகம், ரூ.1.45 கோடி செலவில் கட்டவும், கடலூர், நாகப்பட்டினம், கிருஷ்ணகிரி, சங்ககிரி மற்றும் தென்காசியில் மண்டலப் போக்குவரத்து அலுவலகம் ரூ 7.14 கோடி செலவில் கட்டவும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

★ சத்தியமங்கலம், சிதம்பரம் மற்றும் மயிலாடுதுறையில் ரூ 1.865 கோடி செலவில் வட்டாரப் போக்குவரத்து பகுதி அலுவலகம் கட்டும் பணி நடைபெற்று வருகின்றது.

★ கிருஷ்ணகிரியில், ரூ10 கோடி செலவிலும், திருநெல்வேலியில், ரூ.6.60 கோடி செலவிலும், மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் கட்டப்பட்டுள்ளன.

★ சேலத்தில் புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலகம், ரூ.25 கோடி செலவில் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

★ 20 இடங்களில் ரூ.25.56 கோடி மதிப்பில் வட்டாட்சியர் அலுவலகங்கள் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

★ ரூ.2.24 கோடி ரூபாய் செலவில் நாகப்பட்டினம், நீலகிரி, கிருஷ்ணகிரி ஆகிய இடங்களில் மாவட்ட வருவாய் அலுவலர்களுக்கு குடியிருப்புகளும், திண்டுக்கல், பழனி, இராமநாதபுரம், லால்குடி, மதுராந்தகம், ஆத்தூர் மற்றும் திருச்செந்தூர் ஆகிய இடங்களில் வருவாய்க் கோட்ட அலுவலருக்குக் குடியிருப்புகளும் கட்டப்படுகின்றன.

★ அரியலூரில் புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலகம் கட்ட ரூ. 12.88 கோடியும், திருச்சியில் புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலகம் கட்ட ரூ. 12.01 கோடியும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

★ தருமபுரியில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் கூடுதல் கட்டடங்கள் கட்ட ரூ 2.39 கோடி செலவில் பணி தொடங்கப்பட்டுள்ளது.

★ 29 வட்டாட்சியர் குடியிருப்புகள் கட்ட ரூ 4.52 கோடியும், 12 வட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்கள் கட்ட ரூ 19.22 கோடியும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

★ நபார்டு நிதியுதவி ஆறாம் கட்டம், 13 மாவட்டங்களில், 234 உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளுக்கு வகுப்பறைகள், ஆய்வகங்கள், கழிவறைகள், தண்ணீர் வசதிகள் செய்வதற்கு ரூ. 161.312 கோடி அனுமதி அளித்து பணிகள் முடியும் தருவாயில் உள்ளன.

★ மேலும், ஏழாம் கட்டத்தில், 16 மாவட்டங்களில், 195 உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளுக்கு வகுப்பறைகள், ஆய்வகங்கள், கழிவறைகள், தண்ணீர் வசதிகளுக்காக ரூ.131.69 கோடி அனுமதி அளிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

★ எட்டாம் கட்டத்தில், 8 மாவட்டங்களில், 59 உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளுக்கு வகுப்பறைகள், ஆய்வகங்கள், கழிவறைகள், தண்ணீர் வசதிகளுக்காக ரூ.63.36 கோடியும், ஒன்பதாம் கட்டத்தில், 22 மாவட்டங்களில், 362 உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளுக்கு வகுப்பறைகள், ஆய்வகங்கள், கழிவறைகள், தண்ணீர் வசதிகளுக்காக ரூ.410.74 கோடியும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

★ சென்னையில் மாநில நவீன நூலகம் அமைக்க ரூ.165.76 கோடி அனுமதி அளித்து பணி முன்னேற்றத்தில் உள்ளது.

★ சென்னை, டி.பி.ஐ வளாகத்தில் ரூ.2.50 கோடி செலவில் மாநில பயிற்சி மற்றும் கல்வி மேம்பாட்டு நிலையம் கட்ட அனுமதி அளித்து பணிகள் நடைபெற்று வருகின்றன.

★ தருமபுரியில் ரூ. 1.35 கோடி மதிப்பில் முதன்மைக் கல்வி அலுவலகம் (பகுதி–2 திட்டங்கள்) கட்ட அனுமதிக்கப்பட்டுள்ளது.

★ ரூபாய் 1.68 கோடி செலவில் திருச்சி மற்றும் திருநெல்வேலியில் அரசு சட்டக் கல்லூரியில் மாணவர்கள் தங்கும் விடுதிகள் கட்ட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அவற்றில் திருநெல்வேலியில் பணி தொடங்கப்பட்டுள்ளது.

★ கோயம்புத்தூரில் ரூ.1.24 கோடி செலவில் அரசு சட்டக் கல்லூரியில் பெண்கள் தங்கும் விடுதி கட்டும் பணி முடிவுற்றது.

★ தண்டாரம்பட்டு, ஓமலூர், ஆரணி, குத்தாலம், கம்பம், திருத்துறைப்பூண்டி, தக்கலை மற்றும் ஒட்டன்சத்திரம் ஆகிய இடங்களில் ரூ.2 கோடியில் செலவில் தீயணைப்பு நிலையங்கள் கட்டும் பணி முன்னேற்றத்தில் உள்ளன.

★ 4 விடுதிகளுக்கு சுற்றுச் சுவர் கட்டும் பணிகள் ரூ.0.735 கோடி மதிப்பில் நடைபெற்று முடிவுற்றது.

★ பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவ / மாணவிகளுக்கான 50 நவீன விடுதிகள் கட்ட ரூ.32.15 கோடி அனுமதி அளித்து பணிகள் நடைபெற்று வருகின்றன.

★ பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவ / மாணவிகளுக்கான 25 விடுதிகள் கட்ட ரூ.13.69 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது.

★ மாமல்லபுரத்தில் பேருந்து நிறுத்தம் 3 கோடியே 32 இலட்ச ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ளது.

★ சென்னை, பொன்னி வளாகத்தில் 41 இலட்ச ரூபாய் செலவில் விருந்தினர் மாளிகை கட்டும் பணி தொடங்கப்பட்டுள்ளது.

★ காஞ்சிபுரம், மதுரை மற்றும் திருநெல்வேலியில் கலை மற்றும் பண்பாட்டு மையம் கட்ட ரூ. 2.25 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது.

★ சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் ரூ.425.57 கோடி மதிப்பில் புதிய சட்டமன்ற வளாக (பிளாக்–எ) கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

★ சேலத்தில் கூடுதல் சுற்றுலா மாளிகை ரூ.1 கோடியே 16 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ளது.

★ கோவையில் 44 இலட்ச ரூபாய் செலவில் சிறப்பு விருந்தினர்களுக்காக இரண்டு அறைகள் சுற்றுலா மாளிகை வளாகத்தில் கட்டப்பட்டுள்ளது.

★ 1 கோடி ரூபாய் மதிப்பில் தஞ்சாவூரில், கூடுதல் சுற்றுலா மாளிகையும், 48 இலட்ச ரூபாய் செலவில் கடலூர் சுற்றுலா மாளிகையில் கூடுதல் அறைகளும், 60 இலட்ச ரூபாய் செலவில் தூத்துக்குடி பெருந்திட்ட வளாகத்தில் 5 அறைகளுடன் கூடிய கூடுதல் சுற்றுலா மாளிகையும் கட்டப்படுகின்றன.

★ சென்னை நந்தனத்தில் வேளாண்மைப் பொறியியல் துறை வளாகத்தில் பன்முகத் திட்ட அலுவலகம் (MDPU) அடுக்குமாடி கட்டடம் 15 கோடி ரூபாய் செலவில் கட்டப்படுகிறது.

★ சென்னை, சைதாப்பேட்டை, தாடண்டர் நகரில் 'சி' பிரிவு 36 அரசு ஊழியர்களுக்குக் குடியிருப்புகளும், சென்னை, திருச்சி, ஈரோடு ஆகிய இடங்களில் கண்காணிப்புப் பொறியாளர்களுக்கு அரசு குடியிருப்புகளும் கட்டப்பட்டுள்ளன.



# சமூகப் பாதுகாப்புத் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு உயர்வு

மாண்புமிகு நிதியமைச்சர்
பேராசிரியர் க.அன்பழகன் அவர்கள்

★ 2005–2006 ஆம் ஆண்டில் ரூ.7,528 கோடியாக இருந்த சமூகப் பாதுகாப்புத் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு, 2009–2010இல் ரூ.15,520 கோடியாக உயர்த்தப் பட்டுள்ளது.

★ 2005–2006 ஆம் ஆண்டில் ரூ.567 கோடியாக இருந்த ஆதி திராவிடர்களுக்கான சிறப்புக் கூறுகள் திட்டம் மற்றும் பழங்குடியினர் பகுதிகள் துணைத் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு 2009–2010இல் ரூ.2,649 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

★ முதன்முறையாக அடிப்படைக் கட்டமைப்பை மேம்படுத்த மூலதனச் செலவுக்காக ரூ.10,072 கோடி என்ற அளவில் நிதிஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

★ பதினோராவது ஐந்தாண்டுத் திட்டம் 2007–2008 ஆம் ஆண்டு முதல் ரூ.85,344 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படுகின்றது. 2007–2008 ஆம் ஆண்டில் ரூ.14,000 கோடி ஒதுக்கீட்டிலும், 2008–2009இல் ரூ.16,000 கோடி மதிப்பீட்டிலும் திட்டப்பணிகள் செயல்படுத்தப்பட்டு, 2009–2010ஆம் ஆண்டில் ரூ.17,500 கோடி அளவில் திட்டப்பணிகள் செயல்படுத்தப்படவுள்ளன.

★ நாட்டின் பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள சரிவு, ஆறாவது ஊதியக்குழு பரிந்துரைகளின்படி ஊதிய உயர்வு மற்றும் பல்வேறு நலத் திட்டங்களுக்கான உயர் ஒதுக்கீடுகள் ஆகியவற்றால் ஏற்பட்ட நிதிச்சுமையை இவ்வரசின் திறம்பட்ட நிதி மேலாண்மையால் சீர்படுத்தப்பட்டுள்ளது.

★ ஐந்தாவது மைய ஊதியக்குழு பரிந்துரையினை மாநில அரசுப் பணியாளர்களுக்கும் நடைமுறைப் படுத்தியதனால் ஏற்பட்ட 1–1–1996 முதல் 31–3–1998 வரையிலான ஊதிய நிலுவைத் தொகையினை பணி ஒய்வு பெற்றவர்களுக்கும் பணியில் இருப்பவர் களுக்கும் மூன்று தவணைகளில் ரொக்கமாக 2006–2007 நிதியாண்டு ஆகஸ்ட் 2006 முதல் வழங்க ரூ. 872 கோடி அனுமதிக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.



2009 – 2010ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையினை, தமிழக சட்டப்பேரவையில் தாக்கல் செய்திட வருகைதரும் மாண்புமிகு நிதியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்களுடன் மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. பரிதி இளம்வழுதி ஆகியோர் உள்ளனர். (17–2–2009)

- ★ அரசுப் பணியாளர்கள், ஆசிரியர்கள் மற்றும் பணியிலிருந்து ஓய்வு பெற்ற பணியாளர்கள் ஆகியோருக்கு 60 விழுக்காடு ஊதிய நிலுவைத் தொகைக்கு 31–03–2003–க்கு பின்னரும் வட்டி அனுமதிக்கப்பட்டு, வழங்கப்பட்டுள்ளது.
- ★ அரசு அலுவலர்களுக்கு திருத்திய ஊதிய விகிதம் நிர்ணயித்தல் குறித்த அலுவலர் குழுவின் பரிந்துரையினை செயற்படுத்துதல் முடிவடையாத நிலையில் இடைக்கால நிலுவைத் தொகை 1–1–2009 அன்றுள்ளபடி இரண்டு ஆண்டுகள் பணிபுரிந்த அனைத்து அலுவலர்களுக்கும் மூன்று மாத ஊதியம்+அகவிலை ஊதியம்+அகவிலைப்படி நிலுவைத்தொகை ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களுக்கும் இடைக்கால நிலுவைத் தொகையாக 1–1–2009 அன்றுள்ளபடி ரூ.4,247 கோடி வழங்கப்பட்டது.
- ★ 2001–2002ஆம் ஆண்டு முதல் வழங்கப்படாமல் நிறுத்தப்பட்ட பொங்கல் பரிசு மிகை ஊதியங்கள் அனைத்து அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கும் 2007ஆம் ஆண்டிலிருந்து பொங்கல் திருநாளின்போது வழங்கப்பட்டு வருகிறது.
- ★ அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியர்களுக்கு வழங்கப்படும் அகவிலைப்படியை 1.1.2007 முதல் 29 சதவீதத்திலிருந்து 35 சதவீதமாகவும், 1.7.2007 முதல் 35 சதவீதத்திலிருந்து 41 சதவீதமாகவும் 1.1.2008 முதல் 41 சதவீதத்திலிருந்து 47 சதவீதமாகவும், 1.7.2008 முதல் 47 சதவீதத்திலிருந்து 54 சதவீதமாகவும் 1.1.2009 முதல் 54 சதவீதத்திலிருந்து 64 சதவீதமாகவும் மத்திய அரசுக்கு இணையாக உயர்த்தி, நிலுவைத்தொகை ரொக்கமாகவும் வழங்கப்பட்டுள்ளது.
- ★ பல்வேறு அரசுப் பணியாளர்கள் சங்கங்கள், பயணம் செய்வதற்கான வசதிகளைப் பறித்து முந்தைய அரசால் வெளியிட்ட ஆணையை நீக்கம் செய்து, வானூர்தி மற்றும் ரயில் பயணங்களில் அரசு அலுவலர்கள் பணிநிமித்தமாகவும் விடுப்பு காலப் பயணச்சலுகையிலும் 01.12.2001க்கு முன்னர் இருந்த நிலைகளில் பயணம் செய்வதற்கு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.
- ★ அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் கோரிக்கையான 30 ஆண்டுகள் பணிபுரிந்தால் முழு ஓய்வூதியம் மற்றும் ஓய்வுபெறும்போது கடைசியாகப் பெற்ற ஊதியத்தில் 50 சதவீதம் அல்லது கடைசி 10 மாதங்களின் சராசரி ஊதியத்தில் 50 சதவீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஓய்வூதியத்தைக் கணக்கிடவும் 1.4.2003 முதல் முன்தேதியிட்டு 11.4.2007 அன்று ஆணையிடப்பட்டுள்ளது.
- ★ குறிப்பிட்ட ஓய்வூதியர்களுக்கு 15.6.1998 அன்று வழங்கப்பட்ட பயன், 1.6.1988க்கு முன்பு ஓய்வு பெற்ற ஓய்வூதியர்கள்/குடும்ப ஓய்வூதியர்கள் பயன்பெறும் வண்ணம் 15.9.2006 அன்று ஆணையிடப்பட்டுள்ளது.
- ★ 24.9.2007 அன்று ஓய்வூதியர்களுக்கு வழங்கப்பட்ட பண்டிகை முன்பணம் ரூபாய் 500/–லிருந்து ரூபாய் 1,000/–மாக உயர்த்தப்பட்டது.
- ★ ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு பொங்கல் பரிசு ரூ. 150/–லிருந்து ரூ.300/–ஆக உயர்த்தி 5.1.2008ல் ஆணையிடப்பட்டது.
- ★ ஓய்வூதியதாரர்களின் மருத்துவ சிகிச்சை உதவித் திட்டத்தின் கீழ், ஓய்வூதியதாரர் மருத்துவச் செலவினை ஈடுகட்டக் கோரி விண்ணப்பங்கள் அதிக அளவில் பெறப்பட்டுள்ளதால், தற்போது அவர்களிடமிருந்து ஒவ்வொரு மாதமும் பிடித்தம் செய்து திரட்டப்படும் நிதி போதியதாக இல்லாததால் 10 கோடியை இந்த அரசு மானியமாக அளித்து, பிப்ரவரி 2008 வரை ஓய்வூதியர்களிடமிருந்து பெறப்பட்ட மருத்துவச் செலவின விண்ணப்பங்கள் அனைத்திற்கும் ஈட்டுத்தொகை வழங்கப்பட்டது.
- ★ மாநில அரசு, மத்திய அரசு, அரசு நிறுவனம், பொதுத்துறை நிறுவனம், தன்னாட்சி நிறுவனம் மற்றும் உள்ளாட்சி நிதி ஆகியவற்றின் கீழ் பணியாற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு 24.3.08 அன்று குடும்ப ஓய்வூதியத்தில் 50 சதவிகிதம், அகவிலை குடும்ப ஓய்வூதியமாகவும், குடும்ப ஓய்வூதியம் மற்றும் அகவிலை குடும்ப ஓய்வூதியத்திற்கு அகவிலைப்படி வழங்கியும், ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

★ ஒய்வூதியதாரர்களின் மருத்துவ சிகிச்சை உதவித்திட்டத்தின்கீழ், வயதானக்காலத்தில் ஓய்வூதியர்கள் பெறும் மருத்துவ சிகிச்சைகளுக்கு உரிய தொகையை மீளப்பெறும் வகையில், மாதந்தோறும் ரூபாய் 50 பிடித்தம் செய்து, மேற்கொண்ட மருத்துவ செலவினத்தின் தற்போதுள்ள 75 சதவிகிதம் அல்லது ரூபாய் ஐம்பதாயிரம் என்ற உச்சவரம்பு, 75 சதவிகிதம் அல்லது ரூபாய் ஒரு இலட்சம் என உயர்த்தி 1.4.2008 முதல் வழங்கப்பட்டு வருகிறது.

★ மாநில அரசு, மத்திய அரசு, அரசு நிறுவனம் பொதுத்துறை நிறுவனம், தன்னாட்சி நிறுவனம் மற்றும் உள்ளாட்சி நிதி ஆகியவற்றின்கீழ் பணியாற்றும் குடும்ப ஒய்வூதியதாரர்களுக்கு, மத்திய அரசில் பணியாற்றும் குடும்ப ஒய்வூதியதாரர்களுக்கு வழங்கப்பட்டதைப் போலவே, குடும்ப ஒய்வூதியத்திற்கான அகவிலைப்படியை 18.7.97 முதல் வழங்கி 11.2.2009 அன்று ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

★ ஒய்வூதியதாரர்களின் கணவர் / மனைவிக்கும் மேற்கொள்ளப்பட்ட மருத்துவ சிகிச்சை / அறுவை சிகிச்சைக்கு தமிழ்நாடு ஒய்வூதிய மருத்துவ நல நிதித் திட்டத்தின் கீழ் மருத்துவ உதவி மீளப்பெறுவதற்கான திட்டம் நீட்டிக்கப்பட்டுள்ளது.

★ 2007– 2008இல் அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்கள் பெற்று வந்த பண்டிகை முன் பணம் ரூ 1,000/– லிருந்து ரூ 2,000/– மாக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

★ 2007–2008இல் கணினி மயமாக்கப்பட்ட மின்னணு ஒப்பந்தப்புள்ளி முறை இரண்டு கட்டங்களாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. முதற்கட்டமாக ரூபாய் 10 இலட்சம் மதிப்பிற்கு மேற்பட்ட கொள்முதல்களில் ஒப்பந்தப்புள்ளி படிவங்களை இணையதளம் மூலம் ஒப்பந்ததாரர்கள் இலவசமாகப் பெற்றுக் கொள்ளும் முறை 1.7.2007 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இரண்டாவது கட்டமாக ஒப்பந்ததாரர்கள் தமது ஒப்பந்தப் புள்ளிகளை கணினி மூலம் இணையதளத்திற்கு அனுப்பும் நடைமுறை 1.1.2008 முதல் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது.

★ தமிழக அரசு ஊழியர்களுக்கு புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் அறிமுகப்படுத்தப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் 15.07.2007 அன்று அறிவித்ததையொட்டி அரசுப் பணியாளர்களும், வரையறுக்கப்படாத ஊதிய ஏற்ற முறையில் பணிபுரியும் சத்துணவுப் பணியாளர்கள், கிராம உதவியாளர்கள் போன்றோருக்கும், உள்ளாட்சி நிறுவனங்கள், அரசு பொதுத்துறை நிறுவனங்கள், மாநில அரசின் கீழ்வரும் பல்கலைக்கழகங்கள் மற்றும் சட்டப்படியான வாரியங்கள் ஆகியவற்றின் பணியாளர்களும் மற்றும் அவர்தம் குடும்பத்தினரும் நான்காண்டு காலகட்டத்தில் உயரளவாக ரூ2 இலட்சம் அளவிற்கு மருத்துவக்காப்பீடு பயன்பெறும்படியான புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் 11.06.2008 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை சுமார் 26,400 அரசு ஊழியர்கள் இத்திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்டுள்ள சிகிச்சைகளுக்குக் காப்புறுதித்தொகையாக ரூ.93.62 கோடி பெற்றுள்ளனர்.

★ 21.12.06இல் தொடங்கப்பட்டுள்ள **www.tn.gov.in/karuvoolam** என்னும் கருவூல இணையதளத்தின் மூலம் பல பயனுள்ள தகவல்களை சுலபமாகப் பெற முடிவதோடு, இந்திய அரசு, மாநில கணக்காயர் மற்றும் ரிசர்வ் வங்கி போன்ற பல முக்கிய இணையதளங்களைக் காண இணைப்பு வசதியும் உள்ளது. மைய அரசின் பணியாளர் அமைச்சகம், பொது குறை தீர்ப்பு மற்றும் ஒய்வூதியத்துறை, இந்த இணையதளத்தை 2007–2008 ஆம் ஆண்டிற்கான தலைசிறந்த அரசு இணையதளமாக அங்கீகரித்து தங்கப் பதக்கத்தைப் பரிசாக அளித்துள்ளது.

★ சென்னையில் உள்ள அரசு அலுவலர்கள் மற்றும் ஒய்வூதியர்கள் தங்களது சம்பளம் மற்றும் ஒய்வூதியப் பட்டியல்கள் மின் தீர்வை திட்டம் (ECS) மூலம் சம்பளக் கணக்கு அலுவலகம் மற்றும் ஒய்வூதியம் வழங்கும் அலுவலகம் வழியாக அவர்களது வங்கிக் கணக்கில் சேர்க்கப்பட்ட விவரத்தை இணையதளத்தின் வாயிலாகத் தெரிந்து கொள்ள வசதி செய்யப்பட்டுள்ளது.

★ சிறப்பு நேர்வுகளில் ஒய்வூதியர்களின் ஆண்டு நேர்காணல் "ஒளித்தோற்ற உரையாடல்" **(Video conferencing)** மூலமாகவும் நடைபெறுகிறது. தற்போதைய தொழில்நுட்பத்தை முழுமையாகப் பயன்படுத்தி, மூத்த குடிமக்களுக்கும் ஒய்வூதியதாரர்களுக்கும் பயன்படும் வகையில் இது அமைந்துள்ளது.

★ தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டியில் புதிய சார்நிலை கருவூலம்; அரியலூர் மாவட்டத்திற்கான புதிய மாவட்டக் கருவூலம் ஆகியன தொடங்கப்பட்டுள்ளன.

★ திருப்பூர் மாவட்டத்தில் ஒரு புதிய மாவட்டக் கருவூலம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

★ முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து 3,117 குடும்பங்களுக்கு ரூ.2,46,59,000 நிவாரண உதவி வழங்கப்பட்டுள்ளது.



# திட்ட ஒதுக்கீடு நிதி அதிகரிப்பு

**மாண்புமிகு நிதியமைச்சர்**
**பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள்**

★ 2006–2007 ஆம் ஆண்டிற்கான திட்ட ஒதுக்கீடு ரூ.12,500 கோடி. இது 2005–2006 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீட்டை விட 37 விழுக்காடு அதிகமாகும். 2007–2008 ஆம் ஆண்டிற்கான திட்ட ஒதுக்கீடு ரூ.14,000 கோடி. இது 2006–2007 ஆம் ஆண்டின் ஒதுக்கீட்டை விட 12 விழுக்காடு அதிகமாகும். 2008–2009 ஆம் ஆண்டிற்கான திட்ட ஒதுக்கீடு ரூ.16,000 கோடி. இது 2007–2008 ஆம் ஆண்டின் ஒதுக்கீட்டை விட 14 விழுக்காடு அதிகமாகும்.

★ 2009–2010 ஆம் ஆண்டிற்கான உத்தேச திட்ட ஒதுக்கீடு ரூ.17,500 கோடி. இது மத்திய திட்டக்குழுவின் துணைத் தலைவர்–மாண்புமிகு முதலமைச்சர் நிலையில் நடைபெறவுள்ள கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு இறுதிச் செய்யப்படும்.

★ தமிழ்நாட்டிற்கான பதினோராவது ஐந்தாண்டுத் (2007–2012) திட்டத்திற்கு ரூ.85,344 கோடி அளவில் மத்திய திட்டக்குழு ஒப்புதல் அளித்துள்ளது. இந்த திட்டக் காலத்தில், மாநிலப் பொருளாதாரத்தை ஆண்டொன்றிற்கு சராசரியாக 9 சதவிகித அளவிற்கு வளர்ச்சி அடையச் செய்வதைக் குறிக்கோளாகக் கொண்டு இந்த அரசு, திட்டங்களை வகுத்துச் செயல்படுத்தும்.

★ மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் 2006–2007 மற்றும் 2007–2008 ஆம் ஆண்டுகளில் ஆண்டொன்றிற்கு ரூ.35.50 கோடியும் மற்றும் 2008–2009 ஆம் ஆண்டிற்கு ரூபாய் 42.93 கோடியும் மத்திய சிறப்பு நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டது.

★ 280 நீர்சேகரிப்புக் கிணறுகள் அமைத்தல், 1,028 தடுப்பணைகள் அமைத்தல் மற்றும் நீர் அறுவடை அணை அமைத்தல், வெற்றுக்கல் தடுப்பணைகள் அமைத்தல், 10,785 மீட்டர் நீளப்பகுதி கால்வாய் ஓரத்தில் மரங்கள் நடுதல், கம்பி வலையுடன் கூடிய கல் தடுப்பணைகள் அமைத்தல், 705 ஹெக்டேர் பரப்பளவில் படிமட்டத்தில் புல் வளர்த்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

★ 862 ஹெக்டேர் பரப்பளவிற்கு சோலை மற்றும் இதர காடு வளர்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

★ 722 கி.மீ நீளத்திற்கு வனத்தீ தடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

★ நகர்ப் பகுதிகளில் 14,000 எண்ணிக்கையில் மரக்கன்றுகள் நடப்பட்டன.

★ 75,000 எண்ணிக்கையிலான சில்வர் ஓக் மரக்கன்றுகள் உருவாக்கப்பட்டன.

★ 6,734 ஹெக்டேர் பரப்பளவில் பயிரிட உயர்ரக இறக்குமதி செய்யப்பட்ட காய்கறி விதைகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன.

★ 220 சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு ஆயில் என்ஜின் மற்றும் பவர் டில்லர் வழங்கப்பட்டன.

★ 6 எண்ணிக்கையிலான உலர் நிலையம் மற்றும் மழைக்கான தங்கும் அறைகள் அமைக்கப்பட்டன.

★ 40 சாலைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

★ நீலகிரி மாவட்டத்திலுள்ள 4 நகராட்சிகள், 11 பேரூராட்சிகள், 35 ஊராட்சிகள் மற்றும் 1 கன்டோன்மன்ட் பகுதிகளில் ஒய்வு அறை, அங்கன்வாடி மையங்களுக்கு புதிய கட்டடம், சமையலறை, கூடுதல் அறைகள் கட்டும் பணிகளும், பொது கழிப்பிடங்கள், சாலைகள் அமைத்தல், சமுதாயக் கூடங்கள் கட்டுதல், குடிநீர் பணிகள், பாலங்கள் அமைத்தல் மற்றும் அடிப்படை வசதிகள் ஆகியன மேற்கொள்ளப்பட்டுள்ளன.

★ ரூ.852.82 இலட்சத்தில் தெரு விளக்குகள் நடைபாதைகளை மேம்படுத்துதல், சாலை வசதிகள், கழிவுநீர் மற்றும் மழைநீர்கால்வாய்கள் போன்ற அடிப்படை கட்டமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

★ ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்காக குறைந்த செலவிலான 1,279 தொகுப்பு வீடுகள் கட்டித்தரப்பட்டன.

★ மேற்கு மலைத் தொடர்ச்சி மேம்பாட்டுத் திட்டம் 2006–2007 மற்றும் 2007–2008 ஆம் ஆண்டுகளில் ஆண்டொண்டிற்கு ரூ.17.04 கோடியும், 2008–2009ஆம் ஆண்டிற்கு ரூ.20.61 கோடியும் மத்திய சிறப்பு நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் 4,583 ஹெக்டேர் பரப்பளவில் மண்வள பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

★ 440 ஹெக்டேர் பரப்பளவில் பல்வேறு தோட்டக்கலைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

★ 1,180 ஹெக்டேர் பரப்பளவில் உயிரின வாழ்க்கைச் சூழல் சீரமைப்பு, பாதுகாப்பு, மேம்பாடு மற்றும் நிலைப்படுத்துதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

★ 39.36 கி.மீ. தூரத்திற்கு சாலைத் தடுப்புச் சுவர் கட்டுதல் மற்றும் சாலைப்பணிகள் மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

★ ரூபாய் 1,005.73 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர் வழங்கல், உயிரியல் பண்ணைத் திட்டம், சாலை வசதிகளை மேம்படுத்துதல், குடிநீர் குழாய்களை விரிவுபடுத்துதல், கசிவு நீர்க்குட்டை, வெள்ளத் தடுப்புச் சுவர் கட்டுதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

★ சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் முதல் இரண்டு வழித்தடங்கள் சென்னையில் நிறைவேற்றப்பட்டு வருகிறது. முதல் வழித்தடம் வண்ணாரப்பேட்டையிலிருந்து சென்னை விமான நிலையம் வரையிலும் அடுத்தது சென்னை சென்ட்ரல் இரயில் நிலையம் முதல் புனித தோமையார் மலை வரையிலும் அமைக்கப்படுகிறது.



# தமிழ் வளர்ச்சிக்கு சிறப்பு முயற்சிகள்

மாண்புமிகு நிதியமைச்சர்
பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள்

★ தை முதல் நாளைத் தமிழ்ப்புத்தாண்டுத் தொடக்கம் என அறிவித்துத் தமிழ்நாடு சட்டமன்றத்தில் சட்டம் இயற்றப்பட்டு, அறிவிக்கையும் உரிய அரசாணையும் வெளியிடப்பட்டுள்ளது.

★ மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தொடர் நடவடிக்கைகளாலும் வலியுறுத்தலாலும் மத்திய அரசு தமிழ் மொழியைச் "செம்மொழி" என அறிவித்தது. செம்மொழி நிறுவனத்தின் உயர்குழுக்களாக எண்பேராயமும், ஐம்பெருங்குழுவும் அமைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களின் தலைமையில் மாண்புமிகு மத்திய மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு.அர்ஜுன்சிங் அவர்களால் சென்னையில் மத்திய செம்மொழித் தமிழ் ஆய்வு நிறுவனம் 18.8.2007 அன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனத்திற்குக் காஞ்சிபுரம் மாவட்டம் பெரும்பாக்கம் கிராமத்தில் 16.59 ஏக்கர் நிலம் தமிழக அரசால் வழங்கப்பட்டுள்ளது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தலைமையில் சென்னையில் மத்திய செம்மொழித் தமிழ் ஆய்வு நிறுவனம் செயல்பட மத்திய அரசு ரூ.76.32 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது. சென்னை காமராசர் சாலையில் பாலாறு இல்லத்தில் மத்திய செம்மொழித் தமிழ் ஆய்வு நிறுவன அலுவலகத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 30.6.2008 அன்று திறந்து வைத்தார்கள்.




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், தில்லி தமிழ்ச் சங்க வளாகத்தில் நடைபெற்ற முப்பெரும் விழாவில், திருவள்ளுவர் சிலையினை திறந்து வைத்தும் முத்தமிழ்த் தோரண வாயிலுக்கு அடிக்கல் நாட்டியும் விழாப் பேருரையாற்றினார். உடன் மாண்புமிகு தில்லி மாநில முதலமைச்சர் திருமதி. ஷீலா தீட்சித், மாண்புமிகு மத்திய உள்துறை அமைச்சர் திரு. ப. சிதம்பரம், மாண்புமிகு மத்திய கப்பல், சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு. டி. ஆர். பாலு உள்ளிட்டோர் உள்ளனர். (4.12.2008)

★ ஆட்சிமொழித் திட்டத்தினை முனைப்புடன் செயற்படுத்தும் நோக்கில் சிறப்பாய்வுத் திட்டத்தின் கீழ்த் தலைமைச் செயலகத்தின் அனைத்துத் துறைகளும் ஆய்வு செய்யப்பட்டுள்ளன.

★ தமிழ் வளர்ச்சித் துறையின் மண்டல / மாவட்ட நிலை அலுவலகங்களுக்கு இணையதள வசதி மற்றும் விரிந்த அலைவரிசை வசதி செய்யப்பட்டு மின் ஆளுகைக்கு வழிசெய்யப்பட்டுள்ளது.

★ தமிழ் வளர்ச்சி இயக்ககச் சார்நிலை அலுவலகங்களுக்கு ரூ.7.50 இலட்சம் செலவில் கணினிகள் வாங்கப்பட்டுள்ளன.

★ தமிழ் வளர்ச்சி இயக்ககத்தின் கீழ் அமைந்த அனைத்து மண்டல/மாவட்ட நிலை அலுவலகங்களுக்கும் தொலைபேசி வசதி செய்யப்பட்டுள்ளது.

★ இவ்வரசு பொறுப்பேற்ற பின்னர் 65 தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு, இவர்களில் சான்றாவணம் அளித்த 62 தமிழ் அறிஞர்களின் மரபுரிமையர்களுக்குப் பரிவுத் தொகையாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 4.60 கோடி ரூபாய் வழங்கியுள்ளார்கள்.

★ தமிழைச் செம்மொழி என அறிவிக்க வேண்டுமென்று நூறாண்டுகளுக்கு முன்பே முதற் குரல் கொடுத்தவரும், சூரிய நாராயண சாஸ்திரி என்ற தம் பெயரைத் தனித் தமிழில் மாற்றிக் கொண்டவருமாகிய பரிதிமாற் கலைஞர் அவர்கள் பிறந்த வீடு அரசு நினைவில்லமாக மாற்றப்பட்டு, இல்ல உரிமையாளர்களுக்கு ரூ 3.84 இலட்சம் தொகை வழங்கப்பட்டது.

★ தமிழறிஞர் மறைமலையடிகளார் அவர்களின் பெயர்த்தி திருமதி சுந்தரத்தம்மை வயதான நிலையில் இன்னலுற்று வந்த நிலையைப் போக்கும் வகையில் அவர்களுக்கு நிதியுதவியாகவும் மருத்துவச் செலவிற்காகவும் ரூ.1.50 இலட்சம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 2.12.06 அன்று வழங்கப்பட்டது.

★ திருமதி சுந்தரத்தம்மை அவர்களின் மகள் செல்வி சொ.கலைச்செல்வி அவர்களுக்கு அரசுப் பணி வழங்கப்பட்டுத் தமிழ் வளர்ச்சி இயக்ககத்தில் முதுநிலை ஒப்பச்சராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

★ 2006ஆம் ஆண்டுக்கான திரு.வி.க. விருது திரு. க.திருநாவுக்கரசு அவர்களுக்கும், பாரதியார் விருது திரு மு.தமிழருவிமணியன் அவர்களுக்கும் பாரதிதாசன் விருது முனைவர் கா.செல்லப்பன் அவர்களுக்கும் 2007ஆம் ஆண்டுக்கான திருவள்ளுவர் விருது பேராசிரியர் முனைவர் க.ப.அறவாணன் அவர்களுக்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 8.1.07 அன்று வழங்கப்பட்டன. 2007ஆம் ஆண்டிற்கான "திரு.வி.க. விருது" முனைவர் த.பெரியாண்டவன் அவர்களுக்கும், "பாரதியார் விருது" கவிஞர் திருமதி.சௌந்தராகைலாசம் அவர்களுக்கும், "பாரதிதாசன் விருது" திரு.எம்.எஸ்.வெங்கடசாலம் அவர்களுக்கும் "கி.ஆ.பெ. விசுவநாதம் விருது" கவிஞர் கா.வேழவேந்தன் அவர்களுக்கும் 2008ஆம் ஆண்டிற்கான "திருவள்ளுவர் விருது" தவத்திரு பொன்னம்பல அடிகளார் அவர்களுக்கும் 16.1.2008 அன்று நடைபெற்ற திருவள்ளுவர் விழாவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டன. 2008ஆம் ஆண்டிற்கான "திரு.வி.க. விருது" முனைவர் ச.பா.அருளானந்தம் அவர்களுக்கும், "பாரதியார் விருது" முனைவர் இரா.மணியன் அவர்களுக்கும், "பாரதிதாசன் விருது" கவிஞர் தமிழச்சி தங்கபாண்டியன் அவர்களுக்கும் "கி.ஆ.பெ.விசுவநாதம் விருது" பேராசிரியர் த.பழமலய் அவர்களுக்கும் 2009ஆம் ஆண்டிற்கான "திருவள்ளுவர் விருது" முனைவர் பொற்கோ அவர்களுக்கும் 15.1.2009 அன்று நடைபெற்ற திருவள்ளுவர் விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டன.

★ அறிவியல் தமிழ் வளர்ச்சிக்கு ஆக்கம் நல்கும் வகையில் ஆண்டுதோறும் வெளிவரும் தமிழ் மென்பொருள்களுள் சிறந்த மென்பொருள் ஒன்றைத் தெரிவு செய்து அதனை உருவாக்கியவருக்குக் 'கணியன் பூங்குன்றனார்' பெயரில் பரிசுத் தொகை ரூ.1,00,000/– வழங்கிட அரசு ஆணையிட்டுள்ளது.

★ அறிவியல் தமிழ் வளர்ச்சியைக் கருத்திற்கொண்டு அறிவியல் தமிழ் மன்றம் அமைக்கப்பட்டுச் செயல்பட்டு வருகிறது.

★ தமிழ் மாநிலம் அமைந்த பொன்விழா, 1.11.06 அன்று சென்னையில் கொண்டாடப்பட்டது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இவ்விழாவில் எல்லைக் காவலர்களுக்குச் சிறப்பு செய்தார்கள்.

★ திருக்குறளின் 1,330 குறட்பாக்களை முற்றோதல் செய்த 24 மாணவ, மாணவியர்களின் திறமையைப் பாராட்டி அவர்கள் ஒவ்வொருவருக்கும் ரூ.5,000/– வீதம் மொத்தம் ரூ.1.20 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

★ சிறந்த நூல்களுக்குப் பரிசு வழங்கும் திட்டத்தின் கீழ் நூலாசிரியர்களுக்கு வழங்கப்படும் பரிசுத்தொகை ரூ.10,000/–இல் இருந்து ரூ.20,000/–ஆகவும் பதிப்பகத்தாருக்கு வழங்கப்படும் பரிசுத் தொகை ரூ.2,000/–இல் இருந்து ரூ.5,000/–ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

★ 15 மாவட்டங்களில் ஆட்சிமொழிக் கருத்தரங்குகள் நடத்தப்பட்டுள்ளன.

★ கணினியில் தமிழின் பயன்பாட்டை வளர்த்திடும் வகையில் மின் அகராதி, கிளவியாக்கம், மொழித்திறன் எனும் மென்பொருள்களின் உருவாக்கப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

★ உயர்நீதிமன்றத்தில் தமிழ் வழக்குமொழியாகப் பயன்படுத்தப்படக் குறிப்பிடத்தக்க வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

★ எல்லைக் காவலர்களுக்குத் திங்கள்தோறும் வழங்கப்படும் நிதியுதவி ரூ.3,000/–த்திலிருந்து ரூ 4,000/–ஆக 1.11.2006 முதல் உயர்த்தப்பட்டுள்ளது. எல்லைக் காவலர்களின் மரபுரிமையர்களுக்கு வழங்கப்பட்ட நிதியுதவியும் ரூ.1,500/–இல் இருந்து ரூ.2,000/–ஆக உயர்த்தப்பட்டுள்ளது. தமிழறிஞர்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தின்கீழ் 2007–08ஆம் நிதியாண்டில் 100 எல்லைக் காவலர்களுக்கும், 31 எல்லைக் காவலர்களின் மரபுரிமையர்களுக்கும், 373 தமிழறிஞர்களுக்கும், 131 தமிழறிஞர்களின் மரபுரிமையாளர்களுக்கும் நிதியுதவி வழங்கிட ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. 2008–09ஆம் நிதியாண்டில் 6 எல்லைக் காவலர்களுக்கும் 4 எல்லைக் காவலர்களின் மரபுரிமையர்களுக்கும், 567 தமிழறிஞர்களுக்கும், 310 தமிழறிஞர்களின் மரபுரிமையர்களுக்கும் நிதியுதவி வழங்கிட ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. இவ்வகையில் 106 எல்லைக் காவலர்களுக்கும், 35 எல்லைக் காவலர்களின் மரபுரிமையர்களுக்கும் 940 தமிழறிஞர்களுக்கும், 441 தமிழறிஞர்களின் மரபுரிமையர்களுக்கும் நிதியுதவி வழங்கிட ஆணையிடப்பட்டுள்ளது.

★ அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்குத் திங்கள்தோறும் வழங்கப்படும் நிதியுதவி ரூ.500/–லிருந்து ரூ 1,000/– ஆக 1.9.2006 முதல் உயர்த்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 2006–07 ஆம் நிதியாண்டில் 16 தமிழறிஞர்களுக்கும் 2007–08ஆம் ஆண்டில் 12 தமிழறிஞர்களுக்கும் 2008–09ஆம் ஆண்டில் 15 தமிழறிஞர்களுக்கும் நிதியுதவி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

★ ஆங்கில மொழியாக்கத்துடன் கூடிய திருக்குறள் நூல்கள் ரூ.1 இலட்சம் செலவில் வாங்கப்பட்டு நட்சத்திரத் தகுதி பெற்றுள்ள தனியார் உணவக அறைகளில் வைக்கப்பட்டுள்ளன.

- ★ திருக்குறளைத் தேசிய நூலாக அறிவித்திடவும், திருவள்ளுவர், தொல்காப்பியர் பெயரில் விருதுகள் வழங்கிடவும் மைய அரசிடம் வலியுறுத்தி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.
- ★ கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலையைப் பார்வையிட வருவோர்க்குத் திருவள்ளுவர் பற்றிய குறிப்புக் கையேடு, திருக்குறள் மொழிபெயர்ப்பு நூல் அளித்திட ரூ.20 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.
- ★ நூல் பதிப்புப் பணியில் ஒரு நூற்றாண்டைக் கடந்த அல்லயன்ஸ் நிறுவனத்திற்கு 2.12.2006 அன்று பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்பட்டது.
- ★ ஆய்வறிஞர்களுக்கும் மாணவர்களுக்கும் பெரிதும் பயன்படும் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரகராதியைச் சூர்ந்தாய்வு செய்து புதுக்கியும், பெருக்கியும் வெளியிடும் பணிக்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தரிடம் ரூ.10 இலட்சத்திற்கான காசோலையை 7.12.2007 அன்று வழங்கினார்கள்.
- ★ திராவிடப் பல்கலைக்கழகத்தில் பிற திராவிட மொழிகளுடனான ஒப்பாய்வுத் திட்டப் பணிகளுக்கும், தமிழ் மொழி இலக்கியங்களைப் பிற திராவிட மொழிகளிலும் பிற திராவிட மொழி இலக்கியங்களைத் தமிழ் மொழியிலும் மொழிபெயர்த்திடும் திட்டப்பணிகளுக்காக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆந்திர மாநிலத்திலுள்ள குப்பம் திராவிடப் பல்கலைக்கழகத் துணைவேந்தரிடம் ரூ.10 இலட்சத்திற்கான காசோலையை 7.12.2007 அன்று வழங்கினார்கள்.
- ★ குப்பம் திராவிடப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த் துறை ஏற்படுத்தும் பொருட்டு ஒரு பேராசிரியர், ஒரு இணைப் பேராசிரியர் மற்றும் இரு உதவிப் பேராசிரியர்கள் பணியிடங்களுக்குரிய செலவுகளுக்காக ஆண்டுதோறும் 12.15 இலட்சம் ரூபாய் வழங்கிட அரசு ஆணையிட்டுள்ளது.
- ★ குப்பம் திராவிடப் பல்கலைக்கழகத்தில் தமிழ் பயிலும் மாணவர்களுக்காக 2008–09 ஆம் ஆண்டில் நிதியுதவியாக ரூ.1.86 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.
- ★ திருவனந்தபுரம் பன்னாட்டுத் திராவிட மொழியியற் பள்ளிக்கு 2000ஆம் ஆண்டு முதல் 2004ஆம் ஆண்டு வரையிலான செலவினங்களுக்காகப் பெற்ற கடன் தொகையைத் திரும்பச் செலுத்துவதற்கு ரூ.10 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.
- ★ மகாகவி பாரதியார் நூற்றாண்டு விழாவினை நடத்தியது தொடர்பாக அரசு பங்களிப்பாக வாரணாசி இந்துப் பல்கலைக் கழகத்திற்கு ரூ.50,000/– ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.
- ★ ஆசியவியல் நிறுவனத்திற்கு 2001–02 முதல் 2006–07 வரையிலான ஆண்டுகளுக்கு நல்கையாக ரூ.49.40 இலட்சமும் 2007–08 ஆம் ஆண்டு நல்கையாக ரூ.20.74 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.
- ★ 2006–2007ஆம் நிதியாண்டில் பேரகரமுதலி வெளியீடுகள் வரிசையில் ‘ ம ‘ முதல் ‘ வௌ’ வரையிலான 6 பகுதிகளும், ‘தமிழ் அகரமுதலி வரலாறு’ எனும் பகுதியும் ஆக மொத்தம் 7 பகுதிகள் ரூ.14 இலட்சம் செலவில் அச்சடிக்கப்பட்டு கடந்த 16–01–2008ஆம் நாளன்று நடைபெற்ற திருவள்ளுவர் திருநாள் விழாவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் வெளியிடப் பெற்றன.



# உள்ளாட்சிகளை உயர்த்த உன்னதத் திட்டங்கள்

**மாண்புமிகு துணை முதலமைச்சர்**
**திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்**

★ தமிழ்நாட்டில் உள்ள 12,618 கிராம ஊராட்சிகள், 385 ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் 29 மாவட்ட ஊராட்சிகளுக்கான தேர்தல்கள் அக்டோபர் 2006இல் நடத்தப்பட்டன. ஊரகப் பகுதிகளில் முன் எப்போதும் இல்லாத வகையில் மிக அதிக அளவில் பங்கேற்று 76 சதவீதம் மக்கள் வாக்களித்தனர்.

★ பல ஆண்டுகளாகத் தேர்தல் நடத்தப்படாமல் இருந்த பாப்பாபட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம் மற்றும் கொட்டகச்சியேந்தல் கிராம ஊராட்சிகளுக்கு அக்டோபர் 2006இல் வெற்றிகரமாகத் தேர்தல்கள் நடத்தப்பட்டன. தேர்தலில் புதியதாக வெற்றி பெற்ற கிராம ஊராட்சித்தலைவர்கள், துணைத்தலைவர்கள் மற்றும் கிராம சமுதாயத் தலைவர்களையும் அழைத்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் சென்னையில் 13.11.2006 அன்று 'சமத்துவப் பெருவிழா' நடத்தி சிறப்பித்தார்கள்.

★ உள்ளாட்சி நிறுவனங்களுக்குக் கூடுதல் பொறுப்புகள் மற்றும் அதிகாரங்கள் வழங்கிட வேண்டி, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் ஒரு உயர் நிலைக் குழு அமைக்கப்பட்டது. இந்த உயர் நிலைக் குழுவின் அறிக்கை, மாண்புமிகு ஊரக வளர்ச்சி (மற்றும்) உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில், 10.12.2007 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் அளிக்கப்பட்டுள்ளது. இக்குழு 39 பொருள்களில் அளித்துள்ள 99 பரிந்துரைகளில், இதுவரை 61 பரிந்துரைகளின் மீது அரசாணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

★ பொதுமக்களின் நீண்ட காலக் கோரிக்கைகளை நிறைவேற்றும் பொருட்டு, ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் நிலை உயர்த்துதல், அவற்றின் எல்லைகளை மாற்றியமைத்தல், அவைகளைப் பிரித்தல் சம்பந்தமாக மக்களின்



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள்
திருச்சிராப்பள்ளி மாவட்டம், மருங்காபுரி ஊராட்சி ஒன்றியம் மல்லிகைப்பட்டியில்
பெரியார் நினைவு சமத்துவபுரத்தை காணொளித் தொடர்பு வாயிலாகத் திறந்து வைத்தார்கள்.(14–6–2009)

கருத்தறிந்து, அவற்றினைப் பரிசீலனை செய்து பரிந்துரைகளை உடனடியாக சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்களுக்கு அனுப்ப மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

★ மாநில அரசின் சொந்த வரி வருவாயிலிருந்து உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்தளிக்கப்படும் நிதி 2007–08ஆம் ஆண்டில் 8 சதவீதத்திலிருந்து 9 சதவீதமாக உயர்த்தப்பட்டது. மேலும் இது 2009–2010இல் 9 சதவீதத்திலிருந்து 9.5 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது.

★ ஊரக உள்ளாட்சி நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு 2006–07இல் ரூ1,225 கோடியிலிருந்து 2007–08இல் ரூ1,583.58 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

★ ஒப்படைக்கப்பட்ட வருவாய் – உள்ளாட்சி அமைப்புகளில் நிதி மேம்பாடு செய்யும் பொருட்டு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலம் வழங்கப்பட்டு வந்த ஒப்படைக்கப்பட்ட வருவாயான, தலவரி, தலமேல் வரி, முத்திரைத்தாள் கட்டணம் மீதான தீர்வை மேல்வரி மற்றும் கேளிக்கை வரி ஆகியவை 2007–08ஆம் ஆண்டு முதல் மாநில அளவில் ஒருமுகப்படுத்தப்பட்டு உள்ளாட்சி அமைப்புகளுக்குப் பிரித்து வழங்கப்படுகிறது. 2007–08ஆம் ஆண்டுக்கு ரூபாய் 270 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் மூன்றில் இரண்டு பங்கு நிதி (அதாவது ரூ.180 கோடி) ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள மூன்றில் ஒரு பங்கு (அதாவது ரூ.90 கோடி) நிதியில், ஊரகப் பகுதிகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

★ 2007–08ஆம் ஆண்டிலிருந்து மாநில நிதி ஆணைய நிதிப் பகிர்வில், கிராம ஊராட்சிகளின் பங்கு 47 சதவீதத்திலிருந்து 60 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது.

★ மாநில நிதிக் குழு மானியத்திலிருந்து அனைத்து ஊராட்சிகளுக்கும் குறைந்தது தலா ரூபாய் 3 இலட்சம் வீதம் சமமாகவும், மீதமுள்ள தொகையை மக்கள் தொகை அடிப்படையிலும் வழங்கப்படுகிறது.

★ 2008–09ஆம் ஆண்டு முதல் மாநில நிதிக்குழு மானியத்திலிருந்து விடுவிக்கப்படும் நிதியில் குறைந்தது தலா ரூ 30 இலட்சம் வீதம் சமமாக வழங்கப்படுகிறது.

★ மத்திய அரசிடமிருந்து பெறப்படும் பன்னிரெண்டாவது நிதிக் குழு மானியம் முழுமையையும் கிராம ஊராட்சிகளுக்கு வழங்க அரசு ஆணையிடப்பட்டுள்ளது. இது 2006–07ஆம் ஆண்டு இரண்டாவது அரையாண்டு ஒதுக்கீடு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

★ தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சிப் பிரதிநிதிகளுக்கு, ஊராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் திட்டங்கள் பற்றி பயிற்சியளித்திட, முதன்முறையாக இந்த அரசால், 3 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து 'பயிற்சித் தொகுப்பு நிதி' (Training Corpus Fund) ஏற்படுத்தப்பட்டுள்ளது. மற்ற ஊராட்சிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள புதுமையான மற்றும் சிறப்பான நடவடிக்கைகளைக் கண்டறியும் பொருட்டு, ஊராட்சிப் பிரதிநிதிகளுக்கு பட்டறிவுப் பயணம் ஏற்பாடு செய்யப்பட்டது.

★ கிராம ஊராட்சிகளின் ஆண்டு செலவினத்தில் 70 சதவீதம் மின்சாரக் கட்டணத்திற்காக மட்டுமே செலவினம் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், மின்வாரியம் தொடர்புடைய நீண்டகாலப் பிரச்சினைகளுக்கு பின்வரும் தீர்வுகள் காணப்பட்டுள்ளன.

★ ஊரகப் பகுதிகளுக்கு மின் கட்டணம் யூனிட் ஒன்றுக்கு ரூபாய் 3.40 லிருந்து ரூபாய் 3 ஆக குறைக்கப்பட்டுள்ளது. ஊராட்சிகள் மின்வாரியத்திற்கு செலுத்த வேண்டிய நிலுவைக் கட்டணத்தின் மீதான அபராத வரி 12 சதவீதத்திலிருந்து 6 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

★ 13.03.2007க்கு முன்பு நிலுவையிலிருந்த மின் வாரியத்திற்கு வழங்க வேண்டிய அபராத வரி ரூ. 18.46 கோடி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. மின்கட்டணம் செலுத்துவதற்கான கால அளவு 20 நாட்களிலிருந்து 60 நாட்களாக உயர்த்தப்பட்டுள்ளது. ஊராட்சிகளிலுள்ள மின் இணைப்புகளுக்கு மீட்டர் பொருத்தாது பட்டியல் அளிப்பதை தவிர்க்க, அனைத்து மின் இணைப்புகளுக்கும் மீட்டர்கள் பொருத்தி, மீட்டர் அளவுகளின் அடிப்படையில் பட்டியல் வழங்குவது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. புதிய மின் கம்பங்கள் அமைப்பதில் அதிக செலவினமும், கால தாமதமும் ஏற்படுவதைத் தவிர்க்க, ஒரு மின் கம்பம் நிறுவ நிலையான கட்டணமாக ரூபாய் 9,500 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.



மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள், திருவள்ளூர் மாவட்டம், காரம்பாக்கம் ஊராட்சி கிராமசபைக் கூட்டத்தில் பங்கேற்றார். (02–10–2008)

★ "உத்தமர் காந்தி ஊராட்சி விருது" ஆண்டுதோறும் சிறப்பான மற்றும் புதுமையான முயற்சிகளை செயல்படுத்தும் 15 கிராம ஊராட்சிகளை கௌரவிக்கும் வகையில், அரசால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. 2006–07ஆம் ஆண்டுக்கான 'உத்தமர் காந்தி ஊராட்சி விருதுக்கு' தெரிவு செய்யப்பட்ட 15 கிராம ஊராட்சிகளுக்கு கேடயமும், ரூபாய் 5 லட்சம் ரொக்கப் பரிசும் அப்போது பதவி வகித்த கிராம ஊராட்சித் தலைவர்களுக்குப் பதக்கமும் நற்சான்றிதழும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 10.10.2007 அன்றும், 2007–08ஆம் ஆண்டுக்கான 'உத்தமர் காந்தி ஊராட்சி விருது' 19.12.08 அன்றும் வழங்கப்பட்டன.

★ ஊரக உள்ளாட்சிப் பிரதிநிதிகளுக்கு படிகளை உயர்த்தி வழங்கும்பொருட்டு, கிராம ஊராட்சித் தலைவர்க்கு மாதம் ரூ.330 என்பது 500 ரூபாய் என்றும், ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவருக்கு மாதம் ரூ. 550 என்பது ரூ. 750 ஆகவும், ஊராட்சி ஒன்றியக்குழு உறுப்பினருக்கு மாதம் ரூ.220 என்பது ரூ. 400 ஆகவும், மாவட்ட ஊராட்சித் தலைவருக்கு மாதம் ரூ. 1,100 என்பது ரூ. 1500 ஆகவும், மாவட்ட ஊராட்சி உறுப்பினருக்கு மாதம் ரூ. 330 என்பது ரூ. 500 ஆகவும் உயர்த்தி வழங்கப்படுகிறது. 12,618 ஊராட்சித் தலைவர்களுக்கும் மாவட்ட ஊராட்சித் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர்கள் மற்றும் மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள் ஆகிய அனைவருக்கும் அடையாள அட்டைகள் வழங்கப்பட்டன.

★ 2007ஆம் ஆண்டிலிருந்து ஆண்டுதோறும் நவம்பர் முதல் நாளன்று "உள்ளாட்சிகள் தினவிழா" அனைத்து ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி நிறுவனங்களால் கொண்டாடப்பட்டு வருகிறது. கிராம ஊராட்சிகள், பொது நிதியிலிருந்து வழங்கும் நிருவாக அனுமதி பணிக்கு ரூபாய் 1 இலட்சம் என்பது ரூபாய் 2 இலட்சம் என்றும், அதேபோல் ஊராட்சி ஒன்றியம் மேற்கொள்ளும் ஒரு பணிக்கு ரூபாய் 5 இலட்சம் என்பது ரூபாய் 10 இலட்சம் என்றும், மாவட்ட ஊராட்சி ஒரு பணிக்கு ரூபாய் 10 இலட்சம் என்பதை ரூ.20 இலட்சம் என்றும் உயர்த்தப்பட்டுள்ளது.

★ அனைத்து மாவட்ட ஊராட்சித் தலைவர்கள் மற்றும் ஊராட்சி ஒன்றியத் தலைவர்களுக்குத் கணினி மற்றும் பிரிண்டர்களைப் பயன்படுத்துவதற்கும், கிராம ஊராட்சிகளில் தகவல் தொடர்பு வசதிகளை மேம்படுத்த அனைத்து கிராம ஊராட்சி அலுவலகங்களுக்கும் தொலைபேசியையும் அனுமதித்து அரசு ஆணையிட்டுள்ளது.

★ 2007–2008 மற்றும் 2008–2009ஆம் ஆண்டுக்கு 9 வர்த்தக மற்றும் தொழில் நிறுவனங்களை தொழில் நிறுவனங்கள் சமூக பொருளாதார பொறுப்புணர்வு விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. 13.05.2006 அன்று நிலுவையிலிருந்த 1.540 இலட்சம் ஊரக வளர்ச்சித் திட்டப்பணிகளில் 1.538 இலட்சம் பணிகள் இதுவரை முடிக்கப்பட்டுள்ளன.

★ மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ஜனவரி 2007ஆம் ஆண்டில் தொடங்கி வைக்கப்பட்ட அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டமே தற்போது செயல்படுத்தப்படும் மத்திய மற்றும் மாநில அரசுத் திட்டங்களில், மிகப் பெரிய திட்டமாகும். இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஊராட்சியிலும் குளம், நூலகம், விளையாட்டு மையம், சுடுகாடு/இடுகாடு, குடிநீர்த் திட்டப் பணிகள் ஆகிய கட்டாயப் பணிகளும், தெரு விளக்குகள், மீன்வளர்ப்புக் குளங்கள், கிராமச் சந்தைகள் ஆகிய விருப்பப் பணிகளை உள்ளூர்த் தேவையின் அடிப்படையில்

மேற்கொள்ளப்படுகின்றன. கடந்த 3 ஆண்டுகளில் ரூ.1,332.28 கோடி செலவில் பணிகள் செயல்படுத்தப் பட்டுள்ளன.

- ★ மேலும், இதர துறைகளில் குறிப்பாக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், நெடுஞ்சாலைத் துறை, கல்வித் துறை மற்றும் வேளாண் துறை மற்றும் பிற துறை திட்டங்களின் நிதி ஆதாரங்களை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இதர திட்டங்களுடன் இயன்றளவு ஒருங்கிணைத்து, ஒவ்வொரு ஆண்டும் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்ளப்படவுள்ள கிராம ஊராட்சிகளில் செயல்படுத்தப்படும்.

- ★ **தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் – தமிழ்நாடு** : இத்திட்டம் 2.2.2006 முதல் கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, நாகப்பட்டினம், திண்டுக்கல், சிவகங்கை ஆகிய ஆறு மாவட்டங்களில் முதல் கட்டமாக செயல்படுத்தப்பட்டது. 1.4.2007 முதல் இத்திட்டம் தஞ்சாவூர், திருவாரூர், கரூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களுக்கு இரண்டாம் கட்டமாக விரிவுபடுத்தப்பட்டது. 1.4.2008 முதல் இத்திட்டம் தமிழ்நாட்டிலுள்ள இதர அனைத்து 20 மாவட்டங்களில், அதாவது காஞ்சிபுரம், திருவள்ளூர், வேலூர், சேலம், நாமக்கல், தருமபுரி, கிருஷ்ணகிரி, ஈரோடு, கோயம்புத்தூர், நீலகிரி, திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர், அரியலூர், புதுக்கோட்டை, மதுரை, தேனி, இராமநாதபுரம், விருதுநகர், தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி, மூன்றாம் கட்டமாக விரிவுபடுத்தப்பட்டது.

- ★ பிப்ரவரி 2006இல் தொடங்கப்பட்ட இத்திட்டத்தின் கீழ் 13.05.2006 வரையில் வெறும் 3 கோடி ரூபாயாக இருந்த செலவினம், ஜனவரி 2007இல் ரூபாய் 111 கோடியாகவும், தற்போது ரூபாய் 1,657.37 கோடிக்கு மேலாகவும் உயர்ந்துள்ளது. இத்திட்டத்தின் மூலம் 20.36 கோடி மனித நாட்கள் உருவாக்கப்பட்டு, 22,406 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. தமிழகத்தில் தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் பயன்பெறுவோரில், 82 சதவீதம் பெண்கள் ஆவர். மேலும், 59 சதவீதத்தினர் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் குடும்பங்களைச் சார்ந்த பயனாளிகள் ஆவார்கள். இதனால் ஊரகப் பகுதிகளில் பெண் தொழிலாளர்களின் ஊதியம் கணிசமாக உயர்ந்துள்ளது. தேசிய அளவில் தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டத்தை சிறப்பாக செயல்படுத்திய சிறந்த 22 மாவட்டங்களில் கடலூர், சிவகங்கை மற்றும் திண்டுக்கல் மாவட்டங்கள் இடம் பெற்றுள்ளன. இதற்கென கடந்த 02.02.2009 அன்று புது டில்லியில் நடைபெற்ற விழாவில் இம் மூன்று மாவட்டங்களும் பரிசுகளை வென்றுள்ளன.

- ★ தேசிய ஊரக வேலை உறுதித் திட்டப்பணிகளை விரைந்து முடிக்க 2,579 பணியாளர்கள் நியமிக்கப்பட்டனர்

- ★ பெரியார் நினைவு சமத்துவபுரம் – சமூக நீதியை மேம்படுத்தவும், சாதி சமயமற்ற சமத்துவ சமுதாயத்தை உருவாக்கவும் மக்கள் ஒற்றுமையுடனும், சகோதரத்துவத்துடனும் வாழ வேண்டும் என்ற தந்தை பெரியார் அவர்களின் செய்தியை பரப்பவும், இந்த அரசு 1997–98 ஆம் ஆண்டு முதல் 145 சமத்துவபுரங்களை அமைத்துள்ளது. இவ்வரசு, மேலும் 95 புதிய சமத்துவபுரங்களை அமைத்து அனைத்து சமூகத்தினரும் சகோதரத்துவத்துடன் ஒருமித்து வாழ்கின்ற அந்த ஒவ்வொரு சமத்துவபுர குடியிருப்பு முகப்பிலும் தந்தை பெரியார் அவர்களின் சிலையை அமைக்கும் இத்திட்டத்தின் முதற்கட்டமாக 2008–09ஆம் ஆண்டில் அனைத்து மாவட்டங்களிலும் (சென்னை, நீலகிரி மாவட்டங்கள் (தவிர) தலா ஒன்று வீதம், 29 சமத்துவபுரங்கள் அமைப்பதற்கு அரசு முடிவு செய்து, 146ஆவது சமத்துவபுரம் திருச்சி மாவட்டத்தில் 14.6.2009 அன்று திறக்கப்பட்டது.

- ★ இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின் கீழ் புதிய வீடுகளுக்கான மாநில அரசு வழங்கும் மானியத்தையும் 2008–09–ஆம் ஆண்டிலிருந்து ரூ.12,000/–லிருந்து ரூ.20,000/–ஆக உயர்த்தி வழங்கியது. கச்சாவீடு மேம்பாட்டுக்கு வழங்கப்படும் அலகுத் தொகை ரூ.12,500/–லிருந்து ரூ. 15,000/– ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 887.43 கோடி ரூபாய் செலவில் மூன்று ஆண்டுகளில் 1,77,597 குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன.

- ★ ஊராட்சி ஒன்றிய பள்ளி சீரமைப்புத் திட்டத்தின் கீழ் பல ஆண்டுகளாக பராமரிப்பின்றி பழுதடைந்த நிலையிலுள்ள ஊராட்சி ஒன்றிய ஆரம்பப் பள்ளிகள் மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் இதுவரை, ரூ.187.89 கோடி மதிப்பீட்டில் 14,474 பள்ளிகளில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

- ★ 13.05.2006க்கு பிறகு பிரதம மந்திரி கிராமச் சாலைகள் திட்டம், நபார்டு ஊரக உள்கட்டமைப்பு வளர்ச்சி நிதித் திட்டத்தின்கீழ் 2,796.91 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 19,527.77 கி.மீ. நீளமுள்ள சாலைப்பணிகள் மேம்படுத்தும் பணிகள் நடைபெறுகின்றன.

- ★ சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்ட நிதி 2008–09ஆம் ஆண்டு முதல் ரூபாய் 1.20 கோடியிலிருந்து ரூபாய் 1 கோடியே 50 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் 772 கோடி ரூபாய் செலவில் 28,710 பணிகள்

மேற்கொள்ளப்பட்டுள்ளன. பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியின்கீழ் 283 கோடி ரூபாய் செலவில் 12,413 பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. பிற்படுத்தப்பட்ட தொகுதிகளில் சிறப்புத் திட்டங்கள் 97,21,00,000 ரூபாய் செலவில் பணிகள் நடைபெறுகின்றன.

★ உதவி இயக்குநர் முதல் மக்கள் நலப்பணியாளர்கள் வரை 17,819 காலிப்பணியிடங்களை நிரப்பிட ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு, அவற்றில் 16,457 காலிப்பணியிடங்கள் இதுவரை நிரப்பப்பட்டுள்ளன.

★ மகளிர் சுய உதவிக்குழு மேம்பாட்டிற்கான திட்டங்களின் செயல்பாட்டில் ஒருங்கிணைப்பு கொண்டுவரும் விதமாக தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் ஜூலை, 2006 முதல் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை நிருவாகக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டது.

★ சிறந்த வகையில் கண்காணிப்புப் பணிகளை மேற்கொள்ள ஏதுவாக தலைமை அலுவலகத்தில் மூன்று கூடுதல் இயக்குனர் பணியிடங்கள் உருவாக்கப்பட்டன. மாவட்ட அளவில் கண்காணிப்பு அமைப்பை வலுப்படுத்தும் வகையில் செளிச்சந்தையிலிருந்து 60 உதவி திட்ட அலுவலர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்டனர்.

★ மகளிர் திட்டத்தின் கீழ் 31.03.2009 வரை 62.60 இலட்சம் மகளிரை உறுப்பினராக கொண்ட 3,91,311 சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டு உள்ளன. இவர்களின் மொத்த சேமிப்பு ரூபாய் 2,062.04 கோடி ஆகும். இவற்றுள் 12,01,504 மகளிரை உறுப்பினராக கொண்ட 75,094 புதிய சுய உதவிக் குழுக்கள் சூலை 2006 க்குப்பின் உருவாக்கப்பட்டன. 2008 – 2009 ஆம் ஆண்டு தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் கீழ் பணிபுரியும் தொழிலாளர்கள், குழுக்கள் அதிகம் அமைக்கப்படாத கிராம ஊராட்சிகள் மற்றும் நகர்ப்புற குடிசைப்பகுதிகளில் 24,601 புதிய சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. 31.03.2009 அன்றைய அளவில் சுய உதவிக் குழுக்களுக்கு ரூபாய் 3,400.71 கோடி கடன் இணைப்பு ஜூன், 2006 க்குப் பின் வழங்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில் ரூ. 1,858 கோடி கடன் இணைப்பு வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, இதுவரை ரூ 2,002.56 கோடி இலக்கு எய்தப்பட்டுள்ளது. 2006–2007 ஆம் ஆண்டு முதல் நகர்ப்புற சுய உதவிக் குழுக்களுக்கும் சுழல் நிதி வழங்கும் திட்டத்தினை அறிவித்தது. இரண்டு வருடங்களில் 30,000 சுய உதவிக் குழுக்களுக்கு ரூபாய் 30 கோடி சுழல் நிதி மானியமாக வழங்கப்பட்டன.

★ 2008– 2009ஆம் ஆண்டு ஊரக மற்றும் நகர்ப்புற சுய உதவிக் குழுக்களில் தகுதியுடைய அனைத்துக் குழுக்களுக்கும் (ஒரு லட்சத்து ஐம்பதாயிரம்) சுழல் நிதி வழங்க அரசு முடிவு செய்து, இதற்கென ரூபாய் 150 கோடியை அனுமதித்துள்ளது. 31.03.2009 வரை 1,31,413 சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக்கடனுடன் கூடிய சுழல் நிதி வழங்கப்பட்டுள்ளது.

★ 2006 –2007 மற்றும் 2007–2008 ஆம் ஆண்டில் 37,587 சுய உதவிக் குழுக்களுக்கு ரூபாய் 37.55 கோடி சுழல் நிதி மானியமாக வழங்கப்பட்டுள்ளது. தொழில் நடவடிக்கைகளை மேம்படுத்தும் வகையில் 9,217 சுய உதவிக் குழுக்கள் தொழில் தொடங்க ரூபாய் 89.11 கோடி மானியம் வழங்கப்பட்டுள்ளது. 2008–09இல் இத்திட்டத்தின் கீழ் ரூபாய் 125 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு அதில் ரூபாய் 56 கோடி 56,000 சுய உதவிக்குழுக்களுக்கு சுழல்நிதி வழங்கப்பட்டுள்ளது. 4,772 சுய உதவிக் குழுக்களுக்கு தொழில் கடன் ரூ. 50 கோடி வழங்கப்பட்டுள்ளது.

★ சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு ஒரு நாளைக்கு அளிக்கப்படும் பயிற்சித்தொகை ரூபாய் 7.50 லிருந்து ரூபாய் 45 ஆக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது. அதே போல் பயிற்சி பெறும் ஊக்குனர் மற்றும் பிரதிநிதிகளுக்கு ஒரு நாளைக்கு அளிக்கப்படும் பயிற்சித்தொகை ரூபாய் 20 லிருந்து ரூபாய் 45 ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது.

★ மகளிர் திட்ட செயலாக்கத்தில் முக்கிய அங்கம் வகிக்கும் தொண்டு நிறுவனங்களுக்கான அங்கீகார விதிமுறைகள் மற்றும் ஒப்பந்தங்கள் திருத்தப்பட்டு 438 நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. ஊராட்சி அளவிலான சுய உதவிக் குழுக்களின் கூட்டமைப்புகளை வலுப்படுத்தும் வகையில், சிறப்பாகச் செயல்படும் 6,912 கூட்டமைப்புகளுக்கு ஆதார நிதியாக தலா ரூபாய் 10,000/– வழங்கப்பட்டுள்ளது.

★ சிறப்பாகச் செயலாற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்களையும், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளையும் ஊக்குவிக்கும் வகையில் மாநில மற்றும் மாவட்ட அளவிலான மணிமேகலை விருதுகள் வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு வழங்கப்படுகின்றன.

★ சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கிடையே ஒற்றுமை மற்றும் குழு உணர்வை உருவாக்கும் நோக்கத்தில் ரூ. 1.68 கோடி செலவில் வட்டார மற்றும் மாவட்ட அளவில் பல்வேறு போட்டிகள் நடத்தப்படுகின்றன. மகளிர் திட்ட சுய உதவிக்குழுக்களுக்கு படிப்படியாக அடையாள அட்டை வழங்கதிட்டமிடப்பட்டு முன்னோடியாக தற்போது

4 வட்டாரங்களில் முடிவுற்று 15 மாவட்டங்களில் அடையாள அட்டை வழங்கும் பணி நடைபெற்று வருகிறது.

★ வாழ்ந்து காட்டுவோம் திட்டம் உலக வங்கி உதவியுடன் ரூ.717 கோடி செலவில் நான்கு கட்டங்களாக நடைமுறைபடுத்தப் படுகிறது.

★ ஆசிய வளர்ச்சி வங்கி நிதி உதவியுடன் மேற்கொள்ளப்படும் சுனாமி அவசரகால உதவித் திட்டத்தின் கீழ் இதுவரை சுமார் 285.72 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

★ வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ், சுய உதவிக் குழுக்களுக்குச் சுழல் நிதி, பொருளாதார மேம்பாட்டு உதவி மற்றும் உடல் ஊனமுற்றோர் சுயதொழில் தொடங்க மானிய உதவி ஆகியவை வழங்குவதில் இலக்கீடு 100 சதவிகிதம் எய்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் கடலோர மாவட்டங்களில் உள்ள உடல் ஊனமுற்றோர் ஒவ்வொருவருக்கும் 10,000 ரூபாய் மானியமாக அளித்து சுய தொழிலை மேற்கொள்ளும் வகையில் 34,634 உடல் ஊனமுற்றோருக்கு சுமார் 34.63 கோடி ரூபாய் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

★ கடலோர மாவட்டங்களில் உள்ள சுய உதவிக் குழுக்கள், மீனவர்கள், கைவினைஞர்கள், நெசவாளர்கள் போன்ற பல்வேறு பிரிவினருக்கும் தேவையான திறன் வளர்ப்பு பயிற்சி அளித்திடவும், உள்கட்டமைப்புகளை ஏற்படுத்தவும் 8 திட்டங்கள் சுமார் 23.58 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறைவேற்றப்படுகின்றன.

★ சுமார் 12.38 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சென்னை வள்ளுவர் கோட்ட வளாகம் அருகில் சுய உதவிக் குழுக்களுக்கென ஒரு வளாகம் கட்டும் பணி நடைபெற்று வருகின்றது.

★ ஏழு கடற்கரை மாவட்டங்களில் உள்ள 93 மீனவர் சங்கங்களுக்கு 2.96 கோடி ரூபாய் நடைமுறை மூலதனம் வழங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் சுமார் 5,000 மீனவர் சங்க உறுப்பினர்கள் நேரடியாகவும் சுமார் 20,000 மீனவர்கள் பயனாளிகளைச் சார்ந்தும் பயன்பெற்றுள்ளனர். கடல் பாதுகாப்புப் பயிற்சித் திட்டத்தின் கீழ் மீனவர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு ரூ.112.87 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பயிற்சிகள் துவங்கப்பட்டு இதுவரை 31,959 மகளிருக்கும் 36,890 மீனவர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

★ தஞ்சாவூர் மாவட்டத்தில் 4 மற்றும் நாகப்பட்டினம் மாவட்டத்தில் 11 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் ரூ.1 கோடியே 62 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளன.

★ 3.26 கோடி ரூபாய் செலவில் 11 கடலோர மாவட்டங்களில் 9 பால் குளிரூட்டும் நிலையங்கள், 37 பால் விநியோகிக்கும் நிலையங்கள், மற்றும் இந்த தொழிலில் ஈடுபடும் சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இதுவரை 3,645 நபர்களுக்கு பால் உற்பத்தி மற்றும் கறவை மாடுகள் பராமரித்தல் குறித்த பயிற்சியும், 400 நபர்களுக்கு பால் மற்றும் பாலிலிருந்து தயார் செய்யப்படும் பொருட்கள் விற்பனை குறித்தும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. தற்போது அனைத்து (37) பால் விநியோகிக்கும் நிலையங்களும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

★ 160 பால் கூட்டுறவு சங்கங்கள் புதுப்பிக்கப்பட்டு அவற்றிற்கு 80 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் உபகரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. 9 பால் குளிரூட்டு நிலையங்களும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

★ கைத்தறி ஏற்றுமதியை ஊக்குவிக்க கன்னியாகுமரி மாவட்டத்தில் 250 நெசவாளர்களுக்கு 61.09 இலட்சம் ரூபாய் ஒதுக்கீட்டில் திறன் வளர்ப்புப் பயிற்சி மற்றும் அவர்களது கைத்தறிகளை மேம்பாடு செய்து புதுப்பித்தல், மற்றும் பொதுவான பணி மையம் கட்டும் பணிகள் முடிவுற்றது. 250 கைத்தறிகளை மேம்படுத்தி இத்தறிகளில் நெசவாளர்களுக்குத் திறன் வளர்ப்புப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. 8 பணி மையக் கட்டடங்களில் சீரமைப்புப் பணிகள் முடிவுற்றன. விழுப்புரம் மாவட்டத்தில் 51 இலட்சம் ரூபாய் செலவில் 500 கைவினைஞர்கள் பயன்பெறும் கைவினைஞர் கிராமம் அமைக்கும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

★ கடலோர ஊராட்சிகளில் சுமார் 698.46 கி.மீ. நீளத்திற்கு 610 சாலைப்பணிகள் 94 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டு பணிகள் அனைத்தும் முடிக்கப்பட்டுள்ளன. கடலோர ஊராட்சி மன்றக் கட்டடங்களைப் புதுப்பித்தல், கூட்ட அரங்குகள் கட்டுதல், ஆகிய 196 பணிகள் ரூ.6 கோடியே 43 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன.

★ ராஜீவ் காந்தி மறுவாழ்வுத் திட்டத்தில் காஞ்சிபுரம், திருவள்ளூர், விழுப்புரம், நாகப்பட்டினம் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் கட்டாமல் விலகிய 2,687 வீடுகள் கட்டும் பணி சுமார் 63.95 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகின்றன. தற்போது சுமார் 1,539 வீடுகள் முற்றிலுமாகக் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இப்பகுதிகளில் அடிப்படை வசதிகள் சுமார் 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

★ தொண்டு நிறுவனங்கள் வீடுகள் கட்டிய பகுதிகளில் அடிப்படை வசதிகள் அரசின் மூலம் இராஜீவ் காந்தி மறுவாழ்வுத் திட்டத்தில் 53.40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 40.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 132 உட்புற சிமெண்ட் கான்கிரீட் சாலைகள், 4.72 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 4,732 சுகாதார கழிப்பறை வசதிகளும், 2.64 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தாழ்வான நிலப்பகுதிகளில் மண் நிரப்பும் பணிகளும், 5.43 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தெருவிளக்குகள் மற்றும் வீடுகளுக்கு மின் இணைப்புகள் அமைக்கும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு அனைத்துப் பணிகளும் முடிவு பெற்றுள்ளன.

★ 11 கடலோர மாவட்டங்களில் எளிதில் பாதிப்புக்குள்ளாகும் வீடுகள் மற்றும் 1,000 மீட்டருக்குள் உள்ள இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம் மற்றும் மீனவர் குடியிருப்புத் திட்டங்களின் கீழ் 10 ஆண்டுகள் பழமையான சுமார் 18,057 வீடுகள் ராஜீவ் காந்தி புரைமைப்பு திட்டத்தின் கீழ் சுமார் 494.73 கோடி ரூபாய் செலவில் மீளக் கட்டும் பணிகளில் இதுவரை 510 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மேற்கண்ட வீடுகள் கட்டும் பகுதிகளில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட நெறிமுறைகளின் படி அடிப்படை வசதிகளாக சுமார் 69.73 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 2,866 பணிகள் எடுக்கப்பட்டு அதில் 1,598 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

## பேரூராட்சிகள் துறை

★ மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களைத் தலைவராகக் கொண்டு, உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிக அளவில் அதிகாரம் அளிப்பது தொடர்பாக முடிவு செய்யும் பொருட்டு ஒரு உயர்நிலைக்குழு அரசினால் அமைக்கப்பட்டு, இக்குழுவின் 68 பரிந்துரைகளில், இதுவரை 42 பரிந்துரைகளின் மீது ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. பேரூராட்சிப் பகுதிகளில் 28,565 மனைகள் வரன்முறைப்படுத்தப்பட்டு ரூ.7.25 கோடி வசூலிக்கப்பட்டது.

★ பன்னிரெண்டாவது நிதிக்குழு பரிந்துரைகளின் அடிப்படையில் தமிழ்நாட்டிலுள்ள 561 பேரூராட்சிகளுக்கு 2005–06 முதல் 2009–2010 வரை ரூ.160.51 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதனடிப்படையில், ஆண்டுதோறும் ரூ.32.10 கோடி விடுவிக்கப்பட்டு சீரிய முறையில் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

★ மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 25.11.2006 அன்று, தமிழில் பெயர் வைக்கப்படும் திரைப்படங்களுக்கு வரிவிலக்கு அளிக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. இதன் பயனாக உள்ளாட்சிகளுக்கு ஏற்படும் வருவாய் இழப்பினை ஈடுசெய்ய வேண்டி இழப்பீடு மானியமாக 2007–08–இல் ரூ.8 கோடியும், 2008–09–இல் ரூ.1.75 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

★ இயக்க மற்றும் பராமரிப்பு நிதி பற்றாக்குறையினை ஈடுசெய்வதற்காக பேரூராட்சி ஒன்றுக்கு ரூ. 1 இலட்சம் வீதம் 561 பேரூராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

★ மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 3.9.2007 அன்று துவக்கி வைக்கப்பட்ட அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் 2007–2008 நிதியாண்டில் 140 பேரூராட்சிகளில் ரூ.74.05 கோடி மதிப்பீட்டில் 1,493 பணிகள் மேற்கொள்ளப்பட்டு அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன. 2008–2009ஆம் நிதியாண்டில் இரண்டாவது கட்டமாக 140 பேரூராட்சிகளில் மொத்தம் 1,438 பணிகள் ரூ.78.48 கோடி மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு 1,327 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

★ பேரூராட்சிகளின் ஒட்டுமொத்த மேம்பாட்டிற்காக பிற துறைகளின் மூலம் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களை ஒருங்கிணைத்து பல்வேறு திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டம் செயல்படுத்தப்படும் பேரூராட்சிகளில் 388 முழு சுகாதார / துப்புரவு முகாம்கள்,229 பசுமைப்படுத்தும் இயக்கம், 261 மருத்துவ முகாம்கள் மற்றும் ஹெச்.ஐ.வி / எய்ட்ஸ் மற்றும் குழந்தைத் தொழிலாளர் ஒழிப்பு போன்ற 241 இதர விழிப்புணர்வு முகாம்கள் என மொத்தம் 1,119 விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன.

★ ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புரப் புனரமைப்புத் திட்டத்தின்கீழ் ரூ.13.17 கோடி செலவில் குடிநீர் அபிவிருத்தித் திட்டப்பணிகள் நடைபெற்று வருகின்றன. சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புர அடிப்படை வசதி மேம்பாட்டுத் திட்டம், ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாகும். இத்திட்டத்தின் கீழ் ரூ.31.84 கோடி மதிப்பீட்டில் 28 பேரூராட்சிகளில் 479 சாலை மற்றும் வடிகால் பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன.

★ ரூ. 18.39 கோடி மதிப்பீட்டில் 16 பேரூராட்சிகளில் தனிக்குடிநீர் திட்டங்கள் முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. ரூ.91.13 கோடி மதிப்பீட்டில் இராமநாதபுரம் கூட்டுக்குடிநீர் திட்டத்தின் கீழ், இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை மாவட்டங்களைச் சேர்ந்த 11 பேரூராட்சிகளில் குடிநீர் திட்டப்பணிகள் முடிக்கப்பட்டு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது.

★ ஒகேனக்கல் குடிநீர் திட்டத்தின் கீழ் தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் 17 பேரூராட்சிகளில் 28,56,300 பொதுமக்கள் பயன்பெறும் வகையில் குடிநீர் திட்டப்பணிகளை நிறைவேற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

★ ஒருங்கிணைந்த வீடுகள் மற்றும் குடிசை பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் (IHSDP) 8 பேரூராட்சிகளில் ரூ.26.29 கோடி மதிப்பீட்டில் 2,465 வீடுகள் கட்டும் பணிகளும் மற்றும் நகர்ப்புர ஏழைகளுக்கான அடிப்படை வசதித் திட்டத்தின் (BSUP) கீழ் ரூ.19.58 கோடி மதிப்பீட்டில் 5 பேரூராட்சிகளில் 1,901 வீடுகள் கட்டும் பணிகளும் முன்னேற்றத்தில் உள்ளன.

★ பகுதி II திட்டத்தில் 2006–07ஆம் ஆண்டில் ரூ.17.20 கோடி மதிப்பீட்டில் 100 பேரூராட்சிகளில் அடிப்படை கட்டமைப்பு வசதிக்காக 723 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

★ 2007–08ஆம் ஆண்டில் மின்சார சிக்கனத்தினை கருத்தில் கொண்டு, ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் 50 பேரூராட்சிகளிலும் 2008–09ஆம் ஆண்டில் ரூ.100 இலட்சம் மதிப்பீட்டில் 200 பேரூராட்சிகளிலும் ஒளிரும் அடர்மின் விளக்குகள் பொருத்தப்பட்டன.

★ 450 பேரூராட்சிகளுக்கு கணினிகள் வழங்கப்பட்டுள்ளன.

★ 2007–08ஆம் ஆண்டில் ரூ.100 இலட்சம் மதிப்பீட்டில் 10 பேரூராட்சிகளில் நவீன இறைச்சிக் கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

★ 2007–08ஆம் ஆண்டில் ரூ.200 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

★ 2006–2007இல் மாநில நிதி பகிர்வு சமன்பாட்டு நிதியிலிருந்து 31 பேரூராட்சிகளில் பேருந்து நிலைய மேம்பாட்டுப் பணிகள் ரூ.7.15 கோடி மதிப்பீட்டில் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

★ 2007–08ஆம் ஆண்டு ரூ.1,342.35 இலட்சம் செலவில் நவீன பேருந்து நிலையங்கள் அமைக்கும் பணியில் 3 பேரூராட்சிகளில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 15 பேரூராட்சிகளில் பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன. மேலும் 2 பேரூராட்சிகளில் பணிகள் துவங்க நடவடிக்கையில் உள்ளன.

★ பேரூராட்சி பகுதிகளுக்கு வருகை தரும் உள்நாட்டு மற்றும் சுற்றுலா பயணிகளின் வசதிக்காக அடிப்படை வசதிகளை மேம்படுத்த 10 பேரூராட்சிகளில் ரூ.625.57 இலட்சம் மதிப்பீட்டில் 90 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு 78 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

★ 12வது நிதிக்குழு பரிந்துரையின்படி அனுமதிக்கப்படும் மானிய உதவி மூலம் 2007–08ஆம் ஆண்டில் ரூ.32.10 கோடி மதிப்பீட்டில் 2,097 பணிகள் முடிக்கப்பட்டன.

★ 2008–09ஆம் நிதி ஆண்டில், திடக்கழிவு மேலாண்மை திட்ட அடிப்படை கட்டமைப்பு மற்றும் வாகனங்கள் வாங்குதல், சாலைகள் மேம்படுத்துதல் மற்றும் இதர பணிகள் உட்பட ரூ.32.10 கோடி மதிப்பீட்டில் 1,953 பணிகள் முடிக்கப்பட்டன.

★ 514 பேரூராட்சிகளில் திடக்கழிவுகளிலிருந்து இயற்கை உரம் மற்றும் மண்புழு உரம் தயாரிக்கும் உரபூங்காக்கள் உருவாக்கப்பட்டு உரத்தயாரிப்பு சிறப்பாக நடைபெறுகிறது.

★ மாநிலத்தில் உள்ள 561 பேரூராட்சிகளில் செயல்படுத்தப்படும் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தில் 10,355 மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

★ சுனாமி அவசர கால உதவித் திட்டத்தின் கீழ் (TEAP), ரூ.35.02 கோடியில் 384 பணிகள் முடிக்கப்பட்டன. குடிநீர் வழங்குதல் மற்றும் துப்புரவு வசதிகள் செய்து கொடுப்பதற்காக ரூ.8.94 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 112 பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இது வரை ரூ.6.62 கோடி செலவிடப்பட்டு, பெரும்பாலான பணிகள் முடிக்கப்பட்டு உள்ளன.

★ சுனாமியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும் பொருட்டு, ரூ.12.78 கோடி நிதி ஒதுக்கீடு வழங்கியதில், இதுவரை ரூ.12.47 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது. இந்த நிதியின் வாயிலாக 19 பேரூராட்சிகளிலும் வாழ்வாதாரம் மற்றும் மறுவாழ்வு அளிக்கும் பணிகளை மேற்கொண்டதில் 60,966 உறுப்பினர்கள் அடங்கிய 3,387 சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டு குழுக்களின் உறுப்பினர்கள் பெரும் பயன் அடைந்துள்ளனர்.

★ அவசரகால சுனாமி புனரமைப்புத் திட்டத்தின் கீழ், (ETRP) சுனாமி தாக்கியதால் பாதிக்கப்பட்ட மக்களின் துயர் துடைக்க மற்றும் அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்க ரூ.19.34 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 6 கடலோர மாவட்டங்களில் உள்ள 18 பேரூராட்சிகளில் மறு கட்டமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.



# குடிநீர் வழங்கும் திட்டங்கள்

**மாண்புமிகு துணை முதலமைச்சர்**
**திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்**

★ தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சித் திட்டம் III-ன் கீழ் திருப்பூர், இனாம் கரூர், ஆலந்தூர், வளசரவாக்கம் நகராட்சிகளில் பாதாளச் சாக்கடைத் திட்டப்பணிகள் முடிவடைந்துள்ளன.

★ ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புரப் புனரமைப்புத் திட்டம் (JNNURM) மற்றும் சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (UIDSSMT) ஆகியவற்றின்கீழ் நகர்ப்புரங்களில் ரூ.5,856.34 கோடி அளவுக்கான பெரிய உள்கட்டமைப்புத் திட்டங்களுக்கு மத்திய அரசிடமிருந்து ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

★ மண் சாலைகளைத் தார்ச் சாலை மற்றும் சிமெண்ட் கான்கிரீட் சாலைகளாக மாற்றிட, நகராட்சி/மாநகராட்சி பொது நிதி மற்றும் மானியத்தொகையினைப் பயன்படுத்தி 1,227.26 கி.மீ. மண் சாலைகள் ரூ.191.56 கோடி செலவில் தார் மற்றும் சிமெண்ட் சாலைகளாக மாற்றப்பட்டுள்ளன.

★ 38 நகராட்சிகளில் 38 தாய் சேய் நல விடுதி மேம்பாட்டுப் பணிகள் முடிவடைந்துள்ளன.

★ ரூ25 கோடி மதிப்பீட்டில் 6 மாநகராட்சிகள் மற்றும் 97 நகராட்சிகளில் நவீன இறைச்சிக் கூடங்களைக் கட்டுவதற்கு அனுமதி வழங்கியதில் 1 மாநகராட்சியிலும், 63 நகராட்சிகளிலும் பணிகள் முடிவடைந்துள்ளன.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், வேலூர் மாநகராட்சியைத் தொடங்கிவைத்து, நினைவுத்தூணைத் திறந்துவைத்தார்.
மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள், அமைச்சர் பெருமக்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடன் உள்ளனர். (1-8-2008)

★ 60,000க்கும் மேற்பட்ட மக்கள்தொகை உள்ள அனைத்து நகரங்களிலும் நவீன எரிவாயு தகன மேடைகளை உருவாக்குதல் திட்டத்தின்கீழ், தூத்துக்குடி மற்றும் ஈரோடு நகராட்சிகளில் பணிகள் முடிவடைந்துள்ளன.

★ நாகர்கோயில் நகராட்சியில் ரூ.156 இலட்சம் செலவில் நவீன வசதிகளுடன் பேருந்து நிலையம் கட்டி முடிக்கப்பட்டு செயல்படத் தொடங்கியுள்ளது. இப்பேருந்து நிலையம் மூலம் நகராட்சிக்கு ஆண்டு வருமானம் ரூ.2.79 இலட்சத்திலிருந்து ரூ.26 இலட்சமாக உயர்ந்துள்ளது. கோவில்பட்டி நகராட்சிப் பேருந்து நிலையம் ரூ.180 இலட்சத்தில் புதுப்பிக்கப்பட்டுள்ளது. இராஜபாளையம் நகராட்சியில் புதிய பேருந்து நிலையம் கட்டிமுடிக்கப்பட்டுள்ளது.

★ திருவண்ணாமலை பேருந்து நிலையம் ரூ. 38 இலட்சம் மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

★ கிருஷ்ணகிரி நகராட்சியில் ரூ.678 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாகப் பேருந்து நிலையம் கட்டிமுடிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

★ நெல்லிக்குப்பம் நகராட்சியில் ரூ.90 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாகப் பேருந்து நிலையம் கட்டி முடிக்கப்பட்டு 7.11.2008 அன்று திறக்கப்பட்டுள்ளது.



மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள்
சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தின்
கீழ்ப்பாக்கம் குடிநீர் பகிர்மான நிலையத்தில்
ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புரப் புனரமைப்புத் திட்டத்தின் கீழ் நடைபெற்றுவரும்
திட்டப் பணிகளைப் பார்வையிட்டார். (23-9-2008)



இராமநாதபுரம் கூட்டுக்குடிநீர் திட்டப் பணிகளை மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆய்வு செய்தார். உடன் மாண்புமிகு குடிசை மாற்று வாரியம் மற்றும் இடவசதிக் கட்டுபாடுத்துறை அமைச்சர் திரு.சுப.தங்கவேலன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடன் உள்ளனர்.

- ★ உள்ளகரம் புழுதிவாக்கம் நகராட்சியில் ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் பேருந்து நிலையம் கட்டி முடிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது.
- ★ மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் திருப்பூர் மாநகராட்சி மற்றும் ஈரோடு மாநகராட்சிகள் 01.01.2008 முதலும், வேலூர் மற்றும் தூத்துக்குடி மாநகராட்சிகள் முறையே 01.08.2008 மற்றும் 05.08.2008 முதலும் தொடங்கி வைக்கப்பட்டன. மாநகராட்சிகளில் தேவையான உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த ஒருமுறை மானியமாக ஒவ்வொரு மாநகராட்சிக்கும் ரூ. 5 கோடி அரசால் வழங்கப்பட்டு வருகிறது.
- ★ நகராட்சிகள் திரும்ப செலுத்த வேண்டிய அசல் மற்றும் வட்டித் தொகை ரூ.787.42 கோடி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.
- ★ நகராட்சிகளுக்குச் சொந்தமான கடைகளை ஒரே நேரத்தில் 3 ஆண்டுகளுக்குக் குத்தகைக்கு விடவும், அதன்பின் தன்னியல்பாகவே 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை 15 சதவீதம் உயர்வுடன் குத்தகை காலத்தை 9 ஆண்டுகள் வரை புதுப்பிக்கவும், முதல் குத்தகைதாரர்களின் வாரிசுதாரர்கள் அனைத்துப் பாக்கித் தொகையினையும் செலுத்தி, நகர்மன்றம் நிர்ணயிக்கும் குத்தகைத் தொகையினை செலுத்த ஒப்புக்கொள்ளும்



மாண்புமிகு துணை முதலமைச்சர்
திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள்
சென்னை குடிநீர் வாரியத்தின் சார்பில் 500 சதுர அடி வரையில் உள்ள வீடுகளுக்கு 100 ரூபாயில் குடிநீர் இணைப்பு வழங்கும் திட்டத்தினைத் தொடங்கிவைத்தார்.
(9–9–2008)

பட்சத்தில் அவர்கள் பெயரில் குத்தகை உரிமையினை மாற்றம் செய்யலாம் என்பன போன்ற புதிய சலுகைகளை வழங்கி அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

★ நகராட்சி நிருவாக ஆணையரகத்தால் மொத்தம் 560 பேருக்குக் கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் 2,016 புதிய பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

★ மதுரை மாநகராட்சியில் 40 துப்புரவுப் பணியாளர்கள், ஆலந்தூர் நகராட்சியில் 7 துப்புரவுப் பணியாளர்களை மயானப் பணியாளர்களாகப் பணி நியமனம் செய்து ஆணை வழங்கப்பட்டது.

★ 2008–09ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சட்டமன்றத்தில், நிதி நிலையில் நலிவடைந்த 30 நகராட்சிகளில், ஒவ்வொரு நகராட்சியிலும் 0.75 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 'புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்' செயல்படுத்தப்படும் என்ற அறிவிப்பினை வெளியிட்டார்கள்.

★ அதனைத் தொடர்ந்து, 2005–06 முதல் 2007–08 வரையிலான மூன்று ஆண்டுகளில் வசூலிக்கக்கூடிய வரி மற்றும் வரியில்லா இனங்களின் சராசரியினைக் கணக்கிட்டு அதனை 2001–ஆம் ஆண்டின் மக்கள் தொகையினால் வகுத்து, அதன்படி நிதி நிலையில் நலிவடைந்த 30 நகராட்சிகளைத் தேர்வு செய்து ரூ. 22.50 கோடியினை முழு மானியமாக அனுமதித்து குடிநீர் விநியோகம், கட்டடம் கட்டுதல், பேருந்து நிலையம் அபிவிருத்தி செய்தல், சாலை மற்றும் மழைநீர் வடிகால், இதரப் பணிகள் ஆகியவைகளுக்கு முன்னுரிமை வழங்கி நிறைவேற்றிட ரூ. 2,250 கோடி அனுமதித்து பணிகள் நிறைவேற்றப்படுகின்றன.

★ கிருஷ்ணா குடிநீர் வழங்கல் திட்டத்தின் கீழ் பெறப்பட்ட தண்ணீரை சுத்திகரிப்பதற்காக சென்னைக்கு அருகிலுள்ள செம்பரம்பாக்கத்தில் ரூ.296 கோடி மதிப்பீட்டில் நாளொன்றுக்கு 530 மில்லியன் லிட்டர் குடிநீர் சுத்திகரிக்கும் நிலையம் மற்றும் நீர் கொண்டு செல்லும் குழாய்கள் அமைக்கும் பணி முடிவடைந்து 19–7–2007 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. தற்போது, இந்நிலையத்தில் இருந்து சென்னை நகருக்கு நாளொன்றுக்கு 135 மில்லியன் லிட்டர் நீர் சுத்திகரிக்கப்பட்டு வழங்கப்படுகிறது.

★ கத்திவாக்கம் நகராட்சிக்குக் குடிநீர் வழங்கும் திட்டம் ரூபாய் 6.22 கோடி மதிப்பீட்டில், நிறைவேற்றப்பட்டு 28.02.2009 அன்று மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டு, 40,000 மக்கள் பயனடைகிறார்கள்.

★ நலிவடைந்த பிரிவினரும் குடிநீர் இணைப்புப் பெற 500 சதுர அடி வரையுள்ள குடியிருப்புகளுக்கு ரூபாய் 100 மட்டுமே இணைப்புக் கட்டணமாக பெற்றுக்கொண்டு குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டு வருகிறது. இவ்வகையில் இதுவரை 3,697 குடும்பங்கள் பயன் பெற்றுள்ளனர்.

★ சென்னைக் குடிநீர் வாரியம் கடல் நீரைக் குடிநீராக்கும் நிலையத்தை, வறட்சியைத் தடுக்கும் முயற்சியாக வடிவமைத்து, சொந்தமாக நிறுவி, இயக்கி மற்றும் திருப்பித்தரும் (DBOOT) அடிப்படையில் மீஞ்சூர் அருகேயுள்ள காட்டுப்பள்ளியில் நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் உற்பத்தித் திறன்கொண்ட கடல் நீரைக் குடிநீராக்கும் நிலையத்தை அமைக்கும் பணி நடப்பாண்டில் முடிவுற்று குடிநீர் வழங்கப்படும். மீஞ்சூரில் அமைந்து வரும் கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையத்திலிருந்து கிடைக்கப்பெறும் குடிநீரை சென்னை நகர விநியோகத்திற்குக் கொண்டு செல்ல தேவைப்படும் கட்டமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன.

★ சென்னை மாநகரின் பெருகி வரும் குடிநீர்த் தேவையை சமாளிக்கவும், மற்றும் வாழ்க்கைக்கு இன்றியமையா தேவையான குடிநீரை வழங்கவும், நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் கடல் நீரைக் குடிநீராக்கும் மேலும் ஒரு நிலையத்தை கிழக்குக் கடற்கரைச் சாலையில் நெம்மேலியில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. 02.01.2009 அன்று நடந்த மத்திய அரசின் பொருளாதார விவகார அமைச்சரவைக் கூட்டத்தில் ரூ.871.24 கோடி மானியமாக வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதற்காக, 2008–2009 ஆண்டின் திட்டத்தில் ரூ 300 கோடி முதல் தவணையாக மத்திய அரசிடம் இருந்து பெறப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு பன்னாட்டு ஒப்பந்த அடிப்படையில் ஒப்பந்தங்கள் கோரப்பட்டுள்ளது. பணிகள் நடப்பாண்டில் துவங்கப்பட்டு 24 மாதங்களில் முடிவடையும்.

★ இராஜீவ் காந்தி தகவல் தொழில்நுட்ப சாலையில் குடிநீர் மற்றும் கழிவு நீர் வசதிகள் அமைக்கும் பணிகள் ரூ 41.77 கோடி திட்ட மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

★ பூண்டி நீர்த்தேக்கத்திலிருந்து புழல் சுத்திகரிப்பு நிலையத்திற்கு நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் நீரைக் கொண்டு செல்ல தேவையான கீழ்நிலைத் தொட்டி மற்றும் நீரேற்று நிலையம் அமைக்கும் பணி ரூ. 9.11 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

★ பெருங்குடியில் கூடுதலாக நாள் ஒன்றுக்கு 60 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தை ரூ. 61.19 கோடி திட்ட மதிப்பீட்டில் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

★ சென்னைக் குடிநீர் வாரியத்தின் கழிவுநீர் சுத்திகரிப்புத் திறனை மேலும் அதிகரிக்கும் விதமாக, நாளொன்றுக்கு 54 மில்லியன் லிட்டர் திறன்கொண்ட கூடுதல் கழிவுநீர் சுத்திகரிக்கும் நிலையம் ஒன்று ரூ. 58.87 கோடி மதிப்பீட்டில் நெசப்பாக்கத்தில் செயல்படுத்தப்பட உள்ளது.

★ போரூர் குடிநீர் அபிவிருத்தித் திட்டப் பணிகள் 2 சிப்பங்களாகப் பிரிக்கப்பட்டு ரூ. 12.36 கோடி மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

★ மதுரவாயல் குடிநீர் அபிவிருத்தித் திட்டத்திற்காக ரூ. 23.30 கோடி மதிப்பீட்டில் பணிகள் 3 சிப்பங்களாகப் பிரிக்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.

★ ஆவடி குடிநீர் அபிவிருத்தித் திட்டம், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 9.08.2008–இல் துவக்கி வைக்கப்பட்டு, ரூ. 103.84 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.

★ ஆவடி பாதாள சாக்கடைத் திட்டத்தினை ரூ. 158.05 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

★ திருவொற்றியூர் நகராட்சிப் பகுதியில் கழிவுநீர் அமைப்பை மேம்படுத்துதல் மற்றும் விரிவுபடுத்தும் பணி தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சித் திட்டம் III–இன் நிதி உதவியுடன் ரூ. 25.60 கோடி திட்ட மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகின்றன.




மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள்
சென்னை மாநகராட்சிப் பள்ளிகளுக்கு 844 கணினிகளையும் மற்றும் மாநகராட்சிப் பள்ளி ஆசிரியர்களுக்கு ஊக்கத் தொகையினையும் வழங்கினார்கள்.
வணக்கத்திற்குரிய சென்னை மாநகராட்சி மேயர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடன் உள்ளனர்.(19–2–2009)

★ அம்பத்தூர் நகராட்சியில் இரண்டாம் கட்டப்பணியின் கீழ் கழிவு நீரேற்று நிலையம் மற்றும் கழிவுநீர் கொண்டு செல்லும் விசைக் குழாய்கள் அமைக்கும் பணிகள் ரூ. 7.50 கோடி மதிப்பீட்டு செலவில் நடைபெற்று வருகின்றன.

★ பல்லவபுரம் கழிவு நீரகற்று கட்டமைப்புப் பணியை ரூ. 71.50 கோடி திருத்திய மதிப்பீட்டில் செயற்படுத்தி வருகிறது.

★ மாதவரம் பாதாள சாக்கடைத் திட்டம் பிரிவு 1, ரூ. 36.72 கோடி திருத்திய மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

★ சென்னைக் குடிநீர் வாரியம் கிண்டியிலுள்ள திரு.வி.க. தொழிற்பேட்டையில் கழிவு நீரகற்று கட்டமைப்பு முறையை மேம்படுத்தி சீரமைப்பதற்கான பணிகளை ரூ.7.35 கோடி மதிப்பீட்டில் மேற்கொண்டு வருகின்றது.

★ சென்னை மாநகரில் 9 கழிவுநீர்க் குழாய்களை மேம்படுத்துதல் மற்றும் 6 கழிவுநீரேற்று நிலையங்களை மேம்படுத்தும் பணிகள் ரூ.22.16 கோடி மதிப்பீட்டில் சென்னை நதிநீர் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

★ உள்ளகரம்–புழுதிவாக்கம் குடிநீர் அபிவிருத்தித் திட்டப் பணிகள் ரூ.24.24 கோடி மதிப்பீட்டிலும், நெற்குன்றம் குடிநீர் அபிவிருத்தித் திட்டம் ரூ.19.17 கோடி மதிப்பீட்டிலும், திருவொற்றியூர் குடிநீர் அபிவிருத்தித் திட்டம் ரூ.85.11 கோடி மதிப்பீட்டிலும், ஆலந்தூர் குடிநீர் அபிவிருத்தித் திட்டம் ரூ.64.39 கோடி மதிப்பீட்டிலும், அம்பத்தூர் குடிநீர் அபிவிருத்தித் திட்டம் ரூ.267.08 கோடி மதிப்பீட்டிலும் நடப்பாண்டில் செயல்படுத்தப்பட உள்ளது.



# புதிய தொழிற்சாலைகள் தொடக்கம்; பல்லாயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு

**மாண்புமிகு துணை முதலமைச்சர்**
**திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்**

★ மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் தலைமையில் தமிழகத்தில் தொழில் வளர்ச்சிக்கு உதவிட, தொழில் மற்றும் வர்த்தக அமைப்புகளின் பிரதிநிதிகளைக் கொண்ட சிறப்புத் தொழில் முனைப்புக்குழு (Special Task Force) 8.11.2006 அன்று அமைக்கப்பட்டது.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் முன்னிலையில், 800 கோடி ரூபாய் முதலீட்டில் கட்டுமானம் மற்றும் சுரங்கத் தொழில்களுக்குப் பயன்படும் கனரகப் பொறியியல் இயந்திரங்களைத் தயாரிப்பதற்கான, விரிவாக்கத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம், கேட்டர்பில்லர் இந்தியா நிறுவனத்திற்கும், தமிழக அரசிற்குமிடையே கையெழுத்தானது. உடன் தலைமைச் செயலாளர் திரு.கே.எஸ்.ஸ்ரீபதி இ.ஆ.ப., உள்ளார். (18–12–2008)

- ★ தொழில் வளர்ச்சியில் பின்தங்கியுள்ள பகுதிகளைக் (Blocks) கண்டறிந்து தொழில்கள் தொடங்கும் வழிமுறைகளை நிர்ணயிப்பதற்காகத் தொழில்துறைச் செயலாளர் தலைமையில் உயர்நிலைக் குழு ஒன்று 20.7.2006 அன்று அமைக்கப்பட்டது.

- ★ தொழில் வளர்ச்சிக்கான வழிவகைகளைக் குறிக்கோள்களாகக் கொண்டுள்ள புதிய தொழில் கொள்கை வகுக்கப்பட்டு 5.11.2007 அன்று வெளியிடப் பட்டுள்ளது.

- ★ இந்தியாவிலேயே முதல் முறையாகக் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் கொள்கை உருவாக்கப்பட்டுள்ளது.

- ★ **2006க்குப்பின் புதிய தொழிற்சாலை ஒப்பந்தங்கள் – (31.3.2009 வரை)**

**அமெரிக்காவின் மோட்டோரோலா தொழிற்சாலை – திருப்பெரும்பதூர்**

7.6.2006இல் ஒப்பந்தம் – 135 ஏக்கர் நிலப் பரப்பு, 27.4.2008 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டு, உற்பத்தியைத் தொடங்கியுள்ளது. இதுவரை 250 கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்டுள்ளது. 3,560 பேருக்கு நேரடியாகவும், 10,680 பேருக்கு மறைமுகமாகவும் வேலைவாய்ப்பு வழங்கும். அதில் இதுவரை 600 பேருக்கு நேரடியாகவும், 400 பேருக்கு மறைமுகமாகவும் வேலைவாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன. தொழிற்சாலை அமைந்துள்ள திருப்பெரும்புதூர் சுற்றுவட்டாரத்தில் 5 அரசுப் பள்ளிகளில் தொண்டு நிறுவனத்தின் மூலம் நூலகம் மற்றும் கணினி ஆற்றல் வளர்ச்சிக்காக 35 இலட்ச ரூபாய் செலவில் பணிகளை மேற்கொண்டுள்ளது.

- ★ **அப்போலோ ரேடியல் டயர்ஸ் தொழிற்சாலை – ஒரகடம்**

7.8.2006இல் ஒப்பந்தம் – 135 ஏக்கர் நிலப்பரப்பு, 520 கோடி ரூபாய் முதலீடு செய்திட இலக்கு நிர்ணயிக்கப்பட்டதில், இதுவரை 400 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. கட்டடம் மற்றும் இயந்திர சாதனங்களை நிறுவுதல் போன்ற பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. தொழிலாளர் நியமனமும் பயிற்சிகள் அளித்தலும் நடைபெறுகின்றன. சோதனை உற்பத்தி 2009 செப்டம்பரில் தொடங்கும். 2,000 பேருக்கு நேரடியாகவும், 6,000 பேருக்கு மறைமுகமாகவும் வேலைவாய்ப்புகள் வழங்கும்.

- ★ **அமெரிக்காவின் டெசால்வ் செமிகண்டக்டர் ஆட்டோமோபைல்ஸ் தொழிற்சாலை – திருப்பெரும்பதூர்**

18.8.2006இல் ஒப்பந்தம்; 50 ஏக்கர் நிலப்பரப்பு, 62 ஆயிரம் சதுர அடி பரப்பில் முதற்கட்ட கட்டுமானப் பணிகள் நடைபெறுகின்றன. 2009 ஜூன் திங்களில் செயல்படத் தொடங்கும். 1,000 கோடி ரூபாய் முதலீட்டிலான இத்தொழிற்சாலைக்கு இதுவரை 81 கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்டுள்ளது. 1,700 பேருக்கு நேரடியாகவும், 5,100 பேருக்கு மறைமுகமாகவும் வேலைவாய்ப்புகள் வழங்கும் இத் தொழிற்சாலையில் இதுவரை 103 பணியாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். தரமணியில் பயிற்சிப் பிரிவு தொடங்கப்பட்டு பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.

- ★ **டெல் கம்ப்யூட்டர்ஸ் தொழிற்சாலை – திருப்பெரும்புதூர்**

14.9.2006இல் ஒப்பந்தம், 50 ஏக்கர் நிலப்பரப்பு, 280 கோடி ரூபாய் முதலீடு இலக்கில் இதுவரை 133 கோடி ரூபாய் செலவு, ஜூலை 2007இல் வணிக உற்பத்தியைத் தொடங்கியது. 22.4.2008 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. 1,100 பேருக்கு நேரடியாகவும், 4,000 பேருக்கு மறைமுகமாகவும் வேலைவாய்ப்புகளை வழங்கக்கூடிய இத்தொழிற்சாலையில் 300 நேரடி நியமனங்கள் நடைபெற்றுள்ளன.

★ **குரோத்லிங்க் நிறுவனம் – செய்யாறு**

19.9.2006இல் ஒப்பந்தம், 275 ஏக்கர் நிலப்பரப்பு, 300 கோடி ரூபாய் முதலீடு இலக்கு, முதற்கட்டமாக 2009 வரை 150 கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்டு 16.7.2008 அன்று தொழிற்சாலை திறக்கப்பட்டுள்ளது. எஞ்சிய 3 கட்ட கட்டுமானப் பணிகள் 2012–2013க்குள் முடிவடையும். 18 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்புகள் வழங்கிட நிர்ணயிக்கப்பட்ட இலக்கில் இதுவரை 2,000 பேர் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். 13.4.2007 அன்று சிறப்புப் பொருளாதார மண்டலமாக மத்திய அரசினால் அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

★ **சாம்சங் இந்தியா எலக்ட்ரானிக்ஸ் தொழிற்சாலை – திருப்பெரும்புதூர்**

10.11.2006இல் ஒப்பந்தம், 80 ஏக்கர் நிலப்பரப்பு, 450 கோடி ரூபாய் முதலீடு, 13.11.2007 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளது. வண்ணத்தொலைக்காட்சிப் பெட்டிகள் தயாரிக்கப்படுகின்றன. பிற எலக்ட்ரானிக் பொருள்களும் விரைவில் உற்பத்தி செய்யப்படும். 2009 மார்ச் வரை 130 கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்டு இதுவரை 290 பணியாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இத்தொழிற்சாலை முழுமையாக உற்பத்தி செய்யும் நிலையில் 2,500 பேருக்கு நேரடியாகவும், 1,500 பேருக்கு மறைமுகமாகவும் வேலைவாய்ப்புகளை வழங்கும். இதுவரை 290 பேருக்கு வேலைவாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

★ **கெபாரோ வாகன உற்பத்தித் தொழிற்சாலை – ஒரகடம் – திருப்பெரும்புதூர்;**

8.3.2007இல் ஒப்பந்தம், 100 ஏக்கர் நிலப்பரப்பு, 300 கோடி ரூபாய் முதலீடு. திருப்பெரும்புதூர் தொழிற்சாலை 5.10.2007 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளது. 850 பேருக்கு நேரடியாகவும், 1,050 பேருக்கு மறைமுகமாகவும் வேலைவாய்ப்புகள் அளித்திட நிர்ணயிக்கப்பட்ட இலக்கில் தற்போது 700 பேருக்கு வேலைவாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

★ **சான்மினா (எஸ்.சி.ஐ) அமெரிக்க நிறுவனம் – ஒரகடம் உயர்தொழில்நுட்பப் பூங்கா**

19.6.2007இல் ஒப்பந்தம், 100 ஏக்கர் நிலப்பரப்பு, 225 கோடி ரூபாய் முதலீட்டில் இதுவரை 191 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. மெப்ஸ் நிறுவனத்தில் தற்காலிக உற்பத்தி 2007 டிசம்பரில் தொடங்கப்பட்டுள்ளது. ஒரகடத்தில் அமைக்கும் பணி முடிவடைந்துள்ளது. அங்கு ஜூன் 2009இல் உற்பத்தி தொடங்கும். தற்போது 950 பேருக்கு நேரடி வேலைவாய்ப்புகளும், 150 மறைமுக வேலைவாய்ப்புகளும் அளிக்கப்பட்டுள்ளன.

★ **டாடா ஸ்டீல் தொழிற்சாலை–தூத்துக்குடி**

28.6.2007இல் ஒப்பந்தம், 80 ஏக்கர் நிலப்பரப்பு, தூத்துக்குடி, நெல்லை மாவட்டங்களில் அமையும். 2,500 கோடி ரூபாய் முதலீடு, 1,000 பேருக்கு நேரடியாகவும், 3,000 பேருக்கு மறைமுகமாகவும் வேலைவாய்ப்புகள் கிடைக்கும்.

★ **எம்.பி.பி.எல். புதுப்பிக்கத்தக்க எரிசக்தி நிறுவனம்–செங்கல்பட்டு அருகில்**

14.7.2007இல் ஒப்பந்தம், காஞ்சிபுரம் மாவட்டத்தில் கீழூர், காட்டூர், கோட்டமேடு கிராமங்களில் 532 ஏக்கர் நிலப்பரப்பில் இத்தொழிற்சாலை 1,373 கோடி ரூபாய் முதலீட்டில் அமையும். தொழிற்சாலைக்கான நிலம் வாங்குவது தொடர்பாக தொழில் நிறுவனம் மேற்கொண்டுள்ள நடவடிக்கை விரைவில் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. 5,000 பேருக்கு நேரடியாகவும், 10,000 பேருக்கு மறைமுகமாகவும் வேலைவாய்ப்புகள் கிடைக்கும்.

★ **ஹூண்டாய் மோட்டார்ஸ் தொழிற்சாலை இரண்டாம் கட்டம். இருங்காட்டுக்கோட்டை**

4,000 கோடி ரூபாய் முதலீட்டிலான இத்தொழிற்சாலையில் இதுவரை 3,800 கோடி ரூபாய் செலவிடப்பட்டு 1,538 பேர் நேரடியாகவும், 3,253 பேர் மறைமுகமாகவும் வேலைவாய்ப்புகள் பெற்றுள்ளனர். 2.2.2008 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொழிற்சாலை திறக்கப்பட்டுள்ளது. இரண்டு கட்ட தொழிற்பிரிவுகளிலும் 11 ஆயிரம் பேர் வேலைவாய்ப்புகள் பெற்றுள்ளனர்.

★ **ரினால்ட் அன்ட் நிசான் கார் தொழிற்சாலை – ஒரகடம்**

22.2.2008இல் ஒப்பந்தம், 4,500 கோடி ரூபாய் முதலீடு, 6.6.2008 தொழிற்சாலைக் கட்டுமானப் பணிகள் தொடங்கி நடைபெறுகிறது. 2010 ஆம் ஆண்டு தொடக்கத்தில் முதல் பிரிவு உற்பத்தியைத் தொடங்கும். 10 ஆயிரத்து 500 பேருக்கு நேரடியாகவும், 31 ஆயிரம் பேருக்கு மறைமுகமாகவும் வேலைவாய்ப்புகள் வழங்கிடும் இலக்கில் இதுவரை ஒரகடம் தொழிற்பிரிவில் 220 பணியாளர்களும் மறைமலைநகர் பிரிவில் 1,036 பேரும் நேரடி நியமனம் செய்யப்பட்டுள்ளனர். 1,200 மறைமுக வேலைவாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

★ **அமெரிக்காவின் சிக்னெட் சோலார் – திருப்பெரும்புதூர்**

17.3.2008இல் ஒப்பந்தம், 2,000 கோடி ரூபாய் முதலீடு, சிப்காட் நிறுவனத்திடம் நில ஒதுக்கீடு கோரப்பட்டுள்ளது. மத்திய அரசின் செமிகண்டக்டர் கொள்கை வரைவுக்கான இறுதி அனுமதி எதிர்பார்க்கப்படுகிறது. 1,000 பேருக்கு நேரடியாகவும், 2,000 பேருக்கு மறைமுகமாகவும் வேலைவாய்ப்புகள் கிடைக்கும்.

★ **எம்.ஆர்.எப். நிறுவனத்தின் டயர் தொழிற்சாலை – பெரம்பலூர்**

2.5.2008இல் ஒப்பந்தம், 900 கோடி ரூபாய் முதலீடு, எம்.ஆர்.எப். நிறுவனம் இத்தொழிற்சாலைக்காக பெரம்பலூர் மாவட்டம் நாரணமங்கலம், காரை கிராமங்களில் இதுவரை 270 ஏக்கர் நிலங்களை கொள்முதல் செய்துள்ளது. எஞ்சிய 17 ஏக்கர் நிலம் கையகப்படுத்திட அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது. 2,500 பேருக்கு நேரடி வேலைவாய்ப்புகள் கிடைக்கும். தற்போதைய பொருளாதார நெருக்கடி காரணமாக முதலீட்டு கால அளவு 28.2.2011 என்பதை 2013 ஆம் வரை நீட்டித்திட மாநில அரசிடம் அனுமதி கோரப்பட்டுள்ளது.

★ **மோசர் பியர் கட்டமைப்பு மேம்பாட்டு நிறுவனத்தின் போட்டோ வோல்டாய்க் தொழில்நுட்பத் தொழிற்சாலை – ஒரகடம் சிறப்புப் பொருளாதார மண்டலம்**

9.6.2008இல் ஒப்பந்தம், 2,000 கோடி ரூபாய் முதலீடு, இதில் 2009 பிப்ரவரி வரை 14 கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்டுள்ளது. கட்டுமானப் பணிகள் நடைபெறுகின்றன. முதல் கட்ட தொழிற்சாலை பணிகள் 2009 செப்டம்பரில் முடிவடையும். 2 ஆயிரம் பேருக்கு நேரடியாகவும், ஆயிரம் பேருக்கு மறைமுகமாகவும் வேலைவாய்ப்புகள் கிடைக்கும். இதில் 2009 மார்ச் வரை நேரடியாக 39 பேரும், மறைமுகமாக 10 பேரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

★ **நோக்கியா சீமென்ஸ் தொழிற்சாலை – ஒரகடம்**

26.6.2008இல் ஒப்பந்தம், 300 கோடி ரூபாய் முதலீடு இலக்கில் 2009 மார்ச் வரை 148.80 கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்டுள்ளது, 16.10.2008 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறக்கப்பட்டு வணிக உற்பத்தி தொடங்கப்பட்டுள்ளது. 400 பேருக்கு நேரடியாகவும், 200 பேருக்கு மறைமுகமாகவும் வேலைவாய்ப்புகள் வழங்கிட இலக்கு நிர்ணயிக்கப்பட்டு இதுவரை 163 பேருக்கு நேரடியாகவும், 91 பேருக்கு மறைமுகமாகவும் வேலைவாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

★ **ஹேன்சன் டிரான்ஸ்மிஷன்ஸ் இண்டர்நேஷனல் நிறுவனத் தொழிற்சாலை –பல்லடம் சிறப்புப் பொருளாதார மண்டலம்**

28.6.2008இல் ஒப்பந்தம், 1,500 கோடி ரூபாய் மொத்த முதலீட்டில் 2009 மார்ச் வரை 1,094 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. வணிக உற்பத்தி செப்டம்பர் 2008 – இல் தொடங்கப்பட்டு தொழிற்சாலை திறக்கப்பட்டுள்ளது. 1,059 பேர் பேருக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலைவாய்ப்புகள் பெற்றுள்ளனர்.

★ **ஏ.டி.சி. டயர்ஸ் தொழிற்சாலை –நெல்லை மாவட்டம் கங்கை கொண்டான் சிறப்புப் பொருளாதார மண்டலம்**

30.6.2008இல் ஒப்பந்தம், 400 கோடி ரூபாய் முதலீடு இலக்கில் இதுவரை 66.30 கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்டுள்ளது, தொழிற்சாலைக் கட்டுமானப் பணிகள் நடைபெறுகின்றன. 2009 மத்தியில் வணிக உற்பத்தி தொடங்கும். 3 ஆண்டுகளில் 600 பேருக்கும், 5 ஆண்டுகளில் 1,000 பேருக்கும் நேரடி வேலைவாய்ப்புகளும், 800 பேருக்கு மறைமுக வேலைவாய்ப்பும் கிடைக்கும்.

★ **டெய்ம்லர்–ஏஜி மற்றும் ஹீரோ வணிக வாகனத் தொழிற்சாலை – ஒரகடம்**

7.7.2008இல் ஒப்பந்தம், 3,000 கோடி ரூபாய் முதலீடு, சிப்காட் 397 ஏக்கரில் இதுவரை 383.2 ஏக்கர் நிலம் வழங்கியுள்ளது. 2009 செப்டம்பரில் கட்டுமானப் பணிகள் தொடங்கும். 4 ஆயிரம் பேருக்கு நேரடியாகவும், 20 ஆயிரம் பேருக்கு மறைமுகமாகவும் வேலைவாய்ப்புகள் கிடைக்கும்.

★ **அசோக் லேலண்டு – ஜப்பான் நிசான் வணிக வாகனத் தொழிற்சாலை மற்றும் அசோக் லேலண்டு நடுத்தர கனரக வணிக வாகனத் தொழிற்சாலை**

இவை எண்ணூர், ஒசூர், பிள்ளைப்பாக்கம் ஆகிய இடங்களில் அமைகின்றன. பிள்ளைப்பாக்கத்தில் 402 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. 8.9.2008இல் ஒப்பந்தம், 4,150 கோடி ரூபாய் முதலீடு 4,500 பேருக்கு நேரடியாகவும், 13 ஆயிரத்து 500 பேருக்கு மறைமுகமாகவும் வேலைவாய்ப்புகள் கிடைக்கும்.

★ **ஹர்ஷா குழும எண்ணெய் –வாயு துரப்பண இயந்திரத் தொழிற்சாலை, மிதவைக் கண்ணாடித் தொழிற்சாலை**

மணலூரில் 85 ஏக்கரிலும், பிள்ளைப்பாக்கத்தில் 25 ஏக்கரிலும், திருப்பெரும்புதூர் சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் 3 ஏக்கரிலும் இத்தொழிற்சாலையின் தொழிற்பிரிவுகள் அமைகின்றன. 29.9.2008இல் ஒப்பந்தம், 1,500 கோடி ரூபாய் முதலீடு, ஜூலை 2009இல் கட்டுமானப் பணிகள் தொடங்கும். தொழிற்சாலையின் முதல்கட்ட பணிகள் 2009 டிசம்பரில் முடிவடையும். 2010 பிப்ரவரியில் வணிக உற்பத்தி தொடங்கும். 1,500 பேருக்கு நேரடியாகவும், பல ஆயிரம் பேருக்கு மறைமுகமாகவும் வேலைவாய்ப்புகள் கிடைக்கும்.

★ **அமெரிக்காவைச் சேர்ந்த கனரகப் பொறியியல் இயந்திரங்களைத் தயாரிக்கும் கேடர்பில்லர் இந்தியா தொழிற்சாலை நிறுவனத்தின் புதிய விரிவாக்கத் திட்டங்கள்**

திருவள்ளூர் மற்றும் ஒசூரில் உள்ள தொழிற்சாலைகளை விரிவாக்கம் செய்வதுடன் சென்னைக்கு அருகில் மற்றுமொரு புதிய இடத்திலும் அமைகின்றன. 18.12.2008இல் ஒப்பந்தம், 800 கோடி ரூபாய் முதலீடு, 2009 ஜனவரி வரை திருவள்ளூர், ஒசூர் தொழிற்பிரிவுகளில் 50 கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்டுள்ளது. 600 பேருக்கு நேரடியாகவும், 1,900 பேருக்கு மறைமுகமாகவும் வேலைவாய்ப்புகள் கிடைக்கும். இந்த 22 தொழிற்சாலைகளில் 32,133 கோடி ரூபாய் முதலீடுகள் அமையும். இதன்மூலம் 68,810 பேருக்கு நேரடியாகவும், 1,27,130 பேருக்கு மறைமுகமாகவும் – என மொத்தம் 1,95,940 பேருக்கு வேலைவாய்ப்புகள் கிடைக்கும்.

- ★ இந்த 22 தொழிற்சாலைகளில், கெபாரோ வாகனத் தொழிற்சாலை 5.10.2007 அன்றும், சாம்சங் இந்தியா 13.11.2007 அன்றும், சான்மினா (எஸ்.சி.ஐ.) கார்ப்பரேஷன் 2007 டிசம்பரிலும், ஹூண்டாய் மோட்டார் தொழிற்சாலையின் இரண்டாம் பிரிவு 2.2.2008 அன்றும், டெல் கம்ப்யூட்டர்ஸ் 22.4.2008 அன்றும்,மோட்டரோலோ தொழிற்சாலை 27.4.2008 அன்றும், குரோத்லிங் தொழிற்சாலை 16.7.2008 அன்றும், பெல்ஜியம் நாட்டின் ஹேன்சன் டிரான்ஸ்மிஷன்ஸ் இண்டர்நேஷனல் நிறுவனத்தின் காற்றாலைகளுக்கான கியர் பாக்ஸ் உற்பத்தி தொழிற்சாலை –பல்லடம் சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் 2008 செப்டம்பரிலும், நோக்கியா சீமென்ஸ் தொழில் நிறுவனம் 16.10.2008 அன்றும் திறக்கப்பட்டுள்ளது.

அடுத்து, திறக்கப்பட உள்ள தொழிற்சாலைகளின் கட்டுமானப் பணிகள் பல்வேறு நிலைகளில் உள்ளன. மேலும் 7 தொழிற்சாலைகளைத் தொடங்கிட அரசாணைகள் பிறப்பிக்கப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. அவை:

- ★ சேலம் இரும்புத் தொழிற்சாலை விரிவாக்கம்,9.7.2008இல் அரசாணை வெளியீடு. 2005 கோடி ரூபாய் முதலீடு. 500 பேருக்கு வேலைவாய்ப்பு.
- ★ அமெரிக்காவின் டெல்பி தொழிற்சாலை, ஒரகடம் சிப்காட் தொழிற்பூங்கா. 16.10.2008 இல் அரசாணை வெளியீடு, 250 கோடி ரூபாய் முதலீடு. 570 பேருக்கு வேலைவாய்ப்பு.
- ★ சென்னை சிமெண்ட்ஸ் நிறுவனம், 18.10.2008இல் அரசாணை வெளியீடு. 997 கோடி ரூபாய் முதலீடு. 600 பேருக்கு வேலைவாய்ப்பு. அரியலூர் சிமெண்ட் தொழிற்சாலை. காஞ்சி, சேலம், தூத்துக்குடி மாவட்டங்களில் செங்கற்சூளைகள், கோவை, நாகர்கோவில், மதுரை, திருச்சி, இராமநாதபுரம் ஆகிய இடங்களில் சிமெண்ட்ஸ் சிப்பம் கட்டுதல். விருதுநகர் தொழிற்சாலையின் திறனை மேம்படுத்துதல்.
- ★ டால்மியா சிமெண்ட் தொழிற்சாலை, 18.10.2008இல் அரசாணை வெளியீடு, அரியலூர் சிமெண்ட் உற்பத்தி சேலம், தூத்துக்குடி, சென்னை ஆகிய இடங்களில் மல்டிபிள் கிரைண்டிங் பிரிவுகள், திருநெல்வேலி அல்லது கோவை மாவட்டத்தில் காற்றாலைப் பண்ணைகள் ரெடிமிக்ஸ் கான்கிரீட் தொழிற்சாலைகள் அமைத்தல்.
- ★ அமெரிக்காவின் அலைசன் டிரான்ஸ்மிஷன் தொழிற்சாலை (Allison Transmission Inc. USA) – சிப்காட் ஒரகடம் தொழிற் பூங்கா, 20.10.2008இல் அரசாணை வெளியீடு. 26.81 ஏக்கர் நிலப்பரப்பில் அமைகிறது. 350 கோடி ரூபாய் முதலீடு. 400 பேருக்கு வேலைவாய்ப்பு.
- ★ டி.சி.டபிள்யூ தொழிற்சாலை (DCW Ltd) தூத்துக்குடி மாவட்டம், 7.11.2008இல் அரசாணை வெளியீடு. 460 பேருக்கு நேரடி வேலைவாய்ப்பு. 327 பேருக்கு மறைமுக வேலைவாய்ப்பு.
- ★ டூசன் இன்ஃபிராகோர் லிமிடெட் தொழிற்சாலை (Doosan Infracore Ltd), 17.11.2008இல் அரசாணை வெளியீடு. பிள்ளைப்பாக்கம் சிப்காட் தொழிற் பூங்காவில் 35 ஏக்கர் நிலப்பரப்பில் அமைகிறது. 350 கோடி முதலீடு. 450 பேருக்கு வேலைவாய்ப்புகள். ஆக 5 ஆயிரத்து 462 கோடி ரூபாய் முதலீட்டில் 5 ஆயிரத்து 347 பேருக்கு வேலைவாய்ப்புகள் வழங்கிட வகை செய்யும் 7 புதிய தொழிற்சாலைகள் அமைக்கப்பட அரசாணை பிறப்பிக்கப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.
- ★ 1991–1996 மற்றும் 2001–2006 பத்தாண்டு காலத்தில் ரூ. 4,280 கோடி முதலீட்டில் 7 தொழில்களுக்கு மட்டுமே புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் நடைபெற்றுள்ளன; 2006–2009–மூன்றாண்டு காலத்தில் ரூ. 37 ஆயிரத்து 595 கோடி ரூபாய் முதலீட்டில் 29 தொழில்கள் தொடங்கிட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்யப்பட்டு, தொழில் முதலீடுகள் உயர்ந்துள்ளன.
- ★ 29.4.2008இல் நடைபெற்ற தமிழக அமைச்சரவைக் கூட்டத்தில் 17 ஆயிரத்து 400 கோடி ரூபாய் முதலீட்டில் 13 புதிய தொழில் திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. ஒரே அமைச்சரவைக் கூட்டத்தில் இத்தனைத் திட்டங்களுக்கு அரசு ஒப்புதல் வழங்கியது இதுவே முதல்முறை. தொழில் வளர்ச்சி வரலாற்றில் இது ஒரு புதிய அத்தியாயம்.



# புதிய மின் திட்டங்கள்

**மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர்**
**திரு. ஆற்காடு நா. வீராசாமி அவர்கள்**

★ நீர் மின் உற்பத்தி நிலையங்கள் எந்த ஆண்டும் இல்லாதவகையில் 2006–07 இல் 6,292 மில்லியன் யூனிட்டுகளும், 2007–08இல் 6,455 மில்லியன் யூனிட்டுகளும் உற்பத்தி செய்துள்ளன. 2008–09–இல் 5,382 மில்லியன் யூனிட்டுகள் உற்பத்தி செய்துள்ளன.

★ வடசென்னை அனல் மின் நிலையத்தின் 3ஆவது யூனிட் 2007–08இல் இதுவரை இல்லாத அளவிற்கு (1,695 மில்லியன் யூனிட்) அதிக உற்பத்தி செய்துள்ளது. 210 மெகாவாட் திறனுடைய முதலாம் பிரிவு தொடர்ந்து 214 நாட்கள் (26.11.06 முதல் 28.06.2007 வரை) மின் உற்பத்தி செய்து சாதனை புரிந்தது.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் முன்னிலையில், 1,600 மெகாவாட் மின் உற்பத்திக்கு 7 ஆயிரத்து 627 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இரண்டு புதிய மின்திட்டங்கள் தொடங்க கிராமப்புற மின்வசதிக் கழகம் தமிழக மின்வாரியத்திற்கு 5 ஆயிரத்து 612 கோடி ரூபாய் கடனுதவி வழங்குவது தொடர்பான ஒப்பந்தத்தில் கையொப்பமிடப்பட்டது. மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் திரு.ஆற்காடு நா.வீராசாமி அவர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடன் உள்ளனர். (10–10–2008)

★ எண்ணூர் அனல் மின் திட்டமும் கடந்த 12 ஆண்டுகளில் எப்போதும் இல்லாதவகையில் 2007–08–இல் அதிக மின் உற்பத்தி (2,032 மில்லியன் யூனிட்) செய்துள்ளது.

★ புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வளங்கள் மூலம் 2006–07 மற்றும் 2007–08, காற்றாலை மின் உற்பத்தித் திறன் 813 மெகாவாட் அளவிற்கும், இணைமின் உற்பத்தி 137 மெகாவாட் அளவிற்கும், தாவர சக்தி மின் உற்பத்தி மூலம் 64 மெகாவாட் அளவிற்கும் மின் உற்பத்தித் திறன் உருவாக்கப்பட்டுள்ளது. 2008–09இல் காற்றாலை மின் உற்பத்தித் திறன் 583 மெகாவாட் அளவிற்கும், இணைமின் உற்பத்தி 40 மெகாவாட் அளவிற்கும், தாவர சக்தி மின் உற்பத்தி மூலம் 42.7 மெகாவாட் அளவிற்கும் மின் உற்பத்தித் திறன் உருவாக்கப்பட்டுள்ளது.

★ இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள வழுதூரில் 92 மெகாவாட் திறன் கொண்ட கூடுதல் எரிவாயு மின் திட்டம் 18.06.2008 அன்று இயக்கி வைக்கப்பட்டது.

★ வழுதூர் எரிவாயு சுழலி மின் நிலையம் அகில இந்திய அளவில் மின் காரணியில் மதிப்பீடு செய்யப்பட்டு, அதன் செயல்பாட்டிற்காக 2006–இல் மத்திய அரசின் எரிசக்தித் துறை அமைச்சரிடமிருந்து வெண்கலப் பதக்கம் பெறப்பட்டது.

★ கடலூரில் உத்தேசிக்கப்பட்டுள்ள தனியார் மின் திட்டத்திலிருந்து 1,320 மெகாவாட் மின்சாரத்தை கொள்முதல் செய்திட, 28.09.06 அன்று தமிழ்நாடு மின்வாரியம் கடலூர் மின் உற்பத்தி நிறுவனத்துடன் மின் கொள்முதல் ஒப்பந்தம் செய்துள்ளது.

★ உத்தேசிக்கப்பட்டுள்ள சிம்மாத்ரி மிகு திறன் அனல்மின் திட்டம் நிலை 2–லிருந்து மின்சாரத்தைக் கொள்முதல் செய்வதற்கான மின் கொள்முதல் ஒப்பந்தம் தேசிய அனல் மின் கழகத்துடன் 28.2.07 அன்று கையெழுத்தானது.

★ கூடுதல் மின் உற்பத்திப் பிரிவுகளை அமைப்பதற்காகவும் மின் தொடர் பணிகளுக்காகவும் 2007–08இல் தொடங்கி ஐந்து ஆண்டு நீண்ட காலக் கடனாக ரூபாய் 16,000 கோடி பெற தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கும், ஊரக மின் மயமாக்கல் கழகத்திற்கும் இடையே மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் 02.04.2007 அன்று கையெழுத்தானது.

★ பிள்ளைப்பெருமாள் நல்லூர் மின் உற்பத்தி கம்பெனிக்கும் இந்துஸ்தான் ஆயில் மற்றும் எக்ஸ்ப்போலோரேஷன் கம்பெனி லிமிடெட் என்ற கம்பெனிக்கும் இடையே எரிவாயு விநியோக ஒப்பந்தம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் முன்னிலையில் 28.04.2007 அன்று கையெழுத்தானது. கூடிய விரைவில் இயற்கை எரிவாயு இந்துஸ்தான் ஆயில் மற்றும் எக்ஸ்ப்லோரேஷன் கம்பெனியிலிருந்து பெற்று பிள்ளைப்பெருமாள் நல்லூர் மின் உற்பத்தி நிறுவனம் மின் உற்பத்தி செய்ய ஆவன செய்து வருகின்றது.

★ உடன்குடியில் 1,600 மெகாவாட் திறன் கொண்ட அனல் மின் திட்டத்தைக் கூட்டுத் துறையில் நிறுவுவதற்காக தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கும் பாரத மிகு மின் கழகத்திற்கும் இடையே 26.10.2007 அன்று புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டு 22.2.2009 அன்று அடிக்கல் நாட்டி பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

★ ரூ.1,498.47 கோடி மதிப்பீட்டில் தமிழகத்தில் உள்ள கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளை நவீனப்படுத்தி, மொத்தம் 234 மெகாவாட் திறன் கொண்ட இணை மின் நிலையங்கள் அமைக்க 28.01.09 அன்று ஒப்பந்தப் புள்ளி கோரப்பட்டுள்ளது.

★ தூத்துக்குடியில் நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனமும் தமிழ்நாடு மின்சார வாரியமும் கூட்டுத் துறையில் 1,000 மெகாவாட் திறன் கொண்ட அனல் மின் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டு இத்திட்டத்தின் வேலைகள் நடைபெற்று வருகின்றன.




மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் திரு. ஆற்காடு நா.வீராசாமி அவர்கள் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் இணையதளம் மூலமாக பணம் செலுத்தும் வசதியினை துவக்கி வைத்தார் (4–1–2009)

★ தேசிய அனல் மின் கழகமும், தமிழ்நாடு மின்சார வாரியமும் கூட்டுத் துறையில் வடசென்னையில் 1,000 மெகாவாட் திறன் கொண்ட அனல் மின் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. தமிழக மின்துறை அமைச்சர் விடுத்த கோரிக்கையை ஏற்று, கூடுதலாக 500 மெகாவாட் திறனுள்ள மின்சாரத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்டு தற்போது 1,500 மெகாவாட் மின்உற்பத்தித் திட்டத்திற்கு வேலைகள் விரைவாக நடைபெற்று வருகின்றன.

★ வடசென்னையில் 600 மெகாவாட் திறன் கொண்ட கூடுதல் மின்திட்டத்திற்கான பணிகள் 21.01.2008 அன்று தொடங்கி வைக்கப்பட்டன. மேலும் 2ஆவது அலகு 600 மெகாவாட் பணிகளுக்கான ஒப்புதல் வழங்கப்பட்டு பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன.

★ மேட்டூரில் 600 மெகாவாட் திறன் கொண்ட கூடுதல் மின் திட்டத்திற்கான பணி 25.6.2008 இல் துவக்கப்பட்டு பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன.

★ காஞ்சிபுரம் மாவட்டம், செய்யார் பகுதியில் மத்திய அரசின் 4,000 மெகாவாட் திறன் கொண்ட மாபெரும் மின் திட்டத்திற்குத் தேவையான சுமார் 1,800 ஏக்கர் நிலம் கண்டறியப்பட்டு திட்டம் அமைத்திட பரிந்துரைக்கப்பட்டுள்ளது. ஆரம்பக் கட்ட பணிகள் நடைபெற்று வருகின்றன.

★ 21, 45, 862 புதிய மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. 200 துணை மின் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 19,555 மின் மாற்றிகள் அமைக்கப்பட்டன. 3,412 சுற்று கி.மீ. மிக உயரழுத்த மின்கம்பிகள் போடப்பட்டன. 12,975 கி.மீ. உயரழுத்த மின் கம்பிகளும், 40,680 தாழ்வழுத்த மின் கம்பிகளும் போடப்பட்டன.

★ சுங்குவார்சத்திரம் 400 கி.வோ. துணை மின் நிலையம் மற்றும் அலமாதியிலிருந்து சுங்குவார்சத்திரம் வரை தொடர்புடைய 400 கி.வோ. மின் தொடர் அமைக்கும் பணிகள் சுமார் ரூ.56.55 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சுங்குவார்சத்திரம் 400 கி.வோ. துணை மின் நிலையம் டிசம்பர் 2009–இல் இயக்கிவைக்க திட்டமிடப்பட்டுள்ளது. திருவலத்திலும் 400 கி.வோ. துணை மின் நிலையம் நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது.

★ புதிய குடியிருப்புகளுக்கு 24 மணி நேரத்திற்குள்ளும் 5 குதிரைத் திறனுக்குள் இருக்கும் சிறு தொழில் அலகுகள் ஒரு வாரத்திற்குள்ளும் 5 குதிரைத் திறனுக்கு மேல் இருக்கும் தாழ்வழுத்த தொழிற்சாலைகளுக்கு ஒரு மாதத்திற்குள்ளும் மின் இணைப்பு வழங்க அரசு ஆணையிட்டுள்ளது. மூன்று ஆண்டுகளில் மொத்தம் 17,19,019 மின் இணைப்புகளும், 3,72,248 தாழ்வழுத்த வணிக மின் இணைப்புகளும், 54,595 தாழ்வழுத்த தொழிற்சாலைக்கான மின் இணைப்புகளும் வழங்கப்பட்டுள்ளன.

★ 10.2.2009 முதல் 31.12.2009 க்குள் முடிவடையும் ராஜீவ்காந்தி கிராமப்புற மின்மயமாக்கல் திட்டத்தின்கீழ், 11,284 மின்மாற்றிகள் மற்றும் 45,911 கி.மீ. நீளத்திற்கான மின் பாதைகள் ரூபாய் 447 கோடி செலவில் புதிதாக அமைக்கப்படுவதன் மூலம் சுமார் 5.24 இலட்சம் கிராமப்புற வீடுகளுக்கு மின் இணைப்பு வழங்கப்படும்.

★ மின்சார வாரியத்தில் பணியாற்றும் ஏறத்தாழ 75,720 ஊழியர்களும், 68,518 ஒய்வூதியதாரர்களும் பயன்பெறும் வகையில், 125 கோடி ரூபாய் செலவில் 1.8.2006 முதல் 50 சதவிகித அகவிலைப்படி அடிப்படை ஊதியத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

★ தமிழ்நாடு மின்வாரியப் பொன்விழாவை முன்னிட்டு தமிழ்நாடு மின்வாரியத்தில் பணியாற்றும் 72,723 தொழிலாளர்களுக்கும், 46, 035 ஒய்வூதியதாரர்களுக்கும் 27,055 குடும்ப ஒய்வூதியதாரர்களுக்கும் ஆக மொத்தம் 1,45,813 தொழிலாளர்களுக்கு தலா ரூ. 1,000 வீதம் மொத்தம் ரூ.1,45,81,300 ரொக்கப் பரிசு அளிக்கப்பட்டது.

★ மேலும் இவ்வாரியத்தில், தற்போது பணியாற்றும் 21 ஆயிரத்து 401 ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கும், 5 ஆயிரத்து 646 பகுதி நேரத் தொழிலாளர்களுக்கும் ஆக மொத்தம் 27 ஆயிரத்து 47 தொழிலாளர்களுக்கு தலா 500 ரூபாய் வீதம் 1,35, 23,500 ரூபாய் ரொக்கப் பரிசாக அளிக்கப்பட்டது.

★ தமிழ்நாடு மின்வாரியப் பொன்விழாவை முன்னிட்டு இவ்வாரியத்தில் பணியாற்றும் 72,723 தொழிலாளர்கள் அனைவருக்கும் ஏறத்தாழ 29,87,00,000 ரூபாய் செலவில் சிறப்புப் பரிசாக ஒரு ஊக்க ஊதிய உயர்வு (Incentive Increment) வழங்கப்பட்டது.

★ 2006–07 ஆம் ஆண்டிற்கு 66,066 மின் வாரிய ஊழியர்கள் 20 சதவீதம் போனஸ் மற்றும் கருணைத்தொகை (போனஸ் – 8.33 சதவீதம் மற்றும் கருணைத்தொகை 11.67 சதவீதம்) பெற்றனர். மேலும், தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணியாற்றும் சுமார் 21,600 ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கும் 3,465 பகுதி நேர ஊழியர்களுக்கும் ரூபாய் 1,000 கருணைத் தொகையாக வழங்கப்பட்டது. இதனால் மின்வாரியம் கூடுதலாக ரூபாய் 57.95 கோடி செலவு செய்துள்ளது.

★ மேலும் 9,190 அலுவலர்களுக்கு ரூ.1,000 வீதம் கருணைத் தொகையாக ஜனவரி 2008–இல் வழங்கப்பட்டது. இதனால், மின்வாரியத்திற்கு ரூ.91.90 இலட்சம் செலவானது. மேலும் 76,217 ஒய்வூதியம் பெறுபவர்களுக்கு ரூ.300 வீதம் கருணைத் தொகையாக ரூ.2.29 கோடி வழங்கப்பட்டது.

★ 2007–08 ஆம் ஆண்டிற்கு 69,556 மின் வாரிய ஊழியர்கள் 20 சதவீதம் போனஸ் மற்றும் கருணைத்தொகை (போனஸ் – 8.33 சதவீதம் மற்றும் கருணைத்தொகை 11.67 சதவீதம்) பெற்றனர். இதனால் வாரியத்திற்கு

கூடுதலாக ரூ.53.99 கோடி செலவு ஏற்பட்டது. மேலும் தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணியாற்றும் சுமார் 14,138 ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கும் ரூ.1,000 கருணைத் தொகையாக வழங்கப்பட்டது. இதனால் மின்வாரியத்திற்கு கூடுதலாக ரூ.1.41 கோடி செலவு ஏற்பட்டது.

★ மேலும் 9,720 அலுவலர்களுக்கு ரூ.1,000 வீதம் கருணைத் தொகையாக ஜனவரி 2009–இல் வழங்கப்பட்டது. இதனால், மின்வாரியத்திற்கு ரூ.0.97 கோடி செலவானது. மேலும் 71,546 ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு ரூ.300 வீதம் கருணைத் தொகையாக ரூ.2.15 கோடி செலவு ஏற்பட்டது.

★ 2006–2007 ஆம் ஆண்டிற்கு 125 கோடி ரூபாயும், 2007–08 ஆம் ஆண்டிற்கு 125 கோடி ரூபாய், 2008–09 ஆம் ஆண்டிற்கு 125 கோடி ரூபாய் தமிழ்நாடு மின் வாரியத்திற்கு ஹைடல் சுவிங் மானியமாக வழங்கப்பட்டது.

★ 2006–2007 ஆம் ஆண்டிற்கு பங்கு மூலதனத்திற்கு ரூபாய் 175 கோடியும், 2007–08 ஆம் ஆண்டிற்கு ரூபாய் 490 கோடியும், 2008–2009 ஆம் ஆண்டிற்கு ரூ.1,170.50 கோடியும் பங்கு மூலதனம் முதலீடாக தமிழ்நாடு வாரியத்திற்கு வழங்கப்பட்டது.

★ உள்ளாட்சி அமைப்புகள் மின்வாரியத்திற்குச் செலுத்த வேண்டிய நிலுவைக் கட்டணத்தின் மீது விதிக்கப்படும் அபராத வரி 13.3.2007 முதல் 12 சதவீதத்திலிருந்து 6 சதவீதமாகக் குறைக்கப்பட்டு, அதற்கு முந்தைய காலத்திற்கான அனைத்து நிலுவை அபராத வரித் தொகையும் தள்ளுபடி செய்யப்பட்டது.

★ இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் பெற்ற 3,08,541 வறுமைக்கோட்டிற்குக் கீழுள்ள குடும்பங்களுக்கு இலவச மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

★ இரண்டு ஏக்கர் இலவச நிலம் வழங்கும் திட்டத்தில் வழங்கப்பட்ட நிலங்களை விவசாயத்திற்குப் பயன்படுத்த 21 மாவட்டங்களில் மொத்தம் 167 மின் இணைப்புகள் இலவசமாக வழங்கப்பட்டன.

★ தமிழக அரசு பல்வேறு வகைப்பட்ட மின் பயனீட்டாளர்களுக்குச் சலுகைகளை அளிக்கும் பொருட்டு கடந்த மூன்று ஆண்டுகளில் அளித்துள்ள மானியத் தொகைகள் பின்வருமாறு:–

1) வீட்டு உபயோகத்திற்குக் குறைந்த மின் கட்டணத் திட்டத்திற்கு ரூ. 3,264.62 கோடி.

2) விவசாயிகளுக்கு இலவச மின் திட்டத்திற்கு ரூ. 619.69 கோடி.

3) சுய நிதி மூலம் மின் இணைப்புப் பெற்ற விவசாயிகளுக்கும் இலவச மின்சாரத் திட்டத்திற்காக ரூ. 127.3 கோடி.

4) குடிசைவாழ் மக்களுக்கு இலவச மின்சாரத் திட்டத்திற்காக ரூ. 41.73 கோடி.

5) கைத்தறி /விசைத்தறி நெசவாளர்களுக்கு இலவச மின்சாரத் திட்டத்திற்காக ரூ. 105.07 கோடி .

6) விசைத்தறி நெசவாளர்களுக்கு மின் கட்டணக் குறைப்புத் திட்டத்திற்கு ரூ. 90.73 கோடி.

7) பொது வழிபாட்டு இடங்களில் பயன்படுத்தும் மின்சாரத்திற்கு கட்டணம் குறைப்புத் திட்டத்திற்கு ரூ. 13.08 கோடி.

8) உள்ளாட்சி அமைப்புகள் / தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் / சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் ஆகியவற்றிக்கு மின்சார கட்டணம் குறைப்பதின் கீழ் 93.02 கோடி .



# அரசுப்பணிக்கு வயது வரம்பு தளர்த்தப்பட்டது

மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர்
திரு. ஆற்காடு நா. வீராசாமி அவர்கள்

★ பறிக்கப்பட்ட சலுகைகளை மீண்டும் அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கு வழங்கியதுடன், தமிழ்நாடு அத்தியாவசியப் பணிகள் பராமரிப்புச் சட்டம், 2003 (டெஸ்மா) திரும்பப் பெறுதல், பணி நியமனத் தடைச் சட்டம் விலக்கிக் கொள்ளுதல், வேலை நிறுத்த நாட்களைப் பணிக்காலமாக வரன்முறை செய்தல், முழு ஓய்வூதியம் பெற நிர்ணயிக்கப்பட்ட 33 ஆண்டுகள் என்றிருந்ததை 30 ஆண்டு பணிக்காலமாகக் குறைத்தல், பொங்கல் போனஸ் / கருணைத் தொகை வழங்கல், 6–ஆவது ஊதியக் குழுவின் நிலுவைத் தொகையை மூன்று தவணைகளில் வழங்கல், பண்டிகைக்கால முன் பணத்தை ரூ 1,000/– லிருந்து ரூ. 2,000/–ஆக உயர்த்துதல், ஊதியக் குழுவின் பரிந்துரையை எதிர்நோக்கி மூன்று மாத ஊதியம் இடைக்கால நிவாரணமாக வழங்கியமை, அகவிலைப்படி 54 விழுக்காட்டிலிருந்து 64 விழுக்காடாக உயர்த்தியமை போன்ற பல சலுகைகள் வழங்கப்பட்டுள்ளது.



மத்திய அரசு அலுவலர்களுக்கான 6ஆவது ஊதியக் குழுவின் பரிந்துரைகள், தமிழக அரசு அலுவலர்களுக்கும் நடைமுறைப்படுத்தப்படும் என்று அறிவித்தமைக்காகவும், சத்துணவுப் பணியாளர்களுக்குத் தனியான ஒரு காலமுறை ஊதியம், சிறப்பு ஓய்வூதியம், பணிமூப்பு அடிப்படையில் ஊதிய உயர்வு வழங்கப்படும் என்று அறிவித்தமைக்காகவும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்கு தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியம் மற்றும் சத்துணவு ஊழியர் நிருவாகிகள் நன்றி தெரிவித்தனர். (16–8–2008)

★ தலைமைச் செயலகப் பணியாளர்கள் அனைவரும் ஒரே சங்கமாக இயங்குவதெனவும் இதற்காக பதிவேடு எழுத்தர் முதல் கூடுதல் செயலாளர் வரை அனைவரையும் உறுப்பினர்களாகச் சேர்க்க வகை செய்யும் பொருட்டு சங்க துணை விதிகளைத் திருத்தம் செய்து ஆணைகள் வெளியிடப்பட்டன.

★ பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலுள்ள இஸ்லாமியர்கள் மற்றும் கிறிஸ்தவர்களுக்கு கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளில் தலா 3.5 சதவீத இட ஒதுக்கீடு வழங்க ஆணையிடப்பட்டதன் அடிப்படையில், ஏற்கெனவே நடைமுறையிலிருந்த 100 புள்ளிகள் கொண்ட இனச் சுழற்சி முறை, 200 புள்ளிகள் கொண்ட இனச் சுழற்சி முறையாக மாற்றியமைக்கப்பட்டு ஆணைகள் வெளியிடப்பட்டன. மேலும், வேலைவாய்ப்பகங்கள் மூலம் பணி நியமனங்கள் மேற்கொள்ளும்போது, இனச்சுழற்சி முறையுடன் உடன் நிகழ்வாக முன்னுரிமை பெற்றவருக்கும், முன்னுரிமையற்றோருக்கும் இடையேயான விகிதாச்சாரம், இனவாரியாகக் கடைப்பிடிக்கப்பட வேண்டிய முறை குறித்தும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

★ விதிமுறைகளின்படி வேலைவாய்ப்பில் சலுகை வழங்க மற்றும் ஆதரவற்ற விதவைகளைக் கண்டறிய அதிகபட்ச மாத வருமானம் ரூ.1,000/–லிருந்து ரூ.4,000/–மாக உயர்த்தப்பட்டது.

★ அரசுப் பணிக்கு விண்ணப்பிப்பதற்கான அதிகபட்ச வயது வரம்பு மேலும் ஐந்தாண்டுகள் வரை தளர்த்தப்பட்டது. மேலும், அரசுப்பணியில் ஏற்கெனவே பணிபுரிபவர்களுக்கும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்தும் போட்டித் தேர்வுகளில் கலந்து கொள்ள ஏதுவாக இச்சலுகையை நீட்டிக்கப்பட்டுள்ளது.

★ ஒளிவுமறைவற்ற சிறந்த மின் ஆளுகையினை உரிய அளவுக்குப் பயன்படுத்தும் வகையில், இந்நாள்வரை திருத்தப்பட்ட இத்துறையின் சட்டங்களும் விதிகளும் மின்னணு முறைக்கு மாற்றப்பட்டு அரசு வலைதளம் "www.tn.gov.in"இல் தேசியத் தகவல் மையத்தின் (National Informatics Center) உதவியுடன் வெளிடப்பட்டுள்ளன.

★ அனைத்துச் செயலக அலுவலர்கள் மற்றும் பணியாளர்களது விவரங்கள் அனைத்தும் கணினி மூலம் பராமரிக்கப்பட்டு வருகின்றன. (Personnel Information System) மற்றும் சட்டமன்றப் பேரவை வினாக்களுக்கு விடையளித்தல் போன்றவற்றை தேசியத் தகவல் மையத்தின் (National Informatics Centre) தொழில்நுட்ப உதவியுடன் கணினிமயமாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

★ இளையோரின் ஊதியத்திற்கு இணையாக மூத்தோரின் ஊதியம் சமன் செய்யப்பட்டு ஆணையிடப்பட்டது. இதனால் ஏறத்தாழ 1,778 பேர் பயனடைந்துள்ளனர்.

★ தலைமைச் செயலகத்தில் 166 பேர் தற்காலிகத் தட்டச்சர்களாகப் பணி நியமனம் செய்யப்பட்டனர். அலுவலக உதவியாளர் / பதிவறை எழுத்தர் / ஓட்டுநர் / வாகனம் சுத்தம் செய்வோர் ஆகிய வகையில் 58 பேர் உதவியாளராகப் பதவி உயர்வு பெற்றுள்ளனர். தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் 2007–2008–ஆம் ஆண்டுக்கு 185 பேர் நேர்முக எழுத்தர் பதவிக்கு நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 55 நபர்கள் உதவிப் பிரிவு அலுவலர்களாகப் பணியமர்த்தப்பட்டுள்ளனர். 144 நபர்களுக்கு உதவிப் பிரிவு அலுவலர்களாக பதவி உயர்வு அளிக்கப்பட்டுள்ளது. 26 பேருக்கு முதுநிலை தனிச் செயலராக பதவி உயர்வு அளிக்கப்பட்டுள்ளது. 46 பேருக்கு தனிச்செயலராகப் பதவி உயர்வு அளிக்கப்பட்டுள்ளது. 727 பேருக்கு பிரிவு அலுவலர்களாகப் பதவி உயர்வு அளிக்கப்பட்டது. 13 நேர்முக உதவியாளர்கள் மாற்றுப் பணிமூலம் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் மாநில நிருவாக சீர்திருத்தக் குழுவின் இறுதி அறிக்கையினை அதன் தலைவர் நீதியரசர் டாக்டர் ஏ.கே.இராஜன் அவர்கள் சந்தித்து வழங்கினார்.
உடன் மாநில நிருவாக சீர்திருத்தக் குழுவின் உறுப்பினர்கள் உள்ளனர். (3.10.2008)

---

★ தலைமைச் செயலகத் துறைகளில் நேரடியாக நியமனம் செய்யப்பட்டவர்களுக்கு, இதுவரை 61 அணிகளுக்கு அடிப்படைப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

★ 17,367 அரசு அலுவலர்களுக்கு மொத்தம் 688 பயிற்சி வகுப்புக்களை அண்ணா மேலாண்மை நிலையம் நடத்தி உள்ளது. மேலும் 2,617 அரசு அலுவலர்களுக்கு தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005இன் பல்வேறு கூறுகளில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

★ சென்னை அண்ணா நகரிலுள்ள அகில இந்திய குடிமைப்பணிகள் பயிற்சி மையத்தில், 2006–2007 மற்றும் 2007–2008ஆம் ஆண்டுகளில் அகில இந்திய குடிமைப் பணிகளுக்கு 35 நபர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். 2008–2009 ஆம் ஆண்டில் பயிற்சி பெற்ற மாணவர்களில் 57 மாணவர்கள் முதன்மைத் தேர்வில் தேர்ச்சி பெற்று நேர்காணல் தேர்விற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். இப்பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெறும் மாணவ/மாணவியரின் பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.50,000த்தில் இருந்து ஒரு இலட்சமாக உயர்த்தப்பட்டு, அவர்களுக்கு உணவும் உறைவிடமும் இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது.

★ அகில இந்திய குடிமைப்பணி தேர்வுப் பயிற்சி மைய விடுதியில் தங்கியுள்ள மாணவ, மாணவியருக்கு அளிக்கப்படும் உணவு மானியம் மாதம் ஒன்றுக்கு ரூ. 600/–இல் இருந்து ரூ. 800/– ஆக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.



# கூட்டுப் பொறுப்புக்குழு விவசாயிகளுக்கு பயிர்க்கடன்

**மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர்**
**திரு. கோ.சி.மணி அவர்கள்**

- ★ 7 ஆயிரம் கோடி ரூபாய் விவசாயக் கூட்டுறவுக் கடன் தள்ளுபடி செய்யப்பட்டு 22.81 இலட்சம் விவசாயிகள் பயன்பெற்றனர்.
- ★ கடன் தள்ளுபடியை ஈடு செய்திட கூட்டுறவுச் சங்கங்களுக்கு 3 ஆண்டுகளில் ரூ.4502.27 கோடி வழங்கப்பட்டுள்ளது.
- ★ 2006–2007 இல் பயிர்க்கடன் வட்டி 9 விழுக்காடு என்பது 7 விழுக்காடாக குறைக்கப்பட்டு, 31.3.2007 வரை 6,31,283 விவசாயிகளுக்கு ரூ.1,250.62 கோடியும், 2007–2008இல் 7 விழுக்காடு வட்டி என்பது 5 விழுக்காடாக குறைக்கப்பட்டு 6,48,397 விவசாயிகளுக்கு ரூ.1,393.97 கோடியும், 2008–2009இல் 5 விழுக்காடு வட்டி 4 விழுக்காடாகக் குறைக்கப்பட்டு 6,91,192 விவசாயிகளுக்கு ரூ.1,570.49 கோடியும் வழங்கப்பட்டுள்ளது.



மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கோ.சி.மணி அவர்கள் முன்னிலையில், தமிழ்நாட்டில் உள்ள நகரக் கூட்டுறவு வங்கிகளை மேலும் வலுப்படுத்தி, மேம்படுத்திட, தமிழ்நாடு அரசும், இந்திய ரிசர்வ் வங்கியும் செய்துகொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. ரிசர்வ் வங்கியின் உயர் அலுவலர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடன் உள்ளனர். (6–10–2008)

★ 1 இலட்சம் விவசாயிகளை உறுப்பினர்களாகக் கொண்டு 10 ஆயிரம் கூட்டுப் பொறுப்புக் குழுக்களை அமைத்து, ஒரு குழுவிற்கு 10 ஆயிரம் ரூபாய் வீதம் 10 கோடி ரூபாய் சுழல் நிதி வழங்கிட நிர்ணயிக்கப்பட்ட இலக்கை விஞ்சி, 11 ஆயிரத்து 155 கூட்டுப் பொறுப்புக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 9,776 கூட்டுப் பொறுப்புக் குழு உறுப்பினர்களுக்கு 106.67 கோடி ரூபாய் பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளது.

★ பண்ணைச்சாராக் கடன் பெற்றுள்ளவர்களுக்கு கூட்டுறவு வங்கிகளில் நிலுவையிலுள்ள கடன்களுக்கான வட்டி விகிதம் 18 விழுக்காட்டிலிருந்து 12 விழுக்காடாகக் குறைப்பு; தவணை தவறிய கடன்தாரர்களுக்கு 31.3.2008க்குள் தவணை தவறிய தொகையைத் திருப்பிச் செலுத்தும்பட்சத்தில் மேற்கண்ட வட்டிக் குறைப்புடன் அபராத வட்டி 3 விழுக்காடு முழுவதுமாகத் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. மேலும் 27.12.2006லிருந்து அபராத வட்டி 1.5 (ஆண்டிற்கு) விழுக்காடாகக் குறைப்பு; தவணை தவறிய தொகையைச் செலுத்தும் காலம் 30.9.2008 வரை மேலும் நீட்டிக்கப்பட்டது.

★ கலைத்தல் அறிவிப்பு வழங்கப்பட்டுள்ள 199 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் 197 தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள் புத்துயிரூட்டப்பட்டுள்ளன.

★ சிறு வணிகக் கடன் திட்டத்தில் மகளிருக்கு மட்டுமல்லாமல் ஆடவர்களுக்கும் விரிவாக்கப்பட்டு ரூ.5,000/– வரை வழங்கப்படுகிறது. 31.3.2009 வரை 52.57 கோடி ரூபாய் கடன் வழங்கப்பட்டுள்ளது.

★ தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் கடந்த இரண்டாண்டு காலத்தில் சிறு குறு விவசாயிகளுக்கான காப்பீடு மானியத்தின் மாநில அரசின் பங்காக 1,26,81,020/– ரூபாயும், பயிர் சேதத்தினால் விவசாயிகளுக்கு வழங்கிய இழப்பீட்டுத் தொகையில் மாநில அரசின் பங்காக 21,60,43,214/– ரூபாயும் ஆக மொத்தம் 22,87,24,234/– ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. 2008–2009இல் இத்திட்டத்தின்கீழ் 6,01,885 விவசாயிகளுக்கு ரூ.131.35 கோடி இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது.

★ இரண்டு நியாய விலைக் கடைகளுக்கு இடையே உள்ள தூரம் குறைந்தது 2 கிலோ மீட்டர் இருக்க வேண்டும் என்பதற்குப் பதிலாக குறைந்தது 1.5 கிலோ மீட்டர் எனவும், புதிதாகத் தோற்றுவிக்கப்படும் பகுதிநேரக் நியாயவிலைக் கடைகளில் குறைந்தபட்சம் 200 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் என்பதற்குப் பதிலாக குறைந்தது 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் எனவும் தளர்த்தி 13.5.2006க்கு பிறகு 759 புதிய பகுதி நேர நியாயவிலைக் கடைகள் திறக்கப்பட்டுள்ளன.

★ சரியான எடையில் பொருள்களை வழங்கிட 2006–2007 இல் 23,600 நியாய விலைக் கடைகளுக்கும் ரூ. 11.50 கோடியில் நவீன எடைபோடும் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

★ கூட்டுறவு நியாயவிலைக் கடை பணியாளர்களின் ஊதியவிகிதம் திருத்தப்பட்டு, குறைந்த பட்சமாக ரூ.1,350/–ம் அதிகபட்சம் ரூ.4,155/– ம் கூடுதலாகப் பெறுகின்றனர்.

★ சுமை தூக்கும் தொழிலாளர்களின் கையாளுதல் கூலி பத்து சதவீதம் உயர்வு; இனி மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை கையாளுதல் கூலி உயர்த்தி வழங்கிட 26.7.2008 அன்று ஆணை.

★ பொது விநியோகத் திட்டத்தில். ஜனவரி 2008 மாதத்தில் 2,89,286 மெட்ரிக் டன்னாக இருந்த அரிசியின் நுகர்வு ஜனவரி 2009 மாதத்தில் 3,12,905 மெட்ரிக் டன்னாக உயர்ந்துள்ளது.

★ 31–01–2009 வரை, 54,511 குடும்ப அட்டைகள் காவலர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

★ மாநில எல்லையோர மாநிலங்களுக்கு இன்றியமையாப் பண்டங்கள் கடத்துவதை தடுத்திட கன்னியாகுமரி, திருநெல்வேலி, கோயம்புத்தூர், கிருஷ்ணகிரி, மற்றும் வேலூர் ஆகிய மாவட்டங்களில் ஓர் ஆய்வாளர் மற்றும் 5 காவலர்களைக் கொண்ட சிறப்பு தனி ரோந்து படை அமைக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

★ 53 மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்களில் மின்னணுப் பட்டியல் இயந்திரம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.



# புதிய பயிர்க்கடன்கள்

**மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்**
**திரு. வீரபாண்டி எஸ்.ஆறுமுகம் அவர்கள்**

★ தமிழக விவசாயிகளின் கூட்டுறவு வங்கிக் கடன் 7,000 கோடி ரூபாய் முழுவதும் ரத்து செய்யப்பட்டு, 22,57,485 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

★ தமிழக விவசாயிகளுக்கு 2006–2007ஆம் ஆண்டிற்குப் பயிர்க் கடன்களுக்கான வட்டி விகிதம் 9 விழுக்காடு என்பது 7 விழுக்காடாகவும், 2007–2008இல் 5 விழுக்காடாகவும், 2008–2009இல் 4 விழுக்காடாகவும் குறைக்கப்பட்டதுடன் 2009–2010இல் வட்டி அறவே ரத்து செய்யப்பட்டுள்ளது.

★ 2006–2007இல் 6,31,283 விவசாயிகளுக்கு ரூ. 1,250.62 கோடி; 2007–2008இல் 6,48,397 விவசாயிகளுக்கு ரூ.1,393.97 கோடி; 2008–2009இல் 6,62,005 விவசாயிகளுக்கு, ரூ.1,517.43 கோடி பயிர்க்கடன்கள் வழங்கப்பட்டு, 2009–2010ஆம் ஆண்டில் 2,000 கோடி ரூபாய் பயிர்க்கடன் வழங்கிட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

★ ஆதிதிராவிட விவசாயிகள் 'தாட்கோ' நிறுவனத்தின் மூலம் 31.3.2006 வரை பெற்ற கடன் தொகை 3,47,00,000 ரூபாய்; கடன் தொகை மீதான வட்டி 59 இலட்சம் ரூபாய்; அபராத வட்டி 11,90,000 ரூபாய் – ஆக மொத்தம் 5,25,00,000 ரூபாய் முழுவதையும் ஆதிதிராவிட விவசாயிகளின் நலன் கருதி இரத்து செய்யப்பட்டது.

★ 1990 ஆம் ஆண்டில் அரசு,விவசாயிகளுக்கு வழங்கிய இலவச மின்சாரத் திட்டம் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப் படுவதுடன், கடந்த சில ஆண்டுகளில் முன்னுரிமை அடிப்படையில் சுயநிதி சிறப்புத்தொகை செலுத்தி விவசாயிகள் பெற்றுள்ள 2,39,511 மின் இணைப்புகளுக்கும் 37.48 கோடி ரூபாய் செலவில் 1.4.2006 முதல் முன்தேதியிட்டு இலவச மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது.

★ கடந்த ஆட்சிக் காலத்தில் வறட்சி காரணமாக உயிரிழந்த 22 விவசாயிகள் குடும்பங்களுக்குச் சுதந்திரத் திருநாளில் தலா 50,000/– ரூபாய் வீதம் நிதியுதவி அளிக்கப்பட்டது.

★ தந்தை பெரியாரின் பிறந்த நாளான 17.9.2006 அன்று திருவள்ளூரில் தொடங்கப்பட்ட நிலமற்ற ஏழை விவசாயத் தொழிலாளர் குடும்பங்களுக்கு இலவச நிலம் வழங்கும் திட்டத்தின்கீழ், இதுவரை 2,10,427 ஏக்கர் நிலம், 1,75,355 நிலமற்ற ஏழை விவசாயத் தொழிலாளர் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

★ நில அடமானத்தின்மீது தொழில்புரிய வழங்கப்பட்ட பண்ணைசாராக் கடன்களுக்கு வட்டி, அபராத வட்டி தள்ளுபடி செய்யப்பட்டு வாங்கிய கடன் அசல் தொகையை செலுத்தினால் கடன் ரத்து செய்யப்படுகிறது.

★ மாநிலத்திற்குள் பாயும் ஆறுகளை இணைத்து வெள்ளப்பெருக்கு ஏற்படும் காலங்களில் உபரிநீரை வறண்ட மாவட்டங்களுக்குக் கொண்டு சென்று பாசன வசதிகளைப் பெருக்கிடும் புரட்சிகரமான திட்டத்தின் முதற்கட்டமாக165 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதுக்கோட்டை, சிவகங்கை மாவட்டங்களின் வறண்ட பகுதிகள் பயன்பெற காவிரியின் குறுக்கே கட்டளையில் கதவணை கட்டும் காவிரி–குண்டாறு இணைப்புத் திட்டம்.

★ தூத்துக்குடி, திருநெல்வேலி மாவட்டங்களில் வறண்ட பகுதிகள் பயன்பெற 369 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தாமிரபரணி–கருமேனியாறு–நம்பியாறு–இணைப்புத் திட்டம்.

★ விவசாயத் தொழிலாளர்கள் விவசாயிகள் சமூகப் பாதுகாப்பு உதவித் திட்டத்தின்கீழ், 1 கோடியே 70 இலட்சத்து 30 ஆயிரத்து 265 உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். இதுவரை 3,65,077 விவசாயக் குடும்பங்களுக்கு 227,31,46,860 ரூபாய் உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

★ தலவரி, தலமேல்வரி, தண்ணீர்த் தீர்வை அனைத்தும் ரத்து செய்யப்பட்டது. நிலவரி, ஏக்கர் ஒன்றுக்குப் புன்செய் நிலங்களுக்கு 15 ரூபாய் என்பது 2 ரூபாய் என்றும், நன்செய் நிலங்களுக்கு 50 ரூபாய் என்பது 5 ரூபாய் என்றும் பெயரளவிற்கு மட்டுமே வசூலிக்க அரசு ஆணையிட்டுள்ளது.

★ நமது நாட்டின் மொத்த சர்க்கரை உற்பத்தியில் 10 சதவிகிதம் தமிழகத்தில் உற்பத்தி செய்யப்படுகிறது.

★ 40 சதவீத தண்ணீர் சேமிக்கும் சொட்டு நீர்ப்பாசனம் மற்றும் நிலத்தடி சொட்டு நீர்ப்பாசனம் ஆகிய முறைகளைப் பின்பற்றி கரும்பு சாகுபடியில் குழிமுறை நடவிலும், இரட்டை வரிசை நடவிலும் கரும்பு பயிரிட விவசாயிகளுக்கு எக்டேர் ஒன்றுக்கு அதிக பட்சமாக ரூ.28,800/–க்கு மிகாமல் 50 சதவீத மானியம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் சுமார் 12,000 கரும்பு விவசாயிகள் பயன் அடைவார்கள்.

★ சர்க்கரை ஆலைகளில், இணை மின் உற்பத்தி நிலையங்களை அமைப்பதில் முன்னோடியாகவுள்ள தமிழ்நாட்டில் 19 தனியார் சர்க்கரை ஆலைகளில், 404.19 மெகாவாட் திறனுடைய இணைமின் உற்பத்தி நிலையங்களும், 3 கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் சிறிய இணை மின் நிலையங்களும் உள்ளன. அரசு ரூ.1,177/– கோடி செலவில் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மூலம் 234 மெகாவாட் திறன் கொண்ட இணை மின் உற்பத்தி நிலையங்களை 17 கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் அமைத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

★ 2006–2007இல் கரும்புக்கு டன் ஒன்றுக்கு மத்திய அரசு ரூ.802.50 காசு என வழங்குவதை மாநில அரசு உயர்த்தி ரூ.1,025 எனவும், 2007–2008இல் ரூ.811.80 காசு என்பது ரூ. 1,034 எனவும் உயர்த்தி வழங்கப்படுகிறது. 2008–2009இல் மாநில அரசின் பரிந்துரை விலை டன் ஒன்றுக்கு ரூ.1,100 என்பதுடன் வாகன வாடகை டன் ஒன்றுக்கு ரூ.90; சர்க்கரை கட்டுமானத்திற்கு ஊக்கத் தொகை ரூ.30 சேர்த்து டன் ஒன்றுக்கு ரூ.1,220 எனவும் உயர்த்தி வழங்கப்படுகிறது.

★ 2006–2007 இல் சாதா ரகம் நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு மத்திய அரசு விலை ரூ.580 என நிர்ணயம் செய்தது; மாநில அரசு அதனை ரூ.620 என உயர்த்தியது. 2007–2008இல் மத்திய அரசு விலை ரூ.775 என நிர்ணயம் செய்தது; மாநில அரசு ரூ.825 என உயர்த்தியது. 2008–2009இல் மத்திய அரசு விலை ரூ.850 என நிர்ணயம் செய்தது; மாநில அரசு ரூ.1,000 என உயர்த்தியது.

★ 2006–2007 இல் சன்ன ரகம் நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு மத்திய அரசு விலை ரூ.610 என நிர்ணயம் செய்தது; மாநில அரசு அதனை ரூ.650 என உயர்த்தியது. 2007–2008இல் மத்திய அரசு விலை ரூ.745 என நிர்ணயம் செய்தது ; மாநில அரசு ரூ.795 என உயர்த்தியது. 2008–2009இல் மத்திய அரசு விலை ரூ.850 என நிர்ணயம் செய்தது; மாநில அரசு ரூ.1,050 என உயர்த்தியது.

★ 2008 நவம்பர் – டிசம்பர் மாதத்தில் ஏற்பட்ட மழை வெள்ளத்தால் 5.77 இலட்சம் எக்டரில் பாதிக்கப்பட்ட பயிர்களுக்காக, 2 எக்டேர் என்ற உச்சவரம்பைத் தளர்த்தி பாதிக்கப்பட்ட பரப்பு முழுவதற்கும் 10,40,000 விவசாயிகளுக்கு 388 கோடி ரூபாய் இழப்பீடாக வழங்கப்பட்டுள்ளது.

★ பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் தமிழக விவசாயிகள் அதிக அளவில் பயனடைய வேண்டும் என்ற குறிக்கோளுடன், காப்பீட்டுத் தொகையில் 50 விழுக்காடு தொகையை அரசே ஏற்கும் திட்டம் 2006 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டது. இதன்பயனாக, 2006இல் பயிர்க் காப்பீடு செய்த விவசாயிகள் எண்ணிக்கை 1 இலட்சம் என்பது 2008இல் 9.88 இலட்சமாக உயர்ந்தது; நடப்பு ஆண்டில் 25 இலட்சம் விவசாயிகள் பயிர்களைக் காப்பீடு செய்வதற்கு வசதியாக 40 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

★ 2005–06இல் உணவு தானிய உற்பத்தி 61.46 இலட்சம் டன்; இது 2006–07இல் 82.63 இலட்சம் டன் ஆகவும், 2007–08இல் 84.46 இலட்சம் டன் ஆகவும், 2008–09இல் 91.11 இலட்சம் டன் ஆகவும் உயர்ந்துள்ளது.

★ நீராதாரங்களை மேம்படுத்தி பாசனநீரை வேளாண் உற்பத்திக்கு சிறந்த முறையில் உபயோகிக்க தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டம், வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை, வேளாண் பொறியியல் துறை, வேளாண் விற்பனைத்துறை மற்றும் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் மூலம் ரூ.691.42 கோடி ஒதுக்கீட்டில், 63 துணை ஆற்றுப்படுகைகளில் 6 ஆண்டுகளில் (2007–2013) 6.17 இலட்சம் எக்டர் பரப்பில் செயல்படுத்த திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் 2007–08ஆம் ஆண்டில், வேளாண்மை சார்புத் துறைகள் மூலம் ரூ.23.2 கோடி செலவில் 9 துணை ஆற்றுப்படுகைகளிலும், 2008–09ஆம் ஆண்டு 25 துணை ஆற்றுப்படுகைகளில் வேளாண் மேம்பாட்டிற்கு ரூ.94.06 கோடி செலவில் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

★ 2006 முதல் மார்ச் 2009 வரை 13.67 இலட்சம் விவசாயிகளுக்கு மண்வள அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

★ 22,200 எக்டரில் துல்லிய பண்ணையத் தொழில்நுட்பம் மேற்கொள்ள ரூ.105.2 கோடி ஒதுக்கீட்டில் திட்டம் – விவசாயிகளுக்கு சொட்டுநீர்ப் பாசன மற்றும் நீர்வழி உரமிடல் கருவிகள் அமைக்கவும் நீரில் கரையும் உரங்கள் உட்பட இடுபொருட்களுக்கு எக்டருக்கு ரூ.65,000/– மானியம்.

★ 385 வட்டாரங்களில் தரமான இடுபொருட்கள் வழங்க மற்றும் தொழில்நுட்ப ஆலோசனைக்கு விவசாயத் தொழில்நுட்ப மையங்கள் ரூ.12.31 கோடி ஒதுக்கீட்டில் அமைக்கப்படுகிறது.

★ 1,295 மண்புழு உர உற்பத்தி மையம் துவங்க – ஒரு மையத்திற்கு மானியம் ரூ.0.45 இலட்சம், 259 நகராட்சி கம்போஸ்ட் உற்பத்தி மையம் துவங்க – ஒரு மையத்திற்கு மானியம் ரூ.2.05 இலட்சம், 259 உயிரி இடுபொருள் உற்பத்தி மையம் துவங்க ஒரு மையத்திற்கு ரூ.1.25 இலட்சம் மானியம் – மொத்த ஒதுக்கீட்டுத் தொகை ரூ.17.80 கோடி.

★ தரமான விதை உற்பத்தி மற்றும் விநியோகத்திற்கு ரூ.33.50 கோடி ஒதுக்கீடு.

★ 5 மாவட்டங்களில் நெல் உற்பத்தியை உயர்த்தவும், 12 மாவட்டங்களில் பயறு வகைகள் உற்பத்தியை உயர்த்தவும் ரூ.47.82 கோடி ஒதுக்கீட்டில் 'தேசிய உணவுப் பாதுகாப்புத் திட்டம்' செயல்படுத்தப்பட்டது.

★ இத்திட்டத்தில் ரூ.6.56 கோடி செலவில் நெல் விதைகள் 5,006 மெ. டன்களும், எண்ணெய்வித்துக்கள் 920 மெ. டன்களும், பயறுவிதைகள் 130 மெ. டன்களும், 2.23 இலட்சம் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டு, பயிற்சியும் அளிக்கப்பட்டுள்ளது.

★ 2,837 விவசாய ஆர்வலர் குழுக்கள் ரூ.3.36 கோடி ஒதுக்கீட்டில் 42,555 விவசாயிகளை உறுப்பினர்களாகக் கொண்டு உருவாக்கப்பட்டது.

★ 2006–07 மற்றும் 2007–08ஆம் ஆண்டுகளில் ரூ.5.15 கோடி செலவில் 8,091 பண்ணை மகளிர் குழுக்களுக்கு சுயதொழில் துவங்க பயிற்சி மற்றும் நிதி உதவி. 2008–09ஆம் ஆண்டு 2,025 குழுக்களுக்கு, குழுவிற்கு ரூ.10,000/– வீதம் தொழில் துவங்க ரூ.2.19 கோடி ஒதுக்கீட்டில் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. மொத்தத்தில் 10,116 குழுக்களைச் சார்ந்த சுமார் 1.50 இலட்சம் பண்ணை மகளிர் பயன்பெற்றனர். மேலும் 223 பண்ணை மகளிர் குழுக்கள் வேளாண் இயந்திரங்களை வாடகைக்கு விடுவதன் மூலம் பயன்பெற அக்குழுக்களுக்கு 25 சதவீத மானியத்தில் பண்ணைக் கருவிகள் ரூ.100 இலட்சம் ஒதுக்கீட்டில் வழங்கப்பட்டுள்ளது.



# சட்டக்கல்லூரிகளில் புதிய விடுதிக் கட்டடங்கள் அமைப்பு

## மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்கள்

★ சட்டக் கல்லூரி நுழைவுத் தேர்வு 2007–2008இல் ரத்து செய்யப்பட்டது.

★ அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் செயல்பாட்டைப் பன்னாட்டு அளவில் மேலும் விரிவுபடுத்த சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகம், அமெரிக்க ஐக்கிய நாட்டைச் சார்ந்த ஒக்லஹாமா பல்கலைக்கழகம், லண்டன் மெட்ரோபாலிடன் பல்கலைக்கழகம், கொரியாவைச் சார்ந்த யங்சான் பல்கலைக்கழகம் ஆகியவற்றோடு புரிந்துணர்வு உடன்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

★ சென்னை, டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரியில் மூன்றாண்டு சட்டப் படிப்பில் முதலாண்டு இடங்கள் 80லிருந்து 321 ஆகவும், ஐந்தாண்டு சட்டப் படிப்பில் முதலாண்டு இடங்கள் 80 லிருந்து 241 ஆகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

★ 2008–09ஆம் கல்வியாண்டு முதற்கொண்டு – நாட்டிலேயே முதலாவதாக மூன்றாண்டு (ஹானர்ஸ்) பட்டப்படிப்பில் பாட துறையிடைப் படிப்புகள் என்ற வகையில், மருத்துவத் தொழில்நுட்ப சட்டப்படிப்புகள் என்னும் புதிய பாடத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், அகில இந்திய வழக்கறிஞர் மன்றம் வரும் கல்வியாண்டில் வணிகவியல், மேலாண்மை மற்றும் இதர பட்டதாரிகளுக்கென 3 ஆண்டு சிறப்பு பி.எல் (ஹானர்ஸ்) படிப்பைத் தொடங்கவும் தனியே அனுமதி வழங்கியுள்ளது.

★ இந்திராகாந்தி திறந்தவெளிப் பல்கலைக்கழகத்துடன் 2008 ஜூனில் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து, ஆறு மாதகால முதுநிலை பட்டய கணினிச் சட்டப் படிப்பினை வழங்கப்படுகிறது.

★ நுகர்வோர் சட்டக் கல்வி என்ற புதிய முதுநிலை பட்டய வகுப்பு மாலை நேர வகுப்பாக 2008–09இல் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

★ சென்னை, டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரியில் மூன்றாண்டு மற்றும் ஐந்தாண்டு சட்டப் படிப்புகளில் முதலாம் ஆண்டில் தமிழ் வழியில் கல்வி கற்பிக்க தனியாக ஒரு பிரிவு தொடங்கிடவும், தமிழ்வழி பயிலும் மாணவர்களுக்கு ஒரு ஆண்டுக்கு ரூ.400/– ஊக்கத் தொகை வழங்கிடவும் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

★ 2006–2007ஆம் கல்வியாண்டு முதல் திருநெல்வேலி அரசு சட்டக் கல்லூரியில் எம்.எல். படிப்பு தொடங்கிடவும் அதில் 15 மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கும் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

★ 2007ஆம் ஆண்டில் வியன்னா மற்றும் ஹாங்காங்கில் நடைபெற்ற சர்வதேச வழக்குவாத போட்டிகளில் கலந்து கொள்ள 8 மாணவர்களுக்கு மொத்தம் ரூ.5,25,000/– நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது.

★ அதேபோல் 2008ஆம் ஆண்டில் வழக்குவாத போட்டிகளில் 7 மாணவர்களுக்கு மொத்தம் ரூ.5,25,000/– நிதியுதவி வழங்கப்பட்டது.

★ ஆஸ்திரேலியாவிலுள்ள மெல்போன் நகரில் நடைபெற்ற சர்வதேச வழக்குவாதப் போட்டிகளில் கலந்து கொள்வதற்காக 2007ஆம் ஆண்டில் நான்கு மாணவர்களுக்கு மொத்தம் ரூ.3 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டது.

★ ரூ.65.83 இலட்சம் செலவில் சட்டக் கல்வி இயக்ககத்திற்கு சொந்தக் கட்டடம், ரூ.124.37 இலட்சம் செலவில் கோயம்புத்தூர் அரசு சட்டக் கல்லூரி மாணவியர்களுக்கு விடுதிக் கட்டடம், திருச்சி சட்டக் கல்லூரிக்கு ரூ. 84 இலட்சம் செலவிலும், நெல்லை சட்டக் கல்லூரிக்கு ரூ. 84 இலட்சம் செலவிலும் மாணவர்களுக்கான விடுதிக் கட்டடங்கள், கோவை அரசு சட்டக் கல்லூரி மாணவர் விடுதியில் ரூ.22.37 இலட்சம் செலவில் கூடுதல் அறைகள், செங்கல்பட்டு சட்டக் கல்லூரிக்கு ரூ. 80 இலட்சம் செலவில் கூடுதல் கட்டடங்கள், மதுரை சட்டக் கல்லூரிக்கு ரூ.76 இலட்சம் செலவில் கூடுதல் கட்டடங்கள் ஆகியன கட்டப்பட்டுள்ளன.

★ ரூ. 38 இலட்சம் செலவில் அனைத்து அரசு சட்டக் கல்லூரி நூலகங்களுக்கும் புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன.

★ 2009 ஆம் ஆண்டில் வியன்னா மற்றும் ஹாங்காங்கில் நடைபெறும் சர்வதேச வழக்குவாத போட்டிகளில் கலந்துகொள்ள 8 மாணவர்களுக்கு ரூ.5,25,000/– நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.



# கல்விக் கட்டணம் நீக்கம்

**மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர்**
**முனைவர் க.பொன்முடி அவர்கள்**

- ★ அரசு ஒதுக்கீட்டின் கீழ் சிறுபான்மையல்லாத சுயநிதிப் பொறியியற் கல்லூரிகளில் 65 விழுக்காடு இடங்களும், சிறுபான்மை சுயநிதிப் பொறியியற் கல்லூரிகளில் 50 விழுக்காடு இடங்களும் ஒதுக்கீடு செய்யப்பட்டு ஆண்டுதோறும் ஏறத்தாழ 50,000 மாணவர்களுக்கும் கூடுதலாகப் பயன்பெறுகின்றனர்.
- ★ 2007–2008 முதல் தொழிற்கல்விக்கான பொது நுழைவுத் தேர்வு நீக்கம் செய்யப்பட்டது.
- ★ பொறியியற் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கைக்கான மதிப்பெண்கள் 2007–08ஆம் ஆண்டு முதல் அனைத்துப் பிரிவினருக்கும் குறைக்கப்பட்டுள்ளது.




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், சென்னைப் பல்கலைக்கழக செனட் ஹாலில் நடைபெற்ற விழாவில் விரிவுரையாளர் பணிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட 482 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். உடன் மாண்புமிகு உயர்கல்வி மற்றும் கனிமவளத்துறை அமைச்சர் டாக்டர் க. பொன்முடி அவர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர். (30–9–2008)

- ★ 2008–2009ஆம் கல்வியாண்டு முதல் பொறியியற் கல்லூரி மாணவர் சேர்க்கை கலந்தாய்வில் பங்கேற்க வரும் மாணவர் மற்றும் அவரது உதவிக்காக வரும் ஒருவருக்கு 50 சதவீத இருவழிப் பயணக் கட்டணச் சலுகை வழங்கப்படுகிறது.
- ★ 2008–2009ஆம் ஆண்டு முதல் பொறியியற் கல்லூரிகளில் முன்னாள் இராணுவத்தினரின் பிள்ளைகளுக்கான இடஒதுக்கீடு 81 என்பது 150 ஆகவும், விளையாட்டு வீரர்களுக்கான இடஒதுக்கீடு 42 என்பது 100 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.
- ★ 2008–2009ஆம் ஆண்டு முதல் பொறியியல் பலவகைத்தொழில்நுட்பக் கல்லூரிகளில் நியமனத்திற்குத் தேர்ச்சி பெற்றவர், பணியில் சேருவதற்கு முன் நியமனத்திற்குப் பயிற்சி அளிப்பதற்கு நிறைவுப் பள்ளித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.
- ★ 2008–2009ஆம் ஆண்டு முதல் அரசுப் பொறியியற் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கைக்கு 600 கூடுதல் இடங்கள் அனுமதி அளிக்கப்பட்டது.
- ★ 2008–2009ஆம் கல்வியாண்டு முதல் அனைத்து கலை மற்றும் அறிவியல் மற்றும் பொறியியல் கல்லூரி மாணவர்களுக்கு உளவியல் சார்ந்த ஆலோசனைகளை உளசிகிச்சையாளர்கள் கழகம் **(Academy for Psychotherapists, Psychopathologists & Psychometricians)** மூலம் வழங்கப்படுகிறது.
- ★ 2008–2009ஆம் ஆண்டு முதல் பல்கலைக்கழகங்கள் வழங்கும் மதிப்பெண் சான்றிதழில், மதிப்பெண் வழங்குவதற்குப்பதிலாக தரமுறையினை **(Grading Method)** செயல்படுத்த ஆணையிடப்பட்டுள்ளது.
- ★ தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தின் பரிந்துரையுடன் சமுதாயக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் 2008–2009 ஆம் கல்வியாண்டிலிருந்து ஆண்டுதோறும் 10,000 மாணவர்களுக்கு தலா ரூ.1,000 உதவித் தொகை வழங்கப்படுகிறது.
- ★ அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு வேலைவாய்ப்பினை பெற்றுத் தரும் பொருட்டு, கல்லூரிக் கல்வி இயக்ககத்தில் மாணவர் பணியமர்த்துதல் மையம் ஒன்று தொடங்கப்பட்டுள்ளது.
- ★ 2006–2007ஆம் ஆண்டு முதல் அனைத்து அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மாற்று முறை **(Shift System)** நடைமுறைப்படுத்தப்பட்டதால், 2007–2008ஆம் கல்வியாண்டில் 10,343 மாணவர்களும்; 2008–2009ஆம் கல்வியாண்டில் 20,044 மாணவர்களும் கூடுதலாக முதலாமாண்டில் சேர்ந்து பயன்பெற்றுள்ளனர். மேலும், 2009–2010ஆம் கல்வியாண்டு முதல், இத்திட்டம் முதற்கட்டமாக 14 அரசு பலவகைத்தொழில்நுட்பக் கல்லூரிகளில் நடைமுறைப்படுத்தப்பட்டது.
- ★ 2007–2008ஆம் ஆண்டு முதல் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் கல்லூரியை அலகாகக் கொண்டு கலந்தாய்வு முறையில் மாணவர் சேர்க்கை அறிமுகப்படுத்தப்பட்டது.
- ★ 2007–2008ஆம் ஆண்டு முதல் அனைத்துக் கல்வியியல் கல்லூரிகளிலும் மாணவர் சேர்க்கையில் ஒற்றைச்சாளரமுறை அறிமுகப்படுத்தப்பட்டது.
- ★ 2006–2007ஆம் கல்வியாண்டு முதல் அரசுப் பொறியியல் கல்லூரிகளில் கல்விக் கட்டணம் ரூ.12,550/–லிருந்து ரூ. 7,550/– ஆக குறைக்கப்பட்டுள்ளது.

★ 2007–2008ஆம் கல்வியாண்டு முதல் அரசு மற்றும் அரசு உதவி பெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பட்டப்படிப்புப் பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் கல்விக் கட்டணம் நீக்கப்பட்டது. ஆண்டுதோறும் மூன்று இலட்சம் மாணவ, மாணவியர் பயன்பெறுகின்றனர்.

★ 2008–2009ஆம் ஆண்டு முதல் அரசு பாலிடெக்னிக்கில் பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் கல்விக் கட்டணம் நீக்கம் செய்யப்பட்டது.

★ அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் ஈ.வெ.ரா.நாகம்மையார் இலவசப் படிப்புத் திட்டத்தின் சலுகை பட்ட மேற்படிப்புப் பயிலும் ஏழை மாணவியருக்கும் 2007–2008–ஆம் ஆண்டு முதல் நீட்டித்து வழங்கப்படுகிறது. இச்சலுகை பெற பெற்றோரின் ஆண்டு வருமான வரம்பு ரூ.24,000/–லிருந்து ரூ.50,000/– ஆக உயர்த்தப்பட்டது.

★ அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள், பாலிடெக்னிக்குகள் மற்றும் உயர்கல்வித் துறையின் கீழ் இயங்கும் பல்கலைக்கழகங்களில் பயிலும் உடல் ஊனமுற்றோருக்கு கல்விக் கட்டணம் செலுத்துவதிலிருந்து முழு விலக்களிக்கப்பட்டுள்ளது.

★ பொறியியற் கல்லூரிகளில் பயிலும் 302 ஏழை மாணவர்களுக்கு, தமிழக முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூ.25,000/– வீதம் மூன்று ஆண்டுகளில் ரூ.75.50 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

★ அரசுக் கல்லூரி மாணவர்களின் வேலைவாய்ப்புகளுக்கு வழிவகுத்திட அகல்கற்றையுடன் கூடிய இணையதள வசதிகள் (**Internet with broadband facilities**) மத்திய அரசின் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் உதவியுடன் விழுப்புரம் மற்றும் திருவண்ணாமலை அரசுக் கல்லூரிகளில் அறிமுகப்படுத்தப்பட்டது.

★ தமிழ்நாட்டிலுள்ள கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கு வணிக ஆங்கிலப் பயிற்சியினை (**Business English Certificate Course**) அளிக்க பிரிட்டிஷ் கவுன்சிலுடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டுள்ளது.

★ 2007–08ஆம் ஆண்டு முதல் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயிலும் 80,000 மாணவர்களுக்கும் மேலும், அரசு பலவகைத்தொழில் நுட்பக் கல்லூரிகளில் பயிலும் 10,000 மாணவர்களுக்கும் ஆண்டுதோறும் இலவச பேருந்துப் பயண அட்டை வழங்கப்படுகிறது.

★ 2007–08ஆம் கல்வியாண்டு முதல் ஆண்டுதோறும், பலவகைத்தொழில் நுட்பக் கல்லூரிகளில் பயிலும் அனைத்து முதலாமாண்டு மாணவர்களுக்கு கணிதம், வேதியியல் மற்றும் இயற்பியல் பாடங்களுக்கான பாடப்புத்தகங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன.

★ அரசுப் பொறியியற் கல்லூரிகள் மற்றும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் சுயநிதி பாடப்பிரிவுகள் அனைத்தும் பொதுவகைப் பாடப்பிரிவுகளாக மாற்றப்பட்டு, கல்விக்கட்டணம் குறைந்து, ஏழை மாணவர்கள் உயர்கல்வி தொடர வழிவகுக்கப்பட்டுள்ளது.

★ 2006–07 முதல் 2008–09 வரையில் அரசு கலை மற்றும் கல்வியியல் கல்லூரிகள் மற்றும் அரசுப் பொறியியல் / பாலிடெக்னிக் கல்லூரிகளில் ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் 1,765 (1472+293) விரிவுரையாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்; அரசு உதவிபெறும் கல்லூரிகளில் 2,600 விரிவுரையாளர் பணியிடங்கள் நிரப்ப அனுமதி வழங்கப்பட்டது.

★ திருச்சி, கோவை, நெல்லை ஆகிய ஊர்களில் அண்ணா தொழில்நுட்பப் பல்கலைக்கழகங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

★ திருவாரூரில் மத்தியப் பல்கலைக்கழகம் இவ்வரசின் சீரிய முயற்சியால் தொடங்கப்பட்டுள்ளது.

★ திருச்சியில் இந்திய மேலாண்மைக் கல்வி நிறுவனம் தொடங்கப்பட மத்திய அரசுக்குத் தேவையான நிலம் அளிக்கப்பட்டுள்ளது.

★ 2008–09ஆம் கல்வியாண்டில் திண்டிவனம், விழுப்புரம், பண்ருட்டி, திருக்குவளை (நாகப்பட்டினம்), இராமநாதபுரம் மற்றும் அரியலூர் ஆகிய இடங்களில் 6 புதிய பொறியியற் கல்லூரிகள் அண்ணா பல்கலைக்கழகம் மூலம் தொடங்கப்பட்டுள்ளன.

★ மேட்டூர், வால்பாறை, பெரம்பலூர், ஒரத்தநாடு, சுரண்டை, குளித்தலை, லால்குடி ஆகிய 7 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் தொடங்கப்பட்டுள்ளன.

★ அண்ணா பல்கலைக்கழகம் ஆஸ்திரேலியாவின் சிட்னி பல்கலைக்கழகத்துடன் தகவல் தொழில்நுட்பம், நானோ டெக்னாலஜி, உயிரி தொழில்நுட்பம், கடல் அறிவியல் தொழில்நுட்பம், நீர் மற்றும் சுற்றுப்புறச் சூழல் தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் கருத்துப் பரிமாற்றங்களுக்காகவும், ஆராய்ச்சிகளுக்காக மாணவர்கள் பரிமாற்றத்திற்காகவும் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது.

★ அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 2006–2007ஆம் ஆண்டு முதல் 2008–09ஆம் ஆண்டு முடிய 1,142 கூடுதல் வகுப்பறைகள் ரூ.64.58 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

★ 2008–2009ஆம் ஆண்டில் ரூ.8.64 கோடியில் 60 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 188 நவீன கழிப்பறைத் தொகுப்புகளும் 9 அரசு மகளிர் கலைக் கல்லூரிகளில் ரூ.98 இலட்சம் செலவில் சுற்றுச் சுவர் கட்டும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

★ சென்னை மாநகரில் உள்ள பழமைவாய்ந்த பாரதி மகளிர் கலைக் கல்லூரி, இராணிமேரி கலைக் கல்லூரி, காயிதே மில்லத் கலைக் கல்லூரி, ஆகியவை, ரூ.1.5 கோடி செலவில் புனரமைக்கப்பட்டுள்ளன.

★ சென்னையிலுள்ள இராணிமேரி கல்லூரி இடப்பற்றாக்குறையை நீக்கிட, ரூ.2.5 கோடி செலவில் ''கலைஞர் வளாகம்'' என்ற புதிய கட்டடம் கட்டப்படுகிறது.

★ 1கோடி ரூபாய் செலவில் கோவை பாரதியார் பல்கலைக்கழகத்தின் ''நானோ தொழில்நுட்ப மையம்'' சிறப்புத் தகுதி மையமாக மேம்படுத்தப்படுகிறது.

★ அனைத்து அரசுக் கல்லூரிகளிலும் கூடுதல் ஆய்வுக் கூடங்கள் கட்டிட முடிவு செய்யப்பட்டு, முதற்கட்டமாக 2007–2008ஆம் ஆண்டு 32 அரசுக் கல்லூரிகளில் 42 புதிய ஆய்வகங்கள் ரூ.6.6 கோடி செலவில் கட்டப்பட்டன.



# புதிய பேருந்துகள் இயக்கம்

**மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்**
**திரு. கே.என்.நேரு அவர்கள்**

★ மாநகர் போக்குவரத்துக் கழகத்தில் 100 தொடர் பேருந்துகளும், 874 தாழ்தளப் பேருந்துகளும், 30 குளிர்சாதன வால்வோ பேருந்துகளும், 1,246 சாதாரண பேருந்துகளும், அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தில் 615 அதிநவீன சொகுசுப் பேருந்துகளும், 50 குளிர்சாதன வசதிகள் கொண்ட பேருந்துகளும், புறநகர் போக்குவரத்துக் கழகங்களில் 555 அதிநவீன சொகுசுப் பேருந்துகளும், 50 அதிநவீன சொகுசு குளிர்சாதன வசதிகள் கொண்ட பேருந்துகளும், 6,135 சாதாரணப் பேருந்துகளும் என மொத்தம் 9,655 புதிய பேருந்துகள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. 2009–10ஆம் நிதியாண்டில், மாநில அரசின் நிதியுதவி மற்றும் ஜவர்ஹர்லால் நேரு நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின் கீழ் மத்திய அரசின் நிதியுதவி ஆகியவற்றின் மூலமாக, மேலும் 3,500 புதிய பேருந்துகள் வாங்கப்படவுள்ளன. ஆக மொத்தம் புதிய பேருந்துகளின் எண்ணிக்கை 13,155 ஆகும்.

★ சென்னை மாநகர் மக்களைக் கவரும் வகையில் தாழ்தளப் பேருந்துகள் மற்றும் குளிர்சாதன சொகுசுப் பேருந்துகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

★ சென்னை மாநகரில் அண்மைக் காலத்தில் தொடங்கப்பட்டு வெற்றிகரமாக இயங்கி வரும் நெரிசல் நேர பேருந்து இயக்கம் (**Peakhour Services**) மற்ற நகரங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

★ 1,737 புதிய வழித்தடங்கள் தொடங்கப்பட்டன.

★ 2,632 தடங்களில் போக்குவரத்துகள் நீட்டிக்கப்பட்டன.



சென்னையில் மாநகரப் போக்குவரத்துக் கழகத்தின் புதிய நவீன ரக குளிர்சாதன சொகுசுப் பேருந்துகளை, மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் கொடியசைத்துத் துவக்கி வைத்தார். (8–10–2009)

★ சென்னை மாநகரில் இதுவரை 40 கி.மீ வரை இயக்கப்பட்ட மாநகரப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் தற்போது 50 கி.மீ. வரை நீட்டிக்கப்பட்டுள்ளன. அதேபோல் தமிழ்நாட்டின் மற்ற நகரங்களில் 35 கி.மீ வரை இயங்கி வந்த நகரப் பேருந்துகள் 40 கி.மீ வரை நீட்டிக்கப்பட்டுள்ளன.

★ திருவண்ணாமலையைத் தலைமையிடமாகக் கொண்டு ஒன்றும், கடலூரைத் தலைமையிடமாகக் கொண்டு ஒன்றும், திருவள்ளூரை தலைமையிடமாகக் கொண்டு ஒன்றும் ஆக மூன்று புதிய போக்குவரத்து மண்டலங்கள் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், விழுப்புரத்தின் கீழ் தொடங்கப்பட்டுள்ளன,

★ போக்குவரத்துக் கழகங்களில் 21,302 ஓட்டுநர்கள், 18,639 நடத்துனர்கள், 255 தொழில்நுட்பம் மற்றும் இதர பணியாளர்கள் ஆக மொத்தம் 40,196 பணியாளர்கள் புதியதாகப் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

★ இதில் தொழிலாளர்களின் வாரிசுதாரருக்கு கருணை அடிப்படையில் அளிக்கப்பட்ட 86 ஓட்டுநர்கள் 529 நடத்துநர்கள், 208 இதர பணியாளர்கள் நியமனங்களும்; கையிருப்பில் **(Reserve)** வைத்துக்கொள்ள பணியமர்த்தப்பட்ட 12,724 ஓட்டுநர்கள் மற்றும் 12,603 நடத்துநர்களும் அடங்குவர்.

★ அரசுப் போக்குவரத்துக் கழகத்தில் விபத்தின்றிப் பணிபுரியும் ஓட்டுநர்களுக்கான முதலமைச்சரின் வெகுமதித் திட்டம் 2008–09ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டுள்ளது.

★ கடந்த ஆட்சிக் காலத்தில் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை என மாற்றியமைக்கப்பட்ட ஊதிய ஒப்பந்த காலம் மீண்டும் மூன்று ஆண்டுகளாக முறைப்படுத்தப்பட்டு 1.9.2007 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இதன்படி 12 சதவீத ஊதிய உயர்வு அளிக்கப்பட்டு, 1,14,532 பணியாளர்கள் பயனடைந்துள்ளனர். ஆண்டொன்றிற்கு மொத்தம் ரூபாய் 205 கோடி செலவில் இந்த ஒப்பந்தத்தின் மூலம், பணியாளர்களுக்கு மாதம் 1,000 ரூபாய் முதல் 2,000 வரை ஊதிய உயர்வுகள் கிடைத்துள்ளன. இதனைத் தொடர்ந்து நிருவாக மேற்பார்வையாளர்கள் மற்றும் தொழில்நுட்ப மேற்பார்வையாளர்களின் சம்பளமும் அரசு ஊழியர்களுக்கு இணையாக 01.01.2008 முதல் திருத்தியமமைக்கப்பட்டுள்ளது.

★ பயணிகளின் நலனைக் கருத்தில் கொண்டும்; நடத்துனர்களின் வேலைப்பளுவைக் குறைக்கவும், மின்னணுப் பயணச்சீட்டு வழங்கும் கருவிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

★ மாநகர் போக்குவரத்துக் கழகம் மற்றும் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகங்களில் சில முக்கியத் தடங்களில் இயக்கப்படும் பேருந்துகளில் சோதனை அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்பட்ட **GPS (Global Positioning System)** திட்டத்தின் வெற்றியைத் தொடர்ந்து 600 மாநகர் பேருந்துகளில் இவ்வசதி விரிவுபடுத்தப்பட்டுள்ளது. மேலும், பேருந்து அடுத்து நிற்க இருக்கும் பேருந்து நிறுத்தத்தின் பெயரை பேருந்துகளில் **GPS** தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி தானாகவே அறிவிப்பு செய்யும் முறையையும் சோதனை முறையில் 12 பேருந்துகளில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

★ போக்குவரத்துக் கழகப் பணியாளர்களுக்கு கடந்த 2006–07 மற்றும் 2007–08ஆம் ஆண்டிற்கான போனஸ் மற்றும் கருணைத்தொகை அதிகபட்சம் ரூ.2,500/– என்பதை ரூ.3,500/– ஆக உயர்த்தி முறையே 8.33 மற்றும் 11.67 சதவீதம் ஆகமொத்தம் 20 சதவீதம் என்ற அடிப்படையில் வழங்கப்பட்டது.

★ புத்தாண்டுத் திருநாளின்போது, போக்குவரத்துக் கழகப் பணியாளர்களுக்கு கடந்த 2007 மற்றும் 2008–ஆம் ஆண்டிற்கான சாதனை ஊக்கத்தொகையாக தலா ரூ.625/– வழங்கப்பட்டது.

★ அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர்களுக்கும் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களுக்கும் அரசு ஓய்வூதியதாரர்களைப் போன்று ரூ.150/– பொங்கல் பரிசாக 2007 மற்றும் 2008 இல் வழங்கப்பட்டது.



# ஏழைக் குழந்தைகளுக்கு இலவசமாக இருதய அறுவை சிகிச்சை

**மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்**
**திரு. எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள்**

★ 4,279 மருத்துவர்கள், அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் 5,183 செவிலியர்கள், மருத்துவம் சார்ந்த சுமார் 9,000 பணியாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மேலும் தொகுப்பூதியத்தில் பணியாற்றி வந்த 1,249 மருத்துவர்கள் மற்றும் 4,229 செவிலியர்கள் முறையான ஊதிய விகிதத்தில் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

★ தமிழகத்தில் செயல்படும் 1,421 ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் 24 மணிநேர பிரசவ சேவைத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இதற்காக ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திலும் மூன்று செவிலியர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் கணினி வழங்கப்பட்டுள்ளது. இணையதளம் வாயிலாக தகவல்கள் தினந்தோறும் பெறப்பட்டு ஆரம்ப சுகாதார நிலையப் பணிகள் கண்காணிக்கப்படுகிறது.

★ ஆரம்ப சுகாதார நிலையங்களில் 2006–07–ஆம் ஆண்டில் நடந்த பிரசவங்களின் எண்ணிக்கை 82,532 ஆகும். இந்த எண்ணிக்கை 2008–09–ஆம் ஆண்டில் 2,59,133 ஆக உயர்ந்துள்ளது. இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் தான் ஆரம்ப சுகாதார நிலையங்களில் அதிக அளவில் பிரசவங்கள் நடைபெறுகின்றன.

★ ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு பரிசோதனைக்காக வரும் கர்ப்பிணிப் பெண்களுக்கு இலவச சத்துணவு வழங்கப்படுகிறது. பிரசவத்திற்காக சேரும் கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் குடும்ப நல அறுவை சிகிச்சை செய்து கொள்ளும் பெண்களுக்கும் தினமும் மூன்று வேளை உணவு மூன்று நாட்களுக்கு இலவசமாக வழங்கப்படுகிறது. 15.09.2008 இல் தொடங்கப்பட்ட இத்திட்டத்தில் இதுவரை 5,56,784 தாய்மார்கள் பயனடைந்துள்ளனர். இதற்காக



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களை, “இளம் சிறார் இருதயப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ்'' அறுவை சிகிச்சை செய்து கொண்ட திண்டுக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த குழந்தைகள், தங்களது பெற்றோர்களுடன் சந்தித்து நன்றி தெரிவித்து வாழ்த்துப் பெற்றனர். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம், மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் ஐ. பெரியசாமி மற்றும் உயர் அலுவலர்கள் உடன் உள்ளனர்.(18.8.2008)

ரூபாய் 1.53 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது. இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் தான் ஆரம்ப சுகாதார நிலையங்களில் அனைத்து கர்ப்பிணிப் பெண்களுக்கும் சத்துணவு வழங்கும் திட்டம் அமல்படுத்தப்பட்டுள்ளது.

★ ஏழை கர்ப்பிணிப் பெண்கள் ஊட்டச்சத்து உட்கொள்ளவும், கருவுற்றிருக்கும் காலத்தில் ஏற்படும் வருவாய் இழப்பை ஈடுகட்டவும் டாக்டர். முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டத்தின் கீழ் ஏழை கர்ப்பிணிப் பெண்களுக்கு ரூ.6,000/– நிதி உதவி வழங்கப்படுகிறது. இதுவரை 14,37,170 கர்ப்பிணித் தாய்மார்களுக்கு ரூ.706.10 கோடி நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

★ கிராமப்பகுதிகள் மற்றும் நகரப்பகுதிகளில், மக்களின் நோய்களை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து உரிய சிகிச்சை அளிக்க வருமுன் காப்போம் திட்டம் மீண்டும் செயல்படுத்தப்படுகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் இதுவரை 10,239 முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. இந்த முகாம்களில் சுமார் 102.06 இலட்சம் மக்கள் இதுவரை பயனடைந்துள்ளனர்.

★ 110 ஆரம்ப சுகாதார நிலையங்கள் புதியதாகத் தொடங்கப்பட்டுள்ளன. 125 ஆரம்ப சுகாதார நிலையங்கள் புதிதாக முப்பது படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையங்களாக ரூ.78.49 கோடி செலவில் மேம்படுத்தப்பட்டுள்ளன. மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களில் சிறப்பு மருத்துவர்கள் நியமனம் செய்யப்பட்டு நவீன மருத்துவ கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. 52 அரசு வட்ட மருத்துவமனைகளில் பல் பிரிவுகள் புதிதாகத் தொடங்கப்பட்டு பல் டாக்டர்கள், பல் டெக்னீசியன்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். புதிய உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

★ ஏழை எளிய குடும்பங்களைச் சார்ந்த சிறார்கள் மற்றும் பள்ளி மாணவர்களை இதய நோய்களிலிருந்து காத்திட 'இளம் சிறார் இதய அறுவை சிகிச்சைத் திட்டம்' மற்றும் 'பள்ளிச்சிறார் இதய அறுவை சிகிச்சைத் திட்டம்' என்னும் இரண்டு திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. இந்த இரண்டு திட்டங்களின் கீழ் புகழ்பெற்ற 24 தனியார் மருத்துவமனைகளில் 2,146 ஏழைக் குழந்தைகளுக்கு இதய அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. இதற்காக அரசு 12.75 கோடி ரூபாய் தனியார் மருத்துவமனைகளுக்கு வழங்கி உள்ளது. சென்னை எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனையில் கடந்த ஓராண்டில் மட்டும் 500 குழந்தைகளுக்கு இலவசமாக இதய அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது.

★ வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் நோயாளிகள் அங்கீகரிக்கப்பட்ட தனியார் மருத்துவமனைகளில் உயிர் காக்கும் அறுவை சிகிச்சையை செய்து கொள்ள 6,275 நோயாளிகளுக்கு ரூபாய் 17.38 கோடி நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

★ கிராமப்புற ஏழை மக்களுக்கு அவசர காலங்களில் உடனடி மருத்துவ வசதி கிடைக்கச் செய்திட வேண்டும் என்ற முனைப்பில் அவசர கால மருத்துவ ஊர்தி சேவைத் திட்டம் இ.எம்.ஆர்.ஐ. நிறுவனத்துடன் இணைந்து ரூ.32 கோடி செலவில் செயல்படுத்தப்படுகிறது. அவசர காலம் மற்றும் விபத்து நேரத்தில் தொலைபேசி எண் 108–க்கு தொடர்பு கொண்டால் ஆம்புலன்ஸ் உடனடியாக வந்து அருகில் உள்ள அரசு மருத்துவமனை அல்லது தனியார் மருத்துவமனைகளில் அவர்களை அனுமதித்து அவசர சிகிச்சை உடனடியாக அளிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. 15.09.2008–ல் தொடங்கப்பட்ட இந்த திட்டத்தில் இதுவரை 35,877 நோயாளிகள் அரசு மருத்துவமனைகள் மற்றும் தனியார் மருத்துவமனைகளில் அவசர சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

★ அரசு மருத்துவமனைகளுக்கும், ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் ஏறத்தாழ ரூபாய் 350 கோடி செலவில் நவீன மருத்துவக் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. எம்.ஆர்.ஐ. ஸ்கேன்கள், 64 கூறுகள் சி.டி.ஸ்கேன்கள், லித்தோஸ்ட்ராப்ஸி, கலர் டாப்லர், செமி ஆட்டோ அனலைசர் கோபால்ட் தெரபி, லினியர் ஆக்ஸலலேட்டர் போன்ற நவீன மருத்துவக் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக அரசு மருத்துவமனைகளுக்கும் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் வரும் நோயாளிகளின் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்துள்ளது.

★ ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒரு நடமாடும் மருத்துவக் குழு என்ற அளவில் 385 நடமாடும் மருத்துவக் குழுக்கள் ரூபாய் 37.18 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ளன. இந்த மருத்துவக் குழுவிற்கு ஒரு ஆம்புலன்ஸ் வழங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மருத்துவக் குழுவிலும் மருத்துவர், செவிலியர், உடனாளர் மற்றும் ஓட்டுநர் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

★ விழுப்புரம், தருமபுரி, திருவாரூர், பெரம்பலூர் மற்றும் சிவகங்கை ஆகிய ஐந்து மாவட்டங்களில் புதிய மருத்துவக் கல்லூரி தொடங்க ஆணை பிறப்பிக்கப்பட்டு, தருமபுரி அரசு மருத்துவக் கல்லூரி கடந்த ஆண்டு தொடங்கப்பட்டது. மற்ற மருத்துவக் கல்லூரிகள் நடப்பு ஆண்டில் தொடங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதற்காக அரசு ரூபாய் 337.16 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

- ★ ஏறத்தாழ 1.25 கோடி குடும்பங்கள் பயன்பெறும் வகையில், 51 நோய்களுக்கு ஒரு இலட்சம் ரூபாய் வரையில் அரசு மற்றும் தனியார் மருத்துவமனையில் இலவச உயர் சிகிச்சை செய்து கொள்ள வகை செய்யும் 'உயிர் காக்கும் உயர் சிகிச்சைக்கான முதல்வர் கலைஞரின் காப்பீட்டுத் திட்டம்' அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதற்காக ரூபாய் 200 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வரும் ஜூன் மாதம் முதல் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.
- ★ சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையினை பல சிறப்புப் பிரிவுகள் கொண்ட மருத்துவமனையாக ரூபாய் 150 கோடி செலவில் தரம் உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கட்டடப் பணிகள் முடியும் தருவாயில் உள்ளது. மைய அரசு ரூபாய் 100 கோடியும், மாநில அரசு ரூபாய் 50 கோடியும் இதற்காக நிதி ஒதுக்கி உள்ளன.
- ★ மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையை பல சிறப்புப் பிரிவுகள் கொண்ட மருத்துவமனையாக மைய அரசின் நிதி உதவியுடன் ரூபாய் 150 கோடி செலவில் தரம் உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
- ★ ஸ்டான்லி அரசு மருத்துவமனை ரூ. 100 கோடி செலவில் மேம்படுத்தப்படுகிறது. கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனை, செங்கல்பட்டு அரசு மருத்துவமனை, மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனை, சென்னை அரசு பல் மருத்துவமனை, எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனை, ராயப்பேட்டை அரசு மருத்துவமனை, திருவல்லிக்கேணி அரசு கஸ்தூரிபா காந்தி மருத்துவமனை, மற்றும் எழும்பூர் அரசு மகப்பேறு மருத்துவமனைகளில் கூடுதல் கட்டடங்கள் ரூ 300 கோடி மதிப்பீட்டில் கட்டப்படுகின்றன.
- ★ தமிழ்நாடு சுகாதாரத் திட்டத்தில் முதல் கட்டமாக 5 மாவட்டங்களில் 35 அரசு மருத்துவமனைகளில் ரூபாய் 45 கோடி மதிப்பீட்டில் கூடுதல் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. இரண்டாம் கட்டமாக 191 அரசு மருத்துவமனைகளில் சுமார் 196 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டடங்கள் கட்டப்படுகின்றன.
- ★ தமிழ்நாட்டில் எய்ட்ஸால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கான அறக்கட்டளை ரூ.5 கோடி செலவில், அமைக்கப் பட்டுள்ளது.
- ★ சென்னை அரசு பொது மருத்துவமனை, ஸ்டேன்லி மருத்துவக்கல்லூரி, கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி, குழந்தைகள் நல மருத்துவமனை, தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி, கோவை மருத்துவக் கல்லூரி, திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி, இராஜாஜி மருத்துவக் கல்லூரி, எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைகழகம் ஆகியவற்றில் 8 இரத்தக் கூறுகளைப் பிரிக்கும் மையங்கள் நிறுவப்பட்டுள்ளன.
- ★ எச்.ஐ.வி.யுடன் வாழும் மக்களின் பரிசோதனையைத் துரிதப்படுத்துவதற்காக தேனி, கோவை, திருச்சி, தருமபுரி, தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் சென்னை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை ஆகியவற்றில் கூடுதலாக 7 புதிய CD–4 கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன.
- ★ திருவாரூர், நாகப்பட்டினம், இராமநாதபுரம், சிவகங்கை, ஈரோடு, புதுக்கோட்டை, நீலகிரி, செங்கல்பட்டு ஆகிய மாவட்ட தலைமை மருத்துவமனைகள் மற்றும் சென்னை ஸ்டேன்லி மருத்துவமனை ஆகிய இடங்களில் கூடுதலாக 9 கூட்டு மருத்துவ சிகிச்சை மையங்கள் நிறுவப்பட்டுள்ளன.
- ★ தமிழகத்தில் மட்டும் தான், அனைத்து எச்.ஐ.வி. / எய்ட்ஸுடன் வாழும் 32 ஆயிரம் பேருக்கு ஜூன் 2007 முதல் மக்களுக்கு கூட்டு மருத்துவ சிகிச்சை, மருத்துவத்துடன் சத்துணவு வழங்கப்பட்டு வருகிறது.
- ★ சுனாமியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் உள்ள 161 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு அதி நவீன பச்சிளங் குழந்தைப் பராமரிப்புக் கருவிகள் ரூ.1.15 கோடி செலவில் யூனிசெப் நிறுவன உதவியுடன் வழங்கப்பட்டுள்ளன. நாகை, கடலூர், காஞ்சிபுரம் மாவட்டங்களுக்கு ரூ.90 இலட்சம் செலவில் ஆம்புலன்ஸ் வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன.
- ★ மஞ்சள் காமாலை நோயைத் தடுக்கும் பொருட்டு ஒரு வயதிற்குட்பட்ட அனைத்துக் குழந்தைகளுக்கும் ரூ.7.2 கோடி செலவில் ஹெப்படைட்டிஸ்–பி தடுப்பூசி மருந்து வழங்கும் திட்டம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டு அனைத்து மாவட்டங்களிலும் சிறப்பாகச் செயல்படுத்தப்படுகிறது.
- ★ 110 அரசு மருத்துவமனைகள் 24 மணிநேர ஒருங்கிணைந்த மகப்பேறு மற்றும் சிசுகவனிப்பு அவசர சிகிச்சை மருத்துவமனைகளாகத் தரம் உயர்த்தப்பட்டு குழந்தை மருத்துவர், மகப்பேறு மருத்துவர், மயக்கவியல் மருத்துவர் மற்றும் செவிலியர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். நவீன கருவிகள் மற்றும் தளவாடங்கள் ரூ.17.5 கோடி செலவில் இந்த மருத்துவமனைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், தொலைதூர கிராமப்புற மக்களுக்கு தரமான மருத்துவ வசதிகள் அளித்திட 100 நடமாடும் மருத்துவக் குழு ஊர்திகளை கொடியசைத்துத் தொடங்கிவைத்தார். உடன் மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள், மாண்புமிகு மத்திய தொலைத்தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு.ஆ.ராசா மற்றும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம் ஆகியோர் உள்ளனர்.(24–12–2008)

★ 1,421 ஆரம்ப சுகாதார நிலையங்கள், 264 அரசு மாவட்ட மற்றும் வட்ட மருத்துவமனைகள், 14 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் ஆகியவற்றில் மருத்துவப் பயனாளிகள் நலச்சங்கங்கள் அமைக்கப்பட்டு ஒவ்வொரு வருடமும் ரூ.20.81 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது.

★ 12,618 கிராம ஊராட்சிகளில் கிராம சுகாதாரம் மற்றும் குடிநீர் துப்புரவுக் குழுக்களும், 561 நகரப் பஞ்சாயத்துகளில் 2,540 கிராம சுகாதாரம் மற்றும் குடிநீர் துப்புரவுக் குழுக்களும் அமைக்கப்பட்டு சுகாதார நடவடிக்கைகள் மேற்கொள்ள ஒவ்வொரு குழுவிற்கும் ஆண்டிற்கு ரூ. 10,000 நிதி வழங்கப்பட்டுள்ளது.

★ 2001 ஆம் ஆண்டில் தமிழகம் எச்.ஐ.வி/எய்ட்ஸ் தாக்கம் அதிகம் உள்ள மாநிலமாக வகைப்படுத்தப்பட்டு, கருவுற்ற தாய்மார்களிடையே 1.13 சதவீதமாக காணப்பட்ட எச்.ஐ.வி/எய்ட்ஸ் தாக்கம் அரசு எடுத்த விழிப்புணர்வு மற்றும் தடுப்புப்பணிகளால் தற்போது 0.38 சதவீதமாகக் குறைந்துள்ளது. எச்.ஐ.வி பாதித்தோரின் எண்ணிக்கை வீழ்ச்சி அடைந்து சீராக நிலைநிறுத்தப் பட்டிருப்பது இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் மட்டும்தான்.

★ சென்றடைவதற்கு கடினமாக உள்ள கிராமங்களில் வசிக்கும் மக்களுக்குத் தேவையான எச்.ஐ.வி / எய்ட்ஸ் விழிப்புணர்வு சேவைகளை அவர்களது வாழ்விடத்திற்கே கொண்டு செல்ல 10 நடமாடும் வாகனங்கள் ரூ.46 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளன.

★ எச்.ஐ.வி/எய்ட்ஸால் பாதிப்புக்குள்ளான குழந்தைகளுக்கான சிறப்புமிகு மருத்துவ சேவைகளைச் செய்வதற்காக சென்னை எழும்பூர் அரசு குழந்தைகள் நல மருத்துவமனையில் ரூ.32 இலட்சம் செலவில் ஒரு முப்பெரும் மையம் தொடங்கப்பட்டுள்ளது.

★ மருந்துகள் தகவல் மற்றும் மருந்தியல் விழிப்புணர்வு மையம் 7.12.2007 அன்று தொடங்கப்பட்டு, பொதுமக்களுக்கு பயன்படும் வகையில் அனைத்து மருந்துகள் குறித்த எல்லாவிதத் தகவல்களையும் வழங்குகிறது. இதில், மருந்துகளின் தன்மை, அதைப் பயன்படுத்தும் முறை மற்றும் அளவு, ஒவ்வாமை போன்ற விவரங்கள் தெரிவிக்கப்படும். இந்த மையம் பொதுமக்கள், மருத்துவர்கள், மருத்துவமனைகளில் மருந்துகள் ஏற்படுத்திய தேவையற்ற பக்கவிளைவுகளை பற்றிய தகவல்களைச் சேகரிக்கும். இத்தகைய மையம் இந்தியாவிலேயே முதன்முதலாக தமிழகத்தில்தான் தொடங்கப்பட்டுள்ளது என்பது இதன் சிறப்பம்சமாகும்.



# புதிய தொழிற்பேட்டைகள்

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடைப் பராமரிப்புத்துறை அமைச்சர்
திரு. பொங்கலூர் நா.பழனிச்சாமி அவர்கள்

★ முதலீட்டு மானியமாக 2006–07, 2007–08ஆம் ஆண்டுகளில் ரூ.4.51 கோடியும், 2008–09ஆம் ஆண்டில் ரூ.19.95 கோடி 402 நிறுவனங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

★ தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் (டாம்கோ) மூலம் 2008–09ஆம் ஆண்டில் 12 ஆட்டோ தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டு 623 சிறுபான்மையின ஆட்டோ ஓட்டுநர்களுக்கு ரூ.7 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

★ சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் வளர்ச்சிக்கான கொள்கைகள் மற்றும் திட்டங்களைச் சேர்த்து ஆய்வு செய்யும் நோக்கத்துடன் தனி வாரியம் அமைக்கப்பட்டது.

★ பல்வேறு தொழிற்பேட்டைகளில் சிறு மற்றும் குறு தொழில் நிறுவனங்களுக்கு 38 தொழிற் கூடங்களும் 1,416 மேம்படுத்தப்பட்ட தொழில் மனைகளும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

★ தமிழ்நாட்டில் உள்ள 17 மூலப் பொருள் கிடங்குகள் வாயிலாக 40,560 மெ.டன்கள் அளவுள்ள பல்வேறு மூலப்பொருட்கள் ரூ.16,724 இலட்சம் மதிப்பிற்கு சிறு மற்றும் குறு தொழில் நிறுவனங்களுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

★ திருச்சி மாவட்டத்தில் வாழவந்தான்கோட்டை பகுதி 2 தொழிற்பேட்டை ரூ.113.50 லட்சம் செலவிலும், மயிலாடுதுறை தொழிற்பேட்டை ரூ.58 இலட்சம் செலவிலும் அமைக்கப்பட்டுள்ளன.

★ 12 புதிய தொழிற்பேட்டைகள் ரூ.1,474.20 இலட்சம் செலவில் அமைக்கப்படுகின்றன.

★ கோ.புதூர் (மதுரை), சேலம், ஈரோடு, அரியமங்கலம் (திருச்சி), தேனி மற்றும் தருமபுரி தொழிற்பேட்டைகளில் உட்கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகள் ரூ.215.50 இலட்சம் செலவில் முடிக்கப்பட்டு, காஞ்சிபுரம், தஞ்சாவூர், நாகப்பட்டினம் ஆகிய தொழிற்பேட்டைகளில் உட்கட்டமைப்புப் பணிகள் ரூ.104.20 இலட்சம் செலவில் நடைபெறுகின்றன.

★ திருச்செங்கோடு, கிருஷ்ணகிரி, புதுக்கோட்டை, நாமக்கல், திண்டுக்கல், கடலூர், பிள்ளையார்பட்டி, கோணம், வடலூர், திருநெல்வேலிப் பேட்டை, இராணிப்பேட்டை, விருதுநகர் தொழிற்பேட்டைகளில் உட்கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகள் ரூ. 3 கோடியே 77 இலட்சம் செலவில் முடிக்கப்பட்டுள்ளன; கரூர், காட்பாடி, திருவண்ணாமலை, மாத்தூர், கப்பலூர், திருமுல்லைவாயில், வாழவந்தான் கோட்டை–பகுதி 3 ஆகிய தொழிற்பேட்டைகளில் ரூ5 கோடியே 67 இலட்சம் செலவில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

★ கிண்டி தொழிற்பேட்டையில் ரூ.27.94 கோடி செலவில், சாலை மேம்பாட்டுப் பணி, சாலை மின் விளக்கு அமைக்கும் பணி, மழைநீர் வடிகால் வசதி, குறுக்கு கழிவுக் குழாய்ப் பணிகள் மற்றும் இதரப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

★ சென்னை தானியங்கி துணைத் தொழில்கள் உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிறுவனம் (CAAIIUC) மூலம், அம்பத்தூர், திருமுடிவாக்கம் மற்றும் திருமழிசை தொழிற்பேட்டைகளில் திருத்தியமைக்கப்பட்ட திட்டச் செலவு ரூ.61.10 கோடி மதிப்பில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.



# முட்டை உற்பத்தி அதிகரிப்பு

**மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடைப் பராமரிப்புத்துறை அமைச்சர்**
**திரு. பொங்கலூர் நா.பழனிச்சாமி அவர்கள்**

★ ஸ்டைலோ, காராமணி போன்ற விதைகள் அடங்கிய 73,371 சிறு பைகள் விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டன. மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், ரூ.75.88 இலட்சம் செலவில் 1,474 ஏக்கர் நிலம் பசுந்தீவன உற்பத்திக்குக் கொண்டுவரப்படுகிறது.

★ உலக வங்கி நிதியுதவியுடன் கூடிய அவசர சுனாமி மறு சீரமைப்புத் திட்டத்தின்கீழ் இரண்டு தீவன வங்கிகள் கடலோர மாவட்டங்களான காஞ்சிபுரம் மற்றும் தஞ்சாவூரில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

★ செட்டிநாட்டில் உள்ள மாவட்ட கால்நடைப் பண்ணையில் 50 ஏக்கர் நிலம் ரூ.19.45 இலட்சம் செலவில் முல்லை மேய்ச்சல் நிலமாகச் சீரமைக்கப்பட்டது.

★ ஒசூர் மற்றும் செட்டிநாட்டில் உள்ள மாவட்ட கால்நடைப் பண்ணையில் பசுந்தீவனத்தைச் சேமித்து வைக்க தலா 5 சைலோ உரக்குழிகள் ரூ.20.55 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளன.



மாண்புமிகு ஊரக தொழில்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர்
திரு.பொங்கலூர் நா.பழனிச்சாமி அவர்கள், கால்நடை பராமரிப்புத்துறையில் கால்நடை ஆய்வாளர் பயிற்சி முடித்த 67 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.
அரசு உயர் அலுவலர்கள் உடன் உள்ளனர். (6–7–2009)

★ ரூ.37.59 இலட்சம் செலவில் ஒரத்தநாடு மற்றும் அபிஷேகப்பட்டி, மாவட்ட கால்நடைப் பண்ணைகளில் பசுந்தீவன உற்பத்தியைப் பெருக்குவதற்கு ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்தல், தெளிப்புநீர்ப் பாசனக் கருவிகள் நிறுவுதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டன. ஒசூர் மற்றும் செட்டிநாடு கால்நடைப் பண்ணைகளில் பசுந்தீவனத்தினைச் சேமித்து வைத்திட தலா ஐந்து சைலோ குழிகள் ரூ.20.55 இலட்சங்கள் செலவில் அமைக்கப்பட்டுள்ளன.

★ மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் காஞ்சிபுரம் மாவட்டம் திருக்கழுக்குன்றத்தில் 18.01.2000 அன்று தொடங்கப்பட்ட கால்நடைப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் இதுவரை 13,695 கால்நடை மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டன. ரூ.410.85 இலட்சம் மதிப்பீட்டில் மருந்துகள் வழங்கப்பட்டு கால்நடைகளுக்கு இலவசமாக சிகிச்சை அளிக்கப்பட்டன. மொத்தம் 168.47இலட்சம் கால்நடைகளும் 35.13 இலட்சம் விவசாயிகளும் இம்முகாம்களினால் பயனடைந்தனர்.

★ 55 நடமாடும் கால்நடை மருந்தகப் பிரிவுகளுக்கு புதிய உபகரணங்கள் ரூ.15.40 இலட்சம் செலவில் வாங்கி வழங்கப்பட்டன.

★ ரூ.88.76 இலட்சம் செலவில் கிருஷ்ணகிரி, நாகப்பட்டினம், கரூர், விருதுநகர், தருமபுரி மாவட்டங்களில் புதிய கால்நடைநோய்த் தடுப்புப் புலனாய்வுப் பிரிவு துவக்கப்பட்டது.

★ தொலைத் தொடர்பு வசதிகள் இல்லாத கால்நடை நிலையங்களுக்கு ரூ. 28.55 இலட்சம் செலவில் 515 கைபேசிகள் வழங்கப்பட்டுள்ளன.

★ ரூ.20 இலட்சம் செலவில் 200 கால்நடை கிளை நிலையங்களுக்கு பழைய உபகரணங்களை மாற்றி புதிய உபகரணங்கள் வழங்கப்பட்டன.

★ ரூ.38 இலட்சம் செலவில் இராணிப்பேட்டை, கோழி நோய் ஆய்வுக் கூடப் பிரிவுக்கு இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களும் வழங்கப்பட்டன.

★ 51 புதிய கால்நடை மருந்தகங்கள், 30 கிளை நிலையங்கள், 55 பார்வை கிளை நிலையங்கள் ரூ. 218.24 இலட்சம் செலவில் தொடங்கப்பட்டன.

★ 2008–2009–ஆம் ஆண்டில் 888 கால்நடை கிளை நிலையங்களைத் தரம் உயர்த்தப்பட்ட கால்நடை நிலையங்களாக மாற்றி, அதனில் கால்நடை ஆய்வாளர் நிலை1–க்குப் பதிலாக மருத்துவப் பட்டம் பெற்ற இளநிலை கால்நடை உதவி மருத்துவர்களை நியமனம் செய்ய அரசு முடிவு செய்துள்ளது. இதனில் முதல் கட்டமாக 444 கால்நடை கிளை நிலையங்களை தரம் உயர்த்த ஆணையிடப்பட்டுள்ளது. மேலும் 444 கால்நடை கிளை நிலையங்களை தரம் உயர்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

★ திருநெல்வேலி மாவட்டம் அம்பாசமுத்திரம் கோட்டத்தைச் சார்ந்த மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை நிதியிலிருந்து தக்கலையை மையமாகக் கொண்டு நடமாடும் கால்நடை மருத்துவ ஊர்திப் பிரிவிற்கு (Veterinary Mobile Unit) முதற்கட்டமாக வாகனம் பெறப்பட்டு இயங்கி வருகிறது.

★ அடையாறில், செல்லப் பிராணிகளுக்கு மருத்துவப் பிரிவு தொடங்கப்பட்டு. ரூ.20 இலட்சம் செலவில் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

★ ஒரத்தநாடு மற்றும் ஒசூர் மாவட்ட கால்நடைப் பண்ணைகளில் ரூ.10.68 இலட்சம் செலவில் அறையணைகள் மற்றும் கணினி வாங்கி வழங்கப்பட்டது.

★ நாமக்கல் மாவட்டத்தில் மண்டல இணை இயக்குநர் அலுவலகம் மீண்டும் இயங்கச் செய்யப்பட்டது.

★ சிறு பிராணிகளுக்கான நுழைவுக்கட்டணமும் மற்றும் சிகிச்சைக் கட்டணமும் 9.1.2007 முதல் ரத்து செய்யப்பட்டன.

★ செம்மறி ஆடுகளுக்கு ஏற்படும் நீலநாக்கு நோய் பரப்பும் நோய் நுண்மப் பரப்பியைத் தடுத்திட நுண்கிருமித் தடுப்பு நடவடிக்கை திட்டத்தின்கீழ் ரூ.15.00 இலட்சம் செலவில் மருந்து தெளிப்பான்கள் மற்றும் வேதிப்பொருட்கள் திருநெல்வேலி, தூத்துக்குடி, மதுரை, திண்டுக்கல் மற்றும் ஈரோடு ஆகிய மாவட்டங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

★ ரூ. 21.76 இலட்சம் செலவில் தருமபுரி மாவட்டத்தில் ஒரு புதிய கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவு தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

★ 60 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு புல் வெட்டும் கருவி வழங்கியும் வெள்ளாடுகளின் தரத்தை உயர்த்திட மரபுவழி செயற்கை முறை கருவூட்டல் முன்னோடித் திட்டத்தைச் செயல்படுத்திடவும், சிறு விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திட செம்மறி ஆடுகள் வளர்ப்புத்திட்டத்திற்கும் புறக்கடை கோழி வளர்ப்பிற்கும், ஆடுகளில் ஏற்படும் நீலநாக்கு நோயைப் பரப்பும் நோய் நுண்மப் பரப்பியைக் கட்டுப்படுத்திடவும், 16 நோய் புலனாய்வு பிரிவு தகவல் தொடர்பிற்கும் மாவட்ட கால்நடைப் பண்ணைகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்திடவும் ரூ.134.16 இலட்சம் செலவில் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

★ தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தில் காஞ்சிபுரம், நாகப்பட்டினம், சிவகங்கை, தஞ்சாவூர், திருச்சி, ஈரோடு, தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய 8 மாவட்டங்களுக்கு ரூ.96 இலட்சம் செலவில் 8 நடமாடும் பரிசோதனைக்கூட ஊர்திகளும், அவற்றில் பொருத்திட உபகரணங்கள் வாங்கிட ஆணையிடப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

★ 63 உப வடிநிலங்களில் கால்நடைப் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டு, முதல்கட்டமாக ரூ.39.38 இலட்சம் செலவில் 9 உப வடிநிலங்களில் செயல்படுத்தப்பட்டது.

★ இதுவரை, 3 இலட்சம் செயற்கைமுறை கருவூட்டல்கள், 1,490 விவசாயிகள் விழிப்புணர்வுக் கூட்டங்கள், 1,380 மலடு நீக்க மற்றும் மருத்துவ சேவை முகாம்கள் நடத்தப்பட்டு உள்ளன. 5,000 கால்நடைகளுக்கு தாதுகலவை இலவசமாக வழங்கப்பட்டது.

★ கால்நடை மருந்தகங்கள், சிகிச்சைக் கூடங்கள், உள்நோயாளிப் பிரிவு மற்றும் நுண்கதிர் பிரிவு என 371 கட்டடங்கள் ரூ.43.80 கோடியில் கட்ட திட்டமிடப்பட்டு இதுவரை 358 கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டு, ஏனைய கட்டடங்கள் முடியும் தருவாயில் உள்ளன.

★ ஒசூர், உதகமண்டலம், ஈச்சங்கோட்டை ஆகிய கால்நடைப் பண்ணைகளில் பொலி காளைக் கொட்டகைகள் கட்டவும், ஒசூர், உதகமண்டலம் கால்நடைப் பண்ணைகளில் தரக் கட்டுப்பாடு ஆய்வுக் கூடங்கள் கட்டும்பணி ரூ.332.50 இலட்சம் செலவில் நடைபெறுகின்றன.

★ உலக வங்கி நிதியுதவியுடன் கூடிய அவசர சுனாமி மறு சீரமைப்புத் திட்டத்தின்கீழ் ரூ.866.70 இலட்சம் செலவில் 113 கால்நடை நிலையங்களும், விரிவாக்க நிலையங்களும் கட்டப்படுகின்றன. இந்நிலையங்கள் செயல்படத் தேவையான உபகரணங்களும் அறையணிகளும் வழங்கப்படுகின்றன. மேலும் கால்நடை வளர்ப்பில் ஆர்வமுள்ள 82 இளைஞர்களுக்கு முதலுதவி, குடற்புழு நீக்கம், தடுப்பூசி மற்றும் இனப்பெருக்கம் பற்றிய பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. மேலும், 10,000 விவசாயிகளுக்கு கால்நடை வளர்ப்பு பற்றிய பயிற்சிகளும் அளிக்கப்பட்டன.

★ பறவைக் காய்ச்சல் நோய் நம் மாநிலத்தில் கண்டறியப்படாவிட்டாலும், பல்வேறு தடுப்பு மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ள மாநில மற்றும் மாவட்ட அளவில் உயர்மட்டக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன், 200 துரித செயல்பாட்டுக் குழுக்களும் அமைக்கப்பட்டு, பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன.

★ வாரந்தோறும் வர்த்தக கோழிப் பண்ணைகள், குஞ்சு பொரிப்பகங்கள், புறக்கடை கோழிகளில் பறவைக் காய்ச்சல் நோய் அறிகுறிகள் ஏதேனும் தென்படுகின்றனவா என்று கண்காணிக்கப்படுகின்றன. பறவைகளை அழிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டால், விவசாயிகளுக்கு நட்டஈடு வழங்குவதற்காக அரசு ரூ.50 இலட்சம் ஒதுக்கியுள்ளது.

★ நிவாரண நடவடிக்கையாக மத்திய அரசின் ஒதுக்கீடான 1,21,500 மெ.டன் மக்காச்சோளம் மாநிலத்தின் கோழிப் பண்ணையாளர்களுக்கு மானிய விலையில் விநியோகிக்கப்பட்டது.

★ பறவைக்காய்ச்சல் நோய்க்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள ரூ.36 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு உபகரணங்கள் மற்றும் கிருமிநாசினிகள் வாங்கப்பட்டன.

★ பறவைக் காய்ச்சல் தடுப்பு முன்னெச்சரிக்கை மற்றும் தயார் நிலை குறித்த பயிற்சிக்கு மத்திய அரசிடமிருந்து ரூ.85.33 இலட்சம் பெறப்பட்டு இதுவரை 1,442 கால்நடைப் பராமரிப்புத்துறை அலுவலர்கள் மற்றும் கால்நடை உதவிமருத்துவர்களுக்கும் 843 கால்நடை ஆய்வாளர்களுக்கும் 2,800 இதர துறைப் பணியாளர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

★ முட்டை உற்பத்தி 2006–07இல் 8,044 மில்லியனாகவும், 2007–08இல் 8,394 மில்லியனாகவும், 2008–09இல் 8,810 மில்லியனாகவும் உயர்ந்துள்ளது. அதேபோல் பால் உற்பத்தி 2006–07இல் 55.60 இலட்சம் மெட்ரிக் டன்னாகவும், 2007–08இல் 55.86 இலட்சம் மெட்ரிக் டன்னாகவும், 2008–09இல் 56.74 இலட்சம் மெட்ரிக் டன்னாகவும் மதிப்பிடப்பட்டுள்ளது. அதைப்போன்று ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு கிடைக்கக்கூடிய பாலின் அளவு 2006–07இல் 232 கிராம் ஆகவும், 2007–08இல் 233 கிராமாகவும் 2008–09இல் 235 கிராமாக உயர்ந்துள்ளது.

★ ஒரு ஆண்டுக்கு ஒரு நபருக்கு கிடைக்கும் முட்டைகளின் எண்ணிக்கை 2006–07இல் 123 ஆகவும் 2007–08இல் 128– ஆகவும் 2008–09இல் 133 ஆகவும் உயர்ந்துள்ளது.

### தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமை

★ 1982ஆம் ஆண்டு முதல், நடைமுறையில் இருந்து வந்த மாட்டின இனவிருத்திக் கொள்கை மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

★ தமிழகத்தில் உள்ள நான்கு உறைவிந்து உற்பத்தி நிலையங்களுக்கும், இந்திய அரசின் உறைவிந்து உற்பத்திக்குத் தேவையான குறைந்தபட்ச தர செயல்முறைகளின் அடிப்படையில் மிக முக்கிய, நவீன உபகரணங்களாகிய, நிரல் ஏற்ப உறைவிந்து உறைய வைக்கும் கருவிகள், ஒருங்கிணைந்த தானியங்கி விந்து குழல் நிரப்பி அடைத்து அச்சிடும் கருவிகள், டிஜிட்டல் போட்டோ மீட்டர்கள், பேஸ் காண்ட்ராஸ்ட் நுண்ணோக்கிகள், டிபரன்ஷியல் இன்டர்பியரன்ஸ் காண்ட்ராஸ்ட் நுண்ணோக்கிகள், உறைவிந்து குழல் மீது அச்சிடும் இங்க்ஜெட் ப்ரிண்டர்கள், ஆட்டோகிளேவ்கள், ஹாட் ஏர் ஓவன்கள் மற்றும் பிற கருவிகள் வாங்கி வழங்கப்பட்டு பலப்படுத்தப்பட்டுள்ளன.

★ உதகமண்டலம் மாவட்ட கால்நடைப் பண்ணையில், உறைவிந்து சோதனைக்கூடம் மற்றும் உறைவிந்து சேகரிக்கும் நிலைய கட்டுமானப் பணிகள் ரூ.40 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டு பலப்படுத்தப்பட்டுள்ளது.

★ ஈச்சங்கோட்டை அயலின கால்நடை பெருக்குப் பண்ணையில், உறைவிந்து சோதனைக்கூடம் மற்றும் உறைவிந்து சேகரிக்கும் நிலையம் ரூ.48 இலட்சம் செலவில் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு பலப்படுத்தப்பட்டுள்ளது.

★ 147 சுயமாக பணியாற்றும் கால்நடை மருத்துவப் பட்டதாரிகளுக்கும், (Self employed Veterinary graduates), 424 கிராமப்புற இளைஞர்களுக்கும், 87 ஓய்வு பெற்ற கால்நடை மருத்துவர்கள் மற்றும் கால்நடை ஆய்வாளர்களுக்கும் விவசாயிகளின் வீடுகளுக்கே சென்று, கால்நடைகளுக்கு செயற்கைமுறை கருவூட்டல் பணிகளை மேற்கொள்ள இடுபொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.

★ கால்நடைப் பராமரிப்புத் துறை மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்தைச் சார்ந்த, 2,200 நிலையான கால்நடை செயற்கைமுறை கருவூட்டல் நிலையங்கள், நிலையான மற்றும் நடமாடும் செயற்கைமுறை கருவூட்டல் நிலையங்களாக மாற்றப்பட்டுள்ளன.

★ அனைத்து செயற்கைமுறை கருவூட்டல் நிலையங்களிலும் திரவ நைட்ரஜன் விநியோகம் மற்றும் இருப்பு, சீராகவும், தங்குதடையின்றியும் வழங்க ஏதுவாக 3,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட திரவ நைட்ரஜன் சேமிப்புக் கொள்கலன்கள், தமிழ்நாட்டில் கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, சேலம், வேலூர், தருமபுரி, மதுரை, திருநெல்வேலி, திருவண்ணாமலை, ஈரோடு, சென்னை ஆகிய 10 இடங்களில் நிறுவப்பட்டுள்ளன.

★ தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமையினால், 510 கால்நடை மருத்துவர்களுக்கு சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியிலும், கால்நடை பராமரிப்புத் துறையைச் சார்ந்த 300 கால்நடை ஆய்வாளர்களுக்கு ஈச்சங்கோட்டை, அயலின கால்நடை பெருக்குப் பண்ணையிலும் புத்தாக்கப் பயிற்சி வழங்கப்பட்டது. மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றிய பயிற்சி நிலையங்களிலும், புதுக்கோட்டை மண்டல ஆராய்ச்சி மையத்திலும், 250 கிராமப்புற இளைஞர்களுக்கு செயற்கைமுறை கருவூட்டல் அடிப்படை பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் மூலம் 369 கிராம அளவிலான பணியாளர்களுக்குப் பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளது.

★ கால்நடைப் பராமரிப்புத் துறை மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்தைச் சார்ந்த 138 அலுவலர்களுக்கு, பிற மாநிலங்களிலுள்ள பயிற்சி நிறுவனங்களில் உயர் தொழில்நுட்பப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

★ தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்தின் மூலம் தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமையின் நிதி உதவியுடன், ஈரோட்டைத் தலைமையிடமாகக் கொண்டு, 8 மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களின்கீழ் செயல்படும், 160 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களின் மூலம் வம்சாவழி சோதனைத் திட்டம், 15 வருவாய் மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மூன்றாவது அணி சோதனை முடிக்கப்பட்டு முடிவுகள் எதிர்பார்க்கப்படுகின்றன. நான்காவது அணியில் 13 ஜெர்சி கலப்பின காளைகளும், ஐந்தாவது அணியில் 23 ஜெர்சி கலப்பின காளைகளும், ஆறாவது அணியில், 20 ஜெர்சி கலப்பின காளைகளும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

★ 2007–08ஆம் ஆண்டில், உள்நாட்டு பாரம்பரியமிக்க கால்நடை இனங்களான ஆலம்பாடி, பர்கூர், புலிகுளம் ஆகியவற்றைப் பாதுகாக்கும் பொருட்டு, தமிழ்நாடு கால்நடை அறிவியல் மற்றும் மருத்துவப் பல்கலைக்கழகம் மூலம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

★ விழுப்புரம், வேலூர், திருநெல்வேலி, ஈரோடு, சிவகங்கை மாவட்டங்களில் மாவட்ட அளவிலான தொழில்நுட்பக் கருத்தரங்குகள் நடத்தப்பட்டன.

★ 2006–07ஆம் ஆண்டில் 90,072 கால்நடைகளுக்கும் 2007–08ஆம் ஆண்டில் 1,19,032 கால்நடைகளுக்கும் 2008–09ஆம் ஆண்டில் 1.56 இலட்சம் கால்நடைகளுக்கும் காப்பீடு செய்யப்பட்டுள்ளன.

தாய்கோ வங்கி

TAICO BANK

# தமிழ்நாடு தொழிற் கூட்டுறவு வங்கி லிட்.

தாளமுத்து நடராசன் மாளிகை, நெ.1, காந்தி இர்வின் சாலை,
எழும்பூர், சென்னை – 600 008.
தொலைபேசி எண் : 044–28411643 / 28547952 தொலை நகல் : 044 –28416456
மின்னஞ்சல் : taico@dataone.in taico@vsnl.net இணையதளம் : www.taicobank.com

தாய்கோ வங்கி – 46 ஆண்டுகளாக மக்கள் சேவையில்

சேமிப்பு திட்டங்களுக்கு இதர வணிக வங்கிகளை விட அதிக வட்டி வழங்குகிறது.

- சேமிப்பு / நடப்பு கணக்கு
- வைப்புகளுக்கு காப்பீடு வசதி
- குறுகிய கால வைப்பு
- பாதுகாப்பு பெட்டக வசதி
- கணக்கு தொடர் வைப்பு
- ரொக்கச் சான்றிதழ்
- நீண்ட கால வைப்பு

மூத்த குடிமக்களுக்கு மேலும் 1%அதிக வட்டி

## தாய்கோ வங்கியின் கடன் திட்டங்கள்

### தொழிற் கூட்டுறவு சங்கங்களுக்கு

- காசுக்கடன்
- காலக்கடன்
- சரக்கீட்டுக்கடன்
- வங்கி உத்திரவாதம்
- நலிந்தோர்க்கு டாப்செட்கோ மற்றும் டாம்கோ மூலம் கடன்

### பண்ணை சாராக் கடன் திட்டங்கள்

- சிறுபோக்குவரத்து வாகனங்கள் வாங்க கடன்
- வீடு அடமானக்கடன்
- சிறுதொழில் மற்றும் குறுந்தொழில் முனைவோர்க்கு
- அதிக பற்றுக்கடன்
- காலக்கடன் மற்றும் நடைமுறை மூலதனக்கடன்
- நகைக்கடன்
- வீடுகட்டக் கடன்
- தேசிய சேமிப்பு பத்திரங்கள் / கிசான் விகாஸ் பத்திரங்கள் மீது கடன்

விரைவில் அறிமுகப்படுத்தவுள்ள புதிய கடன் திட்டங்கள் :
எஸ்.எம்.இ. ஸ்மார்ட் (SME Smart Scheme) மற்றும் எஸ்.எம்.இ.ஸ்மார்ட் பிளஸ் திட்டம்(SME Smart Plus Scheme) மூலமாக குறு மற்றும் குடிசைத் தொழில் நிறுவனங்களுக்கு வழங்கும் கடன் வசதிகள்

புதியதாக திறக்கப்பட உள்ள கிளைகள் :
விழுப்புரம், இராமநாதபுரம், பெரம்பலூர், நாகப்பட்டினம், ஒட்டன்சத்திரம் மற்றும் தூத்துக்குடி

நிறைவான பாதுகாப்பும், உத்திரவாதமும் பெற **தாய்கோ வங்கியில்** முதலீடு செய்வீர்!


தமிழரசு
R.N.I.No.21446/70 Regn.No.TN/ARD/48/09-11
& WPP No.TN/PMG(CCR)518/09-11
தமிழ்நாடு அரசு
சென்னை மாநக
மூன்றாண்டுகளில் முத்தான சாதனைகள்